பஞ்சாமிர்தம்

மணி 1 கதிர் 4

ஆவணி ௴ 1924,

rn211,r24Pm
N24.1.4
20 7648

04 No. M. 1913 16

EDITOR
A. MADHAVIAH

பத
அ. மாதவையா

Main Topics AUG 1924


The Work Before Us—
*S. Satyamurti Iyer*, M.L.C. 267

On Parody—*A. Madhaviah* 272

The Evil of Untouchability—
*V. A. Chidambara Pillay* 275

Our London Letter—
**Illustrated**-*M. Lakshmi Ammal*, Bedford College, London 279

Poetical Anthology—
*V. P. Subramania Mudaliar* 295

Land Tax—A Short Story—
*S. N. Iyer*, Bombay 297

Nature Study—**Illustrated** 301

**Padmavati Charitram**—Part-III.
**Illustrated**—*A. Madhaviah* 303

The Martial Spirit in Tamil Literature—*A. Madhaviah* 311

South Indian Games—
**Illustrated**—*P. ...yagadesier* 31[illegible]

Of Studies Bacon—Tanslated—
*V. Narayananier* 320

Western Civilisation—
*T. S. Ramachandran*, London 323

Extracts from Everywhere 328

Some Stars—Named by the Ancient Tamils—
*Rev. F. Kingsbury* 336

The Ancient Arctic Aryans—
*Kavyagunta Ganapathy Sastriar* 339

The Universities' Conference—
*P. A. Subrahmania Iyer* 344

Editorial Notes— 347

Reviews, Poems, Songs, Translations the World's Scriptures, Prize Competitions, etc.,


சந்தா விகிதம்

| | உள் நாடு | வெளி |
|---|---|---|
| 1 வருஷம் ரூ | 5 0 0 | 6 0 0 |
| 6 மாதம் ,, | 2 12 0 | 3 8 0 |
| தனிப்பிரதி ,, | 0 8 0 | 0 10 0 |

குறிப்பு

பத்திரிகைக்குச் சந்தாதார் சம்பாதிக்கத் தமிழ் நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை.

விளம்பர விகிதம்
பக்கத்துக்கு 10 ரூபா
½ பக்கம் ரூ 5—8—0
நீடித்தகுத்தகைவிகிதம் எழுதி அறிக.

## .ா ளு றை


எழுதியவர் பெய... பக்கம்.

வேண்டிய வேலை—ஸ்ரீ. S. ச...
... ஐயர், B.A., B.L., M.L.C., F.M... 267

...11

... தவையர், B.A. 272

ம தீங்கு—சித்திரைப் பரிசு பெற்ற
...ரை—ஸ்ரீ. வே. ஆ. சிதம்பரப்பிள்ளை 275

...தம்—படங்களுடன்—ஸ்ரீமதி
...ஷமி அம்மாள், (B. A., Hons.) லண்டன் 279

...ட்டு—ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய
முதலியார், G. B. V. C., 295

...ரு குட்டிக் கதை—S. N. ஐயர் 297

... ஆராய்ச்சி—படங்களுடன் 301

...சரித்திரம் மூன்றும் பாகம்—படங்களுடன்
ஸ்ரீ. அ. மாதவையர், B.A. 303

10. மறச்சுவை— ஷை ஷை ஷை 311

11. தென்னிந்திய விளையாட்டுக்கள்—படங்களுடன்—
ஸ்ரீ. P. V. ஜகதீசையர் 319

2. கல்வி—மொழிபெயர்ப்பு—ஸ்ரீ. வே. நாராயணையர்,
M. A., M. L. 320

13. புதிய கடவுள்—அமுதகவி 322

14. மேலையர்நாகரிகம்—ஸ்ரீ. தி. ச. ராமசந்திரன்,
(B. A., Hons.) 323

15. ஒரு முறையீடு —அமுதகவி 327

16. பலதுறைப் பொறுக்கு மணிகள் 328

17. மதிப்புரை— 335

18. பண்டைத்தமிழர் பெயரிட்ட வெள்ளிகளிற் சில—
ரெவ். F. கிங்ஸ்பெரி, B. A. 336

19. விகட விநோத விதூஷக வினு விடை 338

20. உத்தரதுருவத்திலிருந்த பூர்வீக ஆரியர்கள்—
ஸ்ரீ. காவியகண்ட கணபதி சாஸ்திரிகள் 339

21. சர்வ சமய சமரச தர்சநி—19–26 343

22. இந்திய சர்வகலாசாலைகளின் கூட்டம்—
ஸ்ரீ. பி. எ. சுப்பிரமணிய ஐயர், B. A., L. T., 344

23. பத்திராதிபர் குறிப்புக்கள்— 347


---

குறிப்பு—இந்தக் காசில் 84 பக்கங்களும் 16 சித்திரப்படங்களும் வேறு பல அலங்காரங்களும் உள்ளன.

# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன மானுட வாழ்வில் இலை.

மாலை–I ஆடி—1924 காசு-4


1 - AUG 1924

## இனி நாம் செய்ய வேண்டிய வேலை

ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி ஐயர், B.A., B.L., M.L.C., F.M.U., சென்னை

நமது நாடு கூடிய சீக்கிரத்தில் ஸ்வராஜ்யம் அடைய வேண்டுமென்று உண்மையாய் நம்பி, அதற்காக அவரவர்கள் தம்மாலியன்ற மட்டும், பிறருக்கு சாஸ்திரம் சொல்வதோடு நில்லாமல், உழைக்கத் தயாராயிருக்கின்ற இந்தியர்கள், ராஜீயத் துறையில் என்ன செய்ய வேண்டும், என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி, இவ்வியாசத்தில் எனக்குத் தெரிந்த சில யோசனைகளைச் சொல்லுகின்றேன். ராஜீயத் துறையில், கேவலம் புத்தி பூர்வகமாக மனோராஜ்யம் செய்து, நாமெல்லோரும் ஏதாவது பெரிய காரியத்தைச் செய்தால் நமக்கு ஸ்வராஜ்யம் தானாகக் கிடைத்து விடுமென்று ஆகாயக் கோட்டைகள் கட்டுவது, பேதைமையாகும். தற்காலத்தில் நம் நாட்டார்கள் ஸ்வபாவத்தையும், அவர்களுக்குள்ளிருக்கும் ராஜீய அறிவின்மையையும், தேசபக்திக் குறைவையும், சுய நலப்பற்றையும், ஜாதி மத பேதங்களாலுண்டாகும் சண்டைகளையும், நம்மிடமிருந்தே நாம் அவைகளை மறைத்து கொள்[illegible] இட்ட பொருள் ஏவல் எல்லாவற்றையும் சீர் [illegible] பார்த்து, [illegible] நாட்டில் பெரும்பாலோர் [illegible]வழியில் தானாகச் [illegible]ல்வார்கள், அல்லது

நம்முடைய பிரசாரத்தினால் எந்த வழியில் சுமார் 2,3 வருஷங்களுக்குள்ளாவது அவர்களைத் திருப்ப [illegible]மென்று யோஜித்துப்பார்த்து, அவ்வழியைக் [illegible] பிடிக்குமாறு நம்முடைய ஜனங்களுக்குச் சொ[illegible] தான், நாம் ஸ்வராஜ்ய மடைவதற்கு ஏற்ற வழியா[illegible]

உண்மை இப்படியிருக்க, சமீபத்தில் ஆமதபாத் நகரத்தில் கூடிய எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியார், நம்முடைய நாட்டின் நிலைமையைச் சிறிதேனும் அறிந்து கொள்ளாமல், ஆகாயத்தில் பறப்பவர்கள் போல், சில தீர்மானங்கள் செய்திருப்பது, நம் நாட்டின் துரதிர்ஷ்டமே.

அவர்களுடைய முதல் தீர்மானம் என்னவெனில், காங்கிரஸ் பிரதிநிதி ஸ்தாபனங்களின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும், நாள் தோறும் குறைந்தது அரை மணி நேரமாவது ராட்டினத்தில் நூல் நூற்க வேண்டும்; அப்படி நூற்கத் தவறினால், தங்கள் ஸ்தானங்களை இழப்பார்கள் என்ற தீர்மானத்தின் பாகத்தை, சில நாஸ்தீகர்கள் மீது தயவு கூர்ந்து, தாத்காலிகமாக நிறுத்தி [illegible]ளூர்கள். நம் நாட்டில் உதித்த பெரிய மதங்களெல்லாம், இம்மாதிரி மூடபக்தி வழியில் சென்றுதான் கெட்டுப் போயிருக்கின்றன. நம் நாடு முன்னேற்ற மடைவதற்கு, நாமெல்லோரும் சுதேசி விரதத்தைக் கைப்பற்றுவது இன்றியமையாதது என்று தாராளமாய் ஒப்புக் கொள்ளலாம். துணிகள் மாத்திரமல்ல, மற்ற எல்லாச் சாமான்களையுமே, கூடிய மட்டிலும் நம் நாட்டிலேயே நாம் செய்து கொள்ள வேண்டும்; அப்படிச் செய்தால் தான், நம் நாட்டின் வறுமை ஒருவாறு நீங்குமென்பது உறுதி. அதுவுமன்றி, நம்முடைய ஸ்வராஜ்யப் போராட்டத்தில், ஆங்கில நாட்டு ஸாமான்களைப் பகிஷ்காரம் செய்வது பெரிய ஆயுதமென்று, ஸ்வராஜ்ய கக்ஷியைச் சேர்ந்தவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்; ஆனால், என்ன காரணத்தினாலோ, மஹாத்மா காந்தி இதை ஒப்புக் கொள்வதில்லை.

கையினால் ராட்டினத்தில் நூற்கப்பட்ட நூலினால் செய்யப்பட்ட துணியை, அதாவது கதரைத் தான் கட்டிக் கொள்ள வேண்டும், அதுவும் இந்தியர்கள் ஒவ்வொரு நாளும் நூற்க வேண்டும் என்று சொல்வதின் அர்த்தம், நான் எவ்வளவோ யோஜி[illegible]ம், பிறர் சொல்வதைக் கேட்டும், என[illegible]ங்களில்லை. நம் நாட்டிலுள்ள ஆ[illegible]களில், நம் [illegible]ளர்



கள், நம் நாட்டு முதலாளிகளிடம் சம்பளம் வாங்கிக் கொண்டும் நம் நாட்டில் விளையும் பருத்தியைக் கொண்டும் அவர்கள் நூற்கும் நூல்களைக் கொண்டு நெய்யப்படும் வஸ்திரங்கள், ஏன் சுதேசி ஆகாவோ எனக்குத் தெரியவில்லை. நம் நாட்டிலுள்ள 33 கோடி ஜனங்களும் இந்தத் துணியைத் தான் கட்டுவது என்று ஏற்பட்டு விட்டால், நாட்டின் வறுமை ஒருவாறு நீங்கும்; ஆங்கில நாட்டுத் துணிகளையும் நாம் பகிஷ்காரம் செய்து விடலாம். கேவலம் கைராட்டின நூலினால் மட்டும் இவ்விரண்டையும் ஒரு நாளும் செய்ய முடியாது.

நம் நாட்டிற்குக் கைத்தொழில் அபிவிருத்தி அத்யாவசியமென்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். துணியைப் பற்றின மட்டில், நம்முடைய ஆலைகளை எல்லாம் நூல் நூற்கும் ஆலைகளாகச் செய்து, அந்நூல்களைக் கொண்டு கைத்தறி மூலமாகத் துணிகள் நெய்ய நாம் ஏற்பாடு செய்வோமானால், கைத்தொழில் அபிவிருத்தியும் நன்றாய் ஏற்பட்டு, சுதேசியமும் நம் நாட்டில் செழித்தோங்கும். சற்று நிதானித்து யோஜித்தால், இதெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குமாயினும்; இதைத் தாங்கள் ஒப்பு கொள்வதாகப் பலர் என்னிடம் இரஹஸ்யமாகச் சொல்லியிருப்பினும்; மஹாத்மா காந்தியிடம் உள்ள கேவல மூட பக்தியினால், தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று காலென்று சாதிக்கிறார்கள். மூட பக்தியினால் ஒரு தேசமாவது, மனுஷ்யனாவது, மோக்ஷம் அடைய முடியாதென்பதைச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

இப்படி எல்லாம் எழுதுவதனால், எனக்குக் கதரின் பேரிலாவது, ராட்டினத்திலாவது வெறுப்புள்ளதாக எண்ணக் கூடாது. நான் அடிக்கடி கதர் உடுத்திக் கொள்கிறேன்; சட்ட சபையில் எப்பொழுதும் கதரே உடுத்திக் கொள்கிறேன்; நம் நாட்டில் இப்பொழுது கதரை ஒரு ராஜீய உடையாகக் கருதி இருக்கின்றேன். ஆனால், மகாத்மா காந்தி கதரின் மூலமாக மாத்திரம் ஸ்வராஜ்யம் வந்துவிடுமென்று சாதிப்பது, கேவலம் அர்த்த வாதம் என்று வைத்துக் கொண்டாலொழிய, நான் அது தவறு என்று வணக்கமாய்ச் சொல்வேன்.

ஆதலால், நம் நாட்டிலுள்ள சகோதரர், சகோதரிகள் துணி விஷயத்தில் இனிச் செய்ய வேண்டிய வேலை

என்னவெனில், முடிந்தால் நூற்கட்டும்; கிடைத்தால் கதர் கட்டிக் கொள்ளட்டும்; இல்லாவிட்டால் இந்திய ஆலைத் துணிகளைக்கட்டிக் கொள்ளட்டும். எக்காரணத்தையும் கொண்டு, ஆங்கில நாட்டுத் துணிகளைக்கட்டிக் கொள்ளக் கூடாது, வாங்கக் கூடாது என்று, வணக்கமாய்க் கேட்டு கொள்கின்றேன்.

அடுத்தாற்போல், எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியார், சில பகிஷ்காரங்களைப் பற்றித் தீர்மானம் செய்திருக்கின்றார்கள். ஸர்க்கார் கொடுக்கும் பட்டங்களை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாதென்பதை நான் மனப்பூர்வமாய் அங்கீகாரம் செய்கின்றேன். ஏற்கனவே பட்டம் பெற்றிருக்கின்றவர்களும், தங்கள் பட்டங்களை விட்டு விடுவது சிலாக்கியமென்று எண்ணுகிறேன்; ஆனால், அப்படி விடாதவர்கள், காங்கிரஸ் ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாயிருக்கக் கூடாதென்பது அனாவசியமென்றே படுகிறது.

இது நிற்க: சட்டசபை, நியாயஸ்தலம், சர்க்கார் பள்ளிக்கூடங்கள், இவைகளை பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும்; அப்படிச் செய்யாதவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாயிருக்கக் கூடாதென்றும் தீர்மானித்திருப்பது எனக்கு வியப்பையும் வருத்தத்தையும் தருகின்றது. இந்த பகிஷ்காரங்கள் நடக்கவில்லை, நடக்கா என்பது, தீர்மானங்கள் செய்தவர்களுக்குள் எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம்; அதுவுமன்றி, காங்கிரஸ்வாதிகள் சட்டசபைக்குச் சென்றால் நம் நாடு ஸ்வராஜ்யப் போராட்டத்தில் வெற்றி அடையுமென்பதை மத்திய மாகாணத்திலும் வங்காளத்திலும் டில்லியிலும் நம் தலைவர்கள் நிரூபணம் செய்து விட்டார்கள். மஹாத்மா காந்தி விடுதலை அடைந்தது ஸ்வராஜ்யக் கக்ஷியாரின் பிரயத்தனத்தாலென்று அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். எவர்கள் என்ன சொன்ன போதிலும், எந்தத் தேதியில் இந்தியச் சட்டசபையில், இந்தியா பிரிட்டிஷ் ஆட்சிக்குள் வந்த பிறகு, பண்டித மதிலால் நேருவின் தலைமையின் கீழ், தேசீயக் கக்ஷியார், இந்திய அரசாங்கத்தாரின் வரவு செலவு திட்டத்தை நிராகரித்தார்களோ, அன்று தான் இந்திய ஸ்வராஜ்யத்திற்கு உண்மையாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதென்று, இனிமேல் இந்திய சரித்திரம் எழுதப்போகின்றவன் ஒப்புக்கொள்வான். இப்படியிருக்க, காக்கினாடா காங்கிரஸில் தீர்மானம் செய்ததை ஏதோ முணுமுணுத்துக்கொண்டு ஒப்புக் கொள்வது



போல் பாவனை செய்து, சட்டசபைக்குப் போகாமலிருப்பது தான் உத்தம தேச பக்தி என்று எழுதுவதும் பேசுவதும், பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமனமாகி விடுமென்று எண்ணுவதுபோல்தானிருக்கிறது. ஆகையால், இவ்விஷயத்தில் இனிச் செய்ய வேண்டிய வேலை என்னவெனில், சட்டசபைகளையும், ஸ்தல ஸ்தாபனங்களையும், ஸ்வராஜ்யக் கக்ஷியார் கைப்பற்றுவதில், எல்லோரும் அவர்களுக்குப் பக்கபலமாயிருக்கவேண்டும்.

நியாயஸ்தல பகிஷ்காரம் நடக்காதென்பதை, ஸ்ரீமான் தேஷ் பாண்டே விஷயமாக, மகாத்மா காந்தி கொண்டு வந்த தீர்மானத்திலிருந்து, அவரே அறிந்திருப்பதாகத்தெரிகிறது. பள்ளிக்கூட பகிஷ்காரம், தன்கண்ணைத் தானே குத்திக் கொள்வதற்குச் சமானமென்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன். ஆனால், நம்முடைய படிப்பைத் தேசீய மாக்க வேண்டுமென்பதையும், கூடுமான வரையில் நம்முடைய வழக்குக்களை நியாயஸ்தலங்களுக்குச் செல்லாமல் நாமே சமாதானமாய் முடித்துக் கொள்ள வேண்டுமென்பதையும் ஒப்புக் கொள்கின்றேன். ஆயினும், நியாயஸ்தலங்களுக்குப் போகின்றவர்களையும், பிள்ளைகளை ஸர்க்கார் பள்ளிகளுக்கு அனுப்புகின்றவர்களையும், காங்கிரஸ் ஸ்தாபனங்களிலிருந்து விலக்கி விடவேண்டுமென்பது, ஜன நாயக தத்துவத்துக்கு விரோதம், காங்கிரஸின் கௌரவத்துக்கும் குறைவு என்று, நான் கண்டிப்பாய்ச் சொல்வேன்.

## பரிசுகள்

(251-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்ற வைகாசி மாதப் பரிசு விஷயம்.

I. சிறப்புப் பரிசு—“சுய ஆட்சி உரிமை” யைப் பற்றி வியாசம் ஒன்றும் கிடைக்கவில்லை.

முந்தின—ஆனி—மாதப் பரிசு விஷயம்.

பொதுப் பரிசு—திருக்குறளைப் பற்றி 8 பெயர்களே பதில் அனுப்பினர்; அதனால் பரிசில்லை. இவர்களும், மொத்தம் 60 வெவ்வேறு குறள்களைக் குறித்திருப்பது வியப்பே. 4 வோட்டுக்களேனும் பெற்ற குறள் ஒன்றுதான்; 3 பெற்றன 3; 2 பெற்றன 11; ஒரே வோட்டுப் பெற்றன எஞ்சிய 45-ம். கிடைத்த பதில்கள், நம்மவருள் திருக்குறளை ஆராய்ந்து படிப்பார் சிலரே என்பதை நன்கு புலப்படுத்துகின்றன—ப-ம் ப-ர்.

# விகடப்பா

(258-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை.

தமிழில் இனிய கவிகளை எளிதில் பாட வல்லவரும் கம்பராமாயணப் பிரசங்கியுமான காலஞ்சென்ற ஸ்ரீ. P. R. கிருஷ்ணமாசாரியாரைப் பலர் அறிந்திருப்பர். பின் வரும் அகவல், சங்கச் செய்யுள்களைப் பரிகசித்து அவர் பாடியது:—

## புலவராற்றுப்படை.

மாஅண்ட ஞமலி நாஅப் புரைஇய
தாஅட் டாமரைத் தோஒட் டிணைவரைக்
கொடுவீழ் வாழை செத்த நெடுவீழ்

*　　*　　*　　*

பூட்கைப் பெருமுலை வாஅட் கண்ணியொடு
காஅக் கீஇயெனக் கூஉங் குரைய
சேஎய்ப் பள்ளிச் சிறாஅர் துயல்வர
வுடும்பிற் பிணிதவாக்
கடும்பொடு கால்கெடக் கதிர்தெறு கல்லதர் வரூஉம்
புழுக்கல் காணாப் புல்லென் யாக்கை
வழுப்படு தீச்சொற் கசடு கழிப்பிய
புலவுவாய்ப் புலவ வருகநின் மன்னே
யொராஅ திந்நெறி
யுற்றது மத்தை யூழிற்
றருபயன் வாழி யொழிமதி தெருமான்
கேட்டிசின் மன்னே யிந்நாட் கீட்டிசைச்
கிழாஅனெனப் போஒம் யாஅன் மேஎனட்
டழாஅற் கிளையொடுந் தழற்பசி யுழந்த
நின்ன் னன்ன நிரப்பிற் றுன்னிய
சொல்ல் லுழவன் றுனிகூ
ரெவ்வம் படுத்துக் கல்லென் கவ்வைக்
கரைகொல் கான்யாறு கடுப்ப
வழங்கத் தவாஅப் பழுநிய செல்வமொடு





பழுதற வந்தனென் படர்மதி நீயுங்
கறையடி படுத்த
கோழி நாயன் வாஅற் குரங்கியிற்
குளிர்முக வேஎட் குறுகித் தளிரியற்
கூத்தியர்க் கீத்த நாடுகெழு பெருவிறல்
மகளிர் கொங்கை மலையொடு மலைத்த
சிலைத்தார் மார்ப சேயிழை கணவ
வலவற் கருளைச் செம்புற் றீயற்
புளிக்கூழ் தீற்றத் தீற்ற வளிக்கமீச்
சேஎந்த பூட்கைச் சேந்த வெனச்சில
புகலா வளவை
பாஅற் பெய்து பழைநாட் புளித்த
மாஅற் கடுக்குஞ் சோறுநனி வடுவொடு
வாங்க வாங்க வாக்கிப் பூளையே
யறுவை நல்கி விடுக்கு
மோத்துணர் நல்லா ருவப்பிற் கூடும்
பாழி மூதூர்க் கோழிகிழ வோனே.

**திணை - பாடாண்டிணை ; துறை - புலவராற்றுப்படை.**

**கோழிநாயன் சேந்தனைக் குடந்தைகிழான் அளபெடைப் புலவன் பாடியது.**

*இதன் பொருள்*:—மாட்சிமைப்பட்ட, நாயினது நாவை யொத்த தாமரைபோன்ற தாள்களினையும், தம்மி லொன்றற் கொன் றிணையாகிய மூங்கிலையொத்த தோள்களினையும், வளைந்த யாவரும் விரும்புகின்ற வாழையினது பூவினையொத்த பின்னலாகிய நெடிய கூந்தலினையும், *　*　* யானையின் மத்தகத்தினையொத்த பெரிய முலைகளினையுமுடைய வாள்போன்ற கண்களினையுடைய வெனது மனைவியோடே, காக்கீயென முறைவைத் தோதுகின்ற முருகனையொத்த பள்ளியிற்பயிலுஞ் சிறார்கள் வருத்தமுற, உடும்பை யொப்பப் பிணிப்பு விடாத சுற்றத்தாரோடு, கால் வருந்தச் சூரிய வெப்பஞ் சுடுகின்ற பருக்கைக் கற்கள் நிறைந்த சுரத்தின் வழியே வருகின்ற, புழுக்கலைக் கண்டறியாத புற்கென்ற யாக்கையினையும் மாசு நீக்கிய குற்றமற்ற தீவிய சொற்களையு முடைய கற்ற கல்வியை வெறுத்துக் கூறுகின்ற வாயினையுடைய புலவ, இனிது வருக, தப்பி வேறு வழியிற் போகாதே இந்நெறியி லென்னை யெதிர்ப்பட்டதும் முன்னை நல்வினையால் வந்த பயனும்; நீ வாழ்க; கலக்கமொழிக; யான் சொல்வனவற்றை விரும்பிக் கேட்பாயாக; இற்றை நாட் போதிலே கீழ்த் திசைக் குரியனான இந்திரனென்னும்படி வாரா நின்ற யான் தலை நாளிலே தழுவுதலையுற்ற சுற்றத்தாரோடே தழல்போற் கொடிய பசியால் வருந்திய, நின்னைப் போல வறுமை யுற்றிருந்த சொல்லை யுழு தொழிலாக வுடையேன்; வெறுப்பு மிக்க துன்பத்தைப் போக்கி, கல்லென்னும் ஆரவாரத்தோடே கரை பொருது வருகின்ற காட்டி யாறினை யொப்பப் பிறர்க்குக் கொடுக்கத் தொலையாத முற்றுப் பெற்ற செல்வத்தோடே வறுமை கெட வந்தேன்; நீயும் ஆண்டுச் செல்வாயாக; யானையினது வலி

தொலைத்த உறைந்தைப்பதிக் கிறையோ னாகிய, வெள்ளிய சந்திரனை யொத்த குளிர்ந்த முகத்தினையுடைய கொடையாற் சிறந்தோனைக் குறுகி, தளிர்போலு மியல்பினை யுடைய விறலியர்க்குக் கொடுத்த பகைவர் நாட்டினையுடைய் விளங்குகின்ற பெரிய வெற்றியினை யுடையாய், மகளிரது கொங்கையாகிய மலையோடு பொருத மலைபோலகன்ற மாலையையுடைய மார்ப, சேயிழைக்குக் கணவ, நண்டுப் பொரியலினையும், செம்புற்றி லெழுகின்ற ஈசலைக் கூட்டி யடப்பட்ட புளிங் கூழினையும் உண்ண உண்ண அளிக்க, அதனால், அறச்சிவந்த பூணினையுடைய கையினையுடைய சேந்த என்று சில மாற்றங்களை மொழிந்த வளவில், பழையதாகிய நாட்படப் புளித்த மாலினை யொக்கும் நீர்ச் சோற்றினை மோர் பெய்து மாவடுவாகிய ஊறுகாயோடே யேந்துந் தோறும் மிகவார்த்துப் பூளைப்பூவினை யொத்த ஆடையினையும் தந்து விடுப்பன்; மறையினை யுணர்ந்த நல்லோர்கள் மகிழ்ச்சியாற் கூடி வசிக்கின்ற பெருமையினை யுடைய மூதூராகிய உறைந்தைப் பதிக் கிறைவன்.
——என்றவாறு.

'ஊசி முறி,' 'கிறள்,' 'கீத்தி சூடி'களைப் பற்றி, எவரும் இதுவரை எழுதிலர். 'கிறளை'ச் சேர்ந்ததாகக் கிடைத்த ஒரு பாட்டு, அச்சிட முடியாதபடி அசங்கியமா யிருப்பதால், இங்கே வரையக் கூடவில்லை. பின்வரும் 10 புதிய குறள் வெண்பாக்களும் 'கிறளை'ச் சேரலாகும்:—

(1) தின்றதனு லாய பயனென் கொல், எப்பந்தான்
நன்று வாரா தெனின்?

(2) பயற்றம் பருப்புருண்டை பத்தெட்டுத் தின்றால்
வயிற்றுவலி மாற்ற லரிது.

(3) வெள்ளையர் எல்லாம் தமக்குரியர்; வெண்மையிலார்
கொள்ளையும் ஆவர் அவர்க்கு.

(4) நீதி எனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
மீதி யிலாது கொளல்.

(5) காந்தி கொல், நேருதாஸ் கொல்லோ, ஸரோஜினி
சாஸ்த்ரி கொல், சாயும் எம் நெஞ்சு.

(6) தப்பொழுக்கம் மாற்றிக் கொளலாகும், பார்ப்பான்
முப்புரி நூல் நீங்கக் கெடும்.

(7) பாராதார் இல்லாத போழ்துசர்க் கார் வேலை
பார்ப்பார்க்கும் ஈயப் படும்.

(8) பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, உறு பொழுதில்
காப்பி டீ யல்ல பிற.

(9) நீரில் பால் ஊற்றுவான் பால்காரன்; பாலில் நீர்
ஊற்றிலென் ஊற்றுக்கா லென்?

(10) யான் உண்ணும் காலை மதி யுண்ணும்; உண்ணுக்கால்
தான், "உண்! உண்!" என்னும் மது.

# தீண்டாமை என்னும் தீங்கு

(சித்திரைச் சிறப்புப் பரிசு பெற்ற கட்டுரை)

ஸ்ரீ. வே. ஆ. சிதம்பரப்பிள்ளை, யாழ்ப்பாணம்

(213-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

இக்கால கதியையும் இக்கால மனிதரின் கர்ம பரிபாக சக்திகளையும் வர்ண தர்மங்க ளுடன் இணைத்து நோக்கு மிடத்து, ஒருவனது பிறவிக் குணங் காரணமாய் வருணத்தைக் கொள்ளாமல் பரம்பரை யாகவே கொள்வதில் பல தீங்குக ளுண்டா கின்றன என்பது நுணுகி ஆராய்வார்க்குப் புலப்படும். இது பற்றியே ஒருவன் பிறவியி லமைந்த வர்ண குணங்களுக்கு விருத்தமான வர்ண தர்மங்களை அநுசரிக்கக் கூடாதென்று சாஸ்திரங் களிற் கூறப்பட் டிருக்கிறது. ஔவைப் பிராட்டியாரும் 'இயல்பலாதன செயேல்' என்றது இக் கருத்துப் பற்றியே யாம்.

ஒருவன் எவ்வருணத் தவனாகப் பிறக்கின்றானோ அவ் வருண தர்மத்திற்கு மாறான வருண தர்மங்களை அநுசரிக்கக் கூடாதென்பதற்கு உதாரணம்:—

ஒரு க்ஷத்திரியனது தர்மங்களை எடுத்துக் கொள்வோம். க்ஷத்திரிய னானவன் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் புரியவும், யுத்த முனையில் வீர தீரத்துடன் சமர் புரிந்து உயிர் துறக்கவும் ஆற்ற லுள்ளவனா யிருத்தல் வேண்டும். ஆனால், ஒரு க்ஷத்திரியனுக்கு க்ஷத்திரிய குணங்களே சிறுதும் வாய்க்கப் பெறாத கோழை மக னொருவன் பிறந்துளா னென்று வைத்துக் கொள்வோம். அக் கோழை மகன் தன்னையும் க்ஷத்திரிய னென்று பாவிக்க லாமா? அங்ஙனம் பாவித்தால், வீர தீர குணங்க ளுடன் யுத்தத்திற்கு அஞ்சாமற் புறப்படு வானா? ஒரு போது புறப்பட்டாலும், யுத்த முனையிற் புறங் காட்டி ஓடா திருப்பானா? ஆகவே, அவனை அவனது பிதா க்ஷத்திரியத் தொழிலுக்குப் பயிற்றுவிக்க லாமா? பயிற்று வித்தால் அதனால் அவனுக்கும் உலகத்திற்கும் சிறிதும் நன்மை யில்லாது ஆவதுடன், ஒரு கால் தீமையே விளையவுங் கூடும். இவ்வாறே ஏனைய வருணங்களுக்கும் பொருத்திக் காண்க.

மேலும், இக் காலத்தில் சரீரப் பிரயாசிக நற்றொழில்களில் உயர்வு தாழ்வுக ளேற்படுத்தி, அத் தொழிலாள ருள்ளே பின்னரும் கீழ் சாதிக ளென்று பிரிவினை வகுத்து, பரம்பரை முறையை வற்புறுத்துதலி னாலும் உலகத்தில் பல தீமைகள் விளைகின்றன என்பதைச் சிறிது விளக்குவாம்.

ஒரு கிராமத்தில் 500 வேளாளக் குடிகளும், 10 பிராமணக் குடிகளும், 5 தட்டாரக் குடிகளும், இன்னும் அக்கிராமத் தவர்க்கு வேண்டிய ஏனைய தொழி லாளரும் உளரென்று வைத்துக்

கொள்வோம். இடையில் ஓர் கொள்ளை நோ யுண்டாகிப் பாந்து அநேக வேளாளக் குடிகளை அழித்து விட்ட தென்றும் மனோபாவனை செய்து கொள்வோம். இந் நிலைமையில் பாம்பரைத் தொழில்களையே எல்லாரும் வழமைப் படி செய்து வருவா ராயின், கால கதி யடைவில் பிராமணர் தட்டா ராதியோர் சந்ததி பெருகியும், வேளாளர் தம் விகித தொகையிற் குறைந்தும் இருப்பர். ஆகவே சந்ததி பெருகிய பிராமணர் தட்டா ராதியோரைச் சில வேளாளக் குடிகள் ஆதரிக்க முடியுமா? சில காலத்திற்கு ஆதரிக்க இயலலாம். முடிவில் எல்லாருந் திண்டாட வேண்டியே நேரிடு மென்பதைப் பொரு ளியல் நூல் வல்லோ ரறிவர். ஆதலால் ஒரு தேசத்தில் பொரு ளாதாய மூலத்தை விருத்தி செய்யுஞ் சாதியார் எத்தனை பெய ருளரோ அத்தனை பெயருக்குத் தேவை யுள்ள தொழி லாளரைத் தகுதி பார்த்துத் தெரிந்து கொண்டு, ஏனையோரை அவரவர் பிறவிக் குணத்துக் கியைந்த பிரவிருத்தி யுடன் உணவு விருத்தி செய்யுந் தொழி லாகிய வேளாளத் தொழிலையும் உடை விருத்தி செய்யுந் தொழி லாகிய நெசவுத் தொழிலையுமே கைக் கொள்ளும்படி அறிஞர் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

ஜன சமூகத்திற்கு இன்றி யமையாத தொழில்கள் புரிவோரைத் தாழ்வாக மதித்து நடத்துதல் நீதி யீனமும் அறி வீனமும் பிற் காலக் கேட்டிற்குக் காரணமு மாகும். வண்ணார் சாணார் நாவிதர் தோட்டிகள் ஆதியவர்கள் மனித சமூகத்திற்கு ஆவசியகம் வேண்டிய பரோபகாரத் தொழிலாள ராவர். அவர்களின் உதவி யின்றேல், மேல் வருணத்தவர்கள் ஜீவியத்தில் மிக்க கஷ்ட முற நேரிடும். ஆகவே, அவர்களால் நாம் பல சௌகரியங்களை யடைந்து கொண்டு, அன்னாரை இழிவாக மதித்து அச் சுறுத்தி அடக்கி ஒடுக்குதல் நீதி நெறி யாகுமா? தோளி லிருந்து செவியைக் கடிப்பது போலன்றோ இருக்கின்றது? பார பட்சமற்ற கடவுள் தான் இக் கொடுமையைப் பொறுத்தருள் வாரா?

நாம் இவ்வாறு அதர்மத்தைத் தர்ம மென்று விபரீதமாய் ஏற்படுத்திக் கொண்டு பாமரர்களைக் கொடுங் கோன்மையினால் அடக்கி வந்தமையா லன்றோ, இக் காலத்தில் நாம் உலகி லெங்கும் தீண்டாச் சாதியா ராகக் கருதப் பட்டு உலகத்திற் பறையரென மதிக்கப் படுகிறோம்? காரண மின்றிக் காரியம் விளையா தென்பது தத்துவ சாஸ்திரக் கொள்கை யாகும். தனி மனிதன் நுகரும் இன்ப துன்பங்களுக்கு அத்தனி மனிதனின் பூர்வ கர்மங்களே காரண மாதல் போல, ஒரு தேசத்தார் அநுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் அத் தேசத்தவரின் பூர்வ கன்மங்களே காரணமாகும். ஆகவே, நம்மவருள் ஒரு சாராரை நாம் நீதி பிறழ்ந்து அடக்கியொடுக்கின பாவத்திற்குத் தண்டனையாக, அந்நியரால் நாம் அடக்கித் தண்டிக்கப் பட்டுத் திருந்த வேண்டு மென்று ஈஸ்வர சங்கற்பமிருந்தது போலும். இனியும் இத் தண்டனையின் காரணத்தை நாம் உணரா திருக்க லாமா?

தீண்டாமையை நியாய மென்று வாதிப்போர், அத் தீண்டா வகுப்பார் தம் அநாசாரங் காரண மாகவே விலக்கி ஒதுக்கப் பட்டனரென்று ஒப்புக் கொள்ளாமல் முடியாது. அநாசாரங் காரணமாகவே விலக்கப் பட்டன ரென்று ஒப்புக் கொண் டாராயுங் காலும்,



அவ் வழக்கம் நீதி பொருந்தியதா யமைந் திருக்க வில்லை. திருஷ்டாந்த மாக: வலைஞர் சாணார் இவ் விரு சாதியினரது மேன்மை கீழ்மைகளை ஆராய்ந்து தெளிவாம். வலைஞரோ ஜீவ ஹிம்சைத் தொழிலாளர்; நாள் தோறும் அநேக ஜீவர்களைப் பதை பதைத்துத் துடித்து வருந்தக் கொல்பவர்கள்; இரக்க வுணர்ச்சியை இழந்தவர்கள். இன்னவர்கள் இந்து ஆலயங்களுட் பிரவேசிக்கும் வழக்காறு உண்டு. வேளாள ராதியோரும் இவர்களைத் தீண்டும் வழக்கம் சர்வ சாதாரணமா யுண்டு. சாணாரோ மனிதருக்குச் சீவியாதார மான தொழில் களைச் செய்பவர்கள். பிறரது ஜீவியத்திற்காகத் தமது உயிர் உடல் குடும்பங்களையும் பொருட் படுத்தாமல், ஆபத்தான பிரயத்தனத் தால் வான் பயிர்களின் பிரயோசனங்களைக் கொணர்ந்து மேல் சாதியின ரெனப் படுவோருக்குக் கொடுக்கும் பரோபகாரத் தொழி லாளர். இன்னவர்கள் என் தீண்டாதவர்க ளாகக் கருதப்பட வேண்டும்? புலா லுண்ணல் தூய்மை யின்மை யாகிய அநாசார வழக்க முடைமை யாலெனின், அவற்றை விலக்கிய தீண்டாதார் கொள்ளப் படுகின்றனரா? வேளாள ராதியோரில் அவ் வநாசார முடையோர் விலக்கப்பட்டு விட்டார்களா? சாணாரிலுங் கீழாக மதிக்கப்பட வேண்டியவர்களும் கொலைத் தொழிலாளரு மாகிய வலைஞர்கள் ஏன் தீண்டற் பாலராயினர்?

கீழ் சாதியா ரெனப் படுவோர் அன்னிய மதப் பிரவேசகர்களாகி வரின், அவரை மேல் சாதியின ரெனப் படுவோர் வீட்டினுள் விடவும் கைலாகு கொடுக்கவும் பின் னிடார்கள். ஆனால் அக் கீழ் சாதியா னெனப் படுவன் தனது இந்து சமயத்திலேயே இருந்து கொண்டு எத்தனை நல் லொழுக்கந் தூய்மைக ளுடையனாயிருப்பினும், அவனை அம் மேல் சாதியின ரெனப் படுவோர் 'தூர நில்லடா' என்று விரட்டுவார்கள். சீச்சீ! என்னே நன்றி கேடு!! என்னே மதி கேடு!!!

ஒருவன் எச் சாதியிற் பிறப்பினும் அவனது உள்ளத்தில ஜீவகாருண்ணியம் வாய்மை தெய்வ பக்தி ஞானம் முதலியன எவ்வளவில் மலர்ந்திருக் கின்றனவோ அவ்வளவில் அவனது இருதய கமலத்தில் கூடஸ்த சைதன்னியம் தெளிவாகப் பிரகாசிக்கின்ற தென்பது நமது மெய்ந் நூல்களின் தாற்பரியம். ஆகவே, நந்தனாரைப் போன்ற ஒரு வள்ளுவனிடத்தில் கூடஸ்தசிவம் தெளிவாக மூர்த்திகா முற்று விளங்கு மென்பதும், மேற் குலத்துதித்தவனே யாயினும், ஒருவன் 'வஞ்சனை பொறாமை கோபம் வைத்த மனமாங் கிருமி சேர் மல பாண்டம்' எனத் தகு முள்ளத்தின னாயின், அவனிடத்தில் கூடஸ்தசிவம் அத் துணையாகப் பிரகாசியா தென்பதும் மறுக்கொணாச் சத்தியம். ஆதலால், முன்னவனே ஆலயங்களுட் பிரவேசிக்கத் தகுதி யுடையவனென்பதும், பின்னவன் தகுதி யற்றவ னென்பதும் வலிமை பெற்ற நியாயங்க ளாகும். ஆகவே, ஈஸ்வரனே ஒரு பறைய னிடத்திலும் அருவை பாராட்டாமல் பிரசன்ன முற் றிருக்கையில், கேவலம் மனித ராகியவர்கள் அவனைத் தீண்டாதா னென்று விலக்கி வைத்தல் நீதி யாகுமா? இத்தகைய கொள்கைகளை அறிவாளிகளும் பிறசமயத் தவர்களும் எள்ளி நகை யாடாரா?

நமது சமயத்தின் மூலாதார தர்மங்களாகிய, ஜீவகாருண்ணியம் அபேத பாவனை சமத்துவ திருஷ்டி ஆதி யவற்றிற்கு முரணில்லாத ஆசாரங்களையே நாம் அநுசரித்து ஒழுகுதல் வேண்டும். பழைய வழக்கம் என்ற காரணத்தால் அபிமானங் கொண்டு தீயனவற்றை நிலைப் படுத்தல் விவேக மாகாது.

மனிதர் தம் மனோமய கோசத்தி லூறிய வழக்கங்களை, அவை தீயன வென் றுணர்ந்த விடத்தும், விலக்குதற்கு இலகுவில் மனம் இசையார்கள் என்பது அநுபவமான உண்மை. இதனை, கிறிஸ்து மதப் பிரவேசகர்க ளான நம்மவர் பலர் இந்து சமயிகளினும் பார்க்க அதி நுட்பமாய்ச் சாதி பேதம் பாராட்டுதலைக் கொண்டு அறியலாம். கிறிஸ்தவர்க ளான நம்மவர் பலருக்கு இவ் வுணர்ச்சி ஏன் தொலைய வில்லை? இதுவே மனோமய கோசத்தி லூறிய வழக்கம் என்ற இராக்ஷதனின் செயல். அந்தோ! கொடிய இராக்ஷதனே! எத்துணைக் கேடு பயப்பதையும் புதிய தெனின் இகழ்வாய்! பழையு தெனின் புகழ்வாய்! உன் அதிகாரங் கொடிது! கொடிது!!

இன்னும், பிறவியிலேயே தீண்டாச் சாதியாருள ரென்போர், தீண்டாதாரைச் சீர் திருத்தி மேனிலை யடைவிக்கக் கூடா தென்பதற்கு நியாயமாக, 'அவரவர் கர்ம பலனை அவரவர் நுகரவே வேண்டும்' என்று கூறுவர். ஜீவர்களுக்கு இன்ப துன்பங்கள் அவரவர் கர்ம பலனாகவே விளைகின்றன என்பதில் சந்தேக மில்லை. ஆனால் துன்புறு வோருக்கு இரங்கி உதவி புரியக் கூடா தென்பதற்கு ஓர் நியாய மாக அக் கூற்றை ஆதாரமாகக் காட்டுவோர் தயையும் அறிவும் உள்ளவராகக் கருதப் படார். அன்னவரது கூற்றை உலகத்தவர் அங்கீகரித்து ஒழுகப் புகின், இவ் வுலகத்தில் கருணை தர்மம் புண்ணியம் என்ற சொற்களுக்கும் பொருள்களுக்கும் இடமே யிராது. ஆதலால், தீண்டாமையை வேண்டுவோர் தமது கொள்கைகளுக் காதாரமாக, கடவுளையும் மஹா ரிஷிகளையும் முன்னணியில் நிறுத்துதல் அக் கடவுளையும் மஹா ரிஷிகளையும் அவமதித்தலை நிகர்க்கு மென் றுணர்ந்து யாவரிடத்துஞ் செந்தண்மை பூண் டொழுகுவா ராக. ஒடுக்கப் பட்ட சாதியார்' தம் முரிமைகளைப் பெறுவண்ணம் விகாதம் விளைப்போர் இந்து சமயத்தையே இகழ்ச்சிக்குள் ளாக்குவ துடன், கால கதியில் இந்துக்களை இவ் வுலகில் அருகி யொழிவ தற்கும் காரணர்க ளாவ ரென்பது திண்ணம். அன்னோர் ஸ்வராஜ்யம் பெறுதற்கும் அருகரல்லர்.

இது காறும் ஒடுக்கப் பட்ட சாதியாரின் உரிமைகளுக் காகப் பரிந்து வரைந்தேன்: ஆதலால், ஒடுக்கப் பட்டவர் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய சில கடமைகளையுங் கூறுதல் என் கடமையென் றெண்ணுகிறேன். அவையாவன :—

ஒடுக்கப் பட்ட சாதியார், அசுத்த வுணவு, மது வருந்தல், தூய்மை யின்மை, ஆகிய அனாசார வழக்கங்களை முதன் முதலில் ஒழித்தல் வேண்டும்; கல்வி கேள்விகளினால் அறிவை யுடைய முயலுதல் வேண்டும்; [illegible] வேண்டும். இவ்விதம் தம்மைச் [illegible] மேல் சாதியின ருடன் சமத்துவ உரிமைகளுக்கு [illegible]

—:(ஓ):—

# சீமைக் கடிதம்

(250-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமதி M. லக்ஷ்மி யம்மாள்,
(B. A. Hons.) லண்டன்

இங் கிருந்து நாங்கள் 'மூனிச்' என்னும் ஜர்மானிய நகரத் துக்குப் போய்ச் சேர்ந்தோம்; எங்கும் போல, அவ் வூரிலும், எத்தனையோ கோவில்களுக் குள்ளும், காட்சி பங்களாக்களுக்குள்ளும் நுழைந்து வெளிவந்தோம். அவ் வூர் முனிஸிபல் கட்டடத்தில் நாங்கள் போகும் வழி தெரியாது திகைப் பதைக் கண்டு, ஒரு வேலைக் காரன், இங்கிலீஷ் தெரிந்த ஓர் உத்தி யோகஸ்த ரிடம் எங்களைக் கொண்டு விட்டான். அவர் பாஷா சாஸ்திரத்தில் தமக் குள்ள ஆசையினால், ஐரோப்பிய பாஷைகள் பலவற்றைக் கற்றுத் தேர்ந் திருந்தது மன்றி, ஸம்ஸ்கிருதமும் தமிழும் படித் திருந்தார். நாங்கள் தமிழ் நாட்டவர்கள் என்று தெரிந்தவுடன், அவர் சந்தோஷ மடைந்து, தம் வேலையை விட்டு விட்டு, எங்க ளுடன் வந்து ஊர் காட்டிப் பல விதத்திலும் ஒத்தாசை செய்தார். கர்ண பரம்பரையாகத் தமிழ் நாட்டில் வழங்கி வரும் பழங் கதைகள் தொகுத்து அச்சிடப்பட் டிருக்கின்றனவோ என்று அவர் விசாரித்த விஷயத்தைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரிய வில்லை.

மூனிச்சி லிருந்து வியன்னுவுக்குப் போனோம்; அந்நகரம் மகா யுத்தத்துக்கு முன்பு பாரிஸ் நகரத்துடன் போட்டி போடத்தக்க செல்வமும் சிறப்பும் வாய்ந் திருந்ததாம்; நாங்கள் பார்த்த மட்டில் தரித்திரந் தான் இப்பொழுது வெளிப்படை யாகத் தெரிந்தது. அங்கே ஒரு செம்பா லடித்த காசு கூடக் கிடையாது. எல்லாப் பணமும் நோட்டுக்களில் தான்; முன்னைக் கிப்பொழுது அத் தேசத்துப் பணம் மதிப் பிழந்து, விலை மலிந் [illegible] போன

தால், அந் நோட்டுக்களை லக்ஷக் கணக்காக எண்ணிச் செல விட வேண்டி யிருந்தது. ஸ்டேஷனில் இறங்கின வுடன், போர்ட்டர், பதினாயிரம் க்ரோன் கூலி கேட்பது எங்களுக்குச் சற்று மலைப்பா யிருந்தது. அப்புறந் தான் ஆயிரம் க்ரோன் ஓரணாவுக்குச் சமானமென்று தெரிய வந்தது. தொன்று தொட்டு நேற்று வரை விளங்கிய ஹாப்ஸ் பர்க் வம்சத்து அரசர்கள், பளிங்காலும் பொன்னாலும் கட்டித், தலைமுறை தலைமுறை யாக விலையுயர்ந்த அபூர்வ சாமான்களைச் சேர்த்து, இராஜரீக ஆடம்பரத் துடன் வாழ்ந்து வந்த அரமனைகள், இப்பொழுது, காட்சி பங்க

வெனிஸ் நகரம்

ளாக்க ளாக [illegible]கப்படும் கட்டடங்களையும், சில பழைய நாளை [illegible]லகளையும் இவ்வூரில் பார்த்தோம். இங்கிருந்து [illegible] வெனிஸுக்குப் போய், இடாலியில் சில [illegible] யாத்திரை செய்தோம்.



'இதாலியா' என்று அத் தேசத்தார் சொல்லும் பேரும், அங்குள்ள மப்பற்ற ஆகாயமும், பளிச் சென்ற வெயிலும், பயிர் பச்சைகளின் செழிப்பும், ஜனங்களின் யதார்த்த நடவடிக்கையும் எங்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் நம் தாய் நாட்டை நினைவு மூட்டின. இடாலியர்களைச் சூது வாதில் தேர்ந்தவர்க ளென்று மற்ற ஐரோப்பியர்

டான்டே கவி

கள்:சொல்வ துண்டு. அது எப்படி யானாலும் சரி: தன் னிலையைப் பிறர்க்கு வெளிக் காட்டாது மறைப்பது மேனாட்டார் நாகரீகத்தின் ஒரு முக்கிய அம்ச மென்றும், அதைப் பாராட்டா திருப்பதில் இடாலியர்கள் நம்மை ஒத்- திருக்கிறார்க ளென்றும் எங்களுக்குத் தோன் றிற்று. உடை விஷயத்தில் சாதாரண ஜனங்க ளிடம் அதி கத்:தளுக் கில்லை; அநேக ஜனங்கள் அழுக்கும் பழையது மான உடைகளைத் தரித்துக் கொண்டிருந்தார்கள்; அழ கிய வீடுகளின் மாடங்களில் எல்லாருங் காண அழுக்கு வஸ்திரங்களை வெயிலில் உலர்த்துவது அவ[illegible]க்கு

வழக்கமா யிருந்தது. அத் தேசத்தில் கோவில் வாசல்களில் பிச்சைக்காரர்கள் வாய் விட்டுப் பிச்சை கேட்பதும், ரயில்களிலும் தெருக்களிலும் ஜனங்கள் பகிரங்கமாக ஒருவரோ டொருவர் உரிமை பாராட்டித் தோள் தட்டிச் சிரித்துப் பேசுவதும், உரத்த குரலில் சண்டை போடுவதும் சகஜமா யிருந்தது. நாங்கள் பார்த்ததைக் கொண்டு, லண்டன், பாரிஸ் நகர வாசிகளுடன் ஒப்பிட்டால், இடாலிய நகர வாசிகள், துப்புரவிலும் 'கருர்' பேச்சிலும் வேலையிலும் தாழ்ந்தவர்க ளென்றும், மனப் பூர்வமாய்த் தங்கள் எண்ணங்களை வெளி யிடுவதிலும், அன்னிய ரிடம் அநுதாபம் காட்டுவதிலும் மேம்பட்டவர்களென்றும் எங்களுக்குத் தோன்றிற்று.

விக்டர் எமானுபல் அரசர்

நாங்கள் வெனிஸில் இரண்டே நாள் தங்கி யிருந்தோம். இந்நகரம் கால்வாய்களின் மத்தியில் கட்டி யிருக்கிற தென்றும், வீடுகளின் அஸ்திபாரம் பாறுங்கல்லால் நீருக்குள் போட்டிருப்பதால், 'கெனல்'களுக்குக் கரையில்லாமல், இருபுறமும் அணி யணியாக வீடுகளும், நடுவில் தெருவுக்குப் பதிலாகக் 'கெனல்'களுமாய் அநேக இடங்களில் இருக்கிற தென்றும், வண்டிகளுக்குப் பதிலாகக் 'கன்டோலா' தோணிகள் உபயோகப் படுகின்றன



மிலான் நகரத்துக் கோயில்

(பக்கம் 283)



நீல் நகரக் காட்சிகள்



வென்றும், பேர்போன கூட கோபுர மாட மாளிகைகளால் அலங்கரிக்கப் பெற்ற இவ்வூர், இயற்கையாலும் செயற்கையாலும் ஒப்பற்ற அழகு வாய்ந்து விளங்குகிறதென்றும், நான் கேட்டிருந்த வர்ணனைகளின் அர்த்தம், நேரில் பார்க்க விட்டுத் தான் எனக்குத் தெரிந்தது.

'கன்டோலா'வி லேறி, ஸெண்ட்மார்க் ஸ்க்வேருக்குப் போய், எல்லாரையும் போல நாங்களும் கோவில் புறாக்களுக்குத் தானியம் வாங்கி இறைத்து, வேடிக்கையாய்ச் சிறிது பொழுது போக்கிய பின், அங்குள்ள முக்கிய ஸ்தலங்களைக் காட்டி, அவற்றின் சரித்திரத்தைச் சொல்ல ஒரு வழி காட்டியை அமர்த்திக் கொண்டோம். அவன், சருவதா, எதைச் சாக்கிட்டாவது, தன் வேட்டகத்தைப் பற்றிக் கேலிக் கதைகள் சொல்லிப் பொழுதைப் போக்கி, எங்களை மனஞ்சலித்து வெறுப்படைய வைத்தான்.



ரோமபுரி

மறு நாள் அவன் காட்டின சில இடங்களைத் திரும் போய்ப் பார்த்து விட்டு மிலானுக்குப் போனோம். [illegible]க் கோவில் நாங்கள் பார்த்த கோவில்கள் எல்லா

வற்றையும் விட அழகிற் சிறந்தது ; கண்டவர்கள் மனதில் அதிசயத்தையும் பிரமையையும் உண்டு பண்ணுவது. அவ்விடத்தில் ஒரு மஹானுடைய உடல் முன்னாள் அரசர்கள் கொடுத்த விலையற்ற காணிக்கை நகைகளுடன், நவ மணிகளிழைத்த பெட்டியொன்றில் அடக்கம் செய்து வைத்திருப்பதை, அங்குள்ள பூசாரி எங்களுக்கும் மற்றவர்களுக்கும் திறந்து காண்பித்தார்.



ரோமபுரியில் போரம் என்னும் அவைக்களம்

இந்நகரத்துப் புதையவிடம் தூரப் பார்வைக்கு ஒரு பட்டணம் போல தோன்றும் ; ஒவ்வொரு புதையவிடத்து (சவக்குழி)க்கு மேலும் பளிங்கு மண்டபங்களும், இடையிடையே மரஞ் செடிகளும் பாதைகளும் அமைந்து, சுற்றிலும் மதிற் சுவர் உள்ளது. இந்த மண்டபங்களில் வைத்திருக்கும் சிற்ப உருவங்கள், செத்தவர்களைப் போலவே முக சாடை தோற்றும்படி செய்யப்பட்டனவாம். ஒரு தாய் செத்துக் கிடக்க, குழந்தை அவள் கையைப் பிடித்து இழுப்பது போலவும், புருஷன் செத்த உடல் மேல் மூர்ச்சித்து விழுந்த மனைவி போலவும், உண்மையில் ஏற்பட்ட துன்பத்தை உருவகப்படுத்திச் செய்திருந்த அச்சிலைகளைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.



மிலானில் நாங்கள் இருந்த போது இடாலி தேசத்தரசர் அங்கு வந்திருந்தார் ; அவரை வரவேற்பதற்காக ஊரெங்கும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. வழிநெடுகக் கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் நின்று ஆரவாரிக்க, அவர், ஒரு திறந்த மோட்டாரில் ஸ்டேஷனுக்குப் போனதை, நாங்களும் ஹோட்டல் மாடியிலிருந்து பார்த்தோம்.



வெஸூவியஸ் எரிமலை

அங்கிருந்து ப்ளாரென்ஸூக்குப் போனோம் ; பல அசந்தர்ப்பங்களால் அங்கே நாங்கள் விசேஷமான தொன்றும் பார்க்க முடியவில்லை. டான்டே கவிசக்கரவர்த்தி பிறந்த ஊர் அது. அவர் சிலை ஊர் நடுவில் உயர்ந்த தூணின் மேல் நிறுத்தியிருக்கிறது. இடாலி தேசத்தை அயலார் ஆட்சியினின்றும் மீட்ட விக்டர் அரசருடைய சிலையும், அவர் சேனாபதி காரிபால்டியினுடைய சிலையும் இல்லாத ஊர், நாங்ள் பார்க்கவில்லை ; ஆனால் ரோமுக்குப் போன பிறகு தான் அவர் புகழின் பெருமை எங்கள் மனத்திற் பதிந்தது.

தூரத்தில் ஸென்ட்பீடர்ஸ்தூபி தெரிந்த உடனேயே, ரயிலில் ஜனங்கள் ஜன்னலருகே ஓடி, "ரோமா, ரோமா" என்று சத்தமிட்டு, அப்புண்ணிய ஸ்தலத்தைக் கும்பிட்டுத் தரிசித்தார்கள். நாங்கள் போன சமயம் ஈஸ்டர் ; யாத்திரிகளின் கோஷ்டி அப்பொழுது தான் ஜாஸ்தி ; ஓரிடத்திலும் ஜாகை யகப்படாமல் ஊரெங்கும் அலைந்து, கடைசியில், ஒரு மூன்றாந்தர ஹோட்டலின் ஏழாவது மாடியில், முட்டுப் பட்ட அறையொன்று காலியாயிருப்பதே எங்கள் அதிர்ஷ்டமென்று நினைத்து, அதை

அமர்த்திக் கொண்டோம். இனி வழி காட்டிகளுக்குக் காசு கொடுப்ப தில்லை யென்று தீர்மானித்து, "ரோமபுரியின் அதிசயங்களைப் பார்ப்ப தெப்படி" என்ற புத்தகத்தை மனப்பாடமாகப் படித்து வைத்திருந்தோம். அப் புத்தகத்திற் சொல்லியபடி, முதலில், ஆதிகாலத்துக் கட்டடங்கள் இடிந்து பாழாய்க் கிடக்கும் பாலடைன் குன்றைப் பார்க்கப் போனோம். அக் குன்றின் மேலும் அதன் அடி வாரத்தில் தெரு மட்டத்துக்கு வெகு தாழ்வாய்த் தோண்டி யெடுத்த பள்ளத் தாக்கிலும், குட்டிச் சுவர்களும் கற்றூண்களும் இடிந்த மதில்களும் நிற்பதைக் கண்டோம். "ரோமபுரியில் இந்த ஸ்தலத்தை விட முக்கிய மானது வேறொன்று மில்லை. இங்கே தான் பழைய நாளிற் பேர்போன அவைக்களம் (Forum) இருந்தது.



பீஸா-சாய்ந்த கோபுரம்

சனி பகவானுடைய கோவில் தூண்களும், ஸீஸர் உடலைத் தகனம் செய்த இடமும், ஆகஸ்டஸ் சக்கரவர்த்தியுடைய யாக பீடமும்," இன்னும் எத்தனையோ விசேஷ சம்பவங்களைக் குறிக்கும் பாழிடங்களும், "இங்கே பார்த்து வியக்கத் தக்கவை" என்று, என் சிநேகிதி புத்தகத்திலிருந்து ஒப்பித்தாள். இன்ன தின்ன தென்று தெரியா



மல் நாங்கள் விழிக்கும் சமயத்தில், எங்களுக்கு ஒரு வழி காட்டி அகப்பட்டான். ஆனால் அவனால் நாங்கள் ஒன்றும் பயனடைய வில்லை; அவனுக்கு நாலு வார்த்தைகளுக்கு மேல் இங்கிலீஷ் பேசத் தெரிய வில்லை; அதைச் சொன்னால் அவனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. எப்படியாவது ஓய்ந்தாற் போது மென்று, அவன் கேட்ட கூலியைக் கொடுத்துப் போகச் சொன்ன வுடன், தூரத்திலிருந்து எங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த இரண்டு இங்கிலீஷ் ஸ்திரீகள் எங்களிடம் வந்து, "அந்த உபயோக மற்ற வழிகாட்டியை நீங்கள் ஐந்து நிமிஷத்துக்குள் தொலைத்து விட்டீர்களே; உங்கள் மனோதிடமே மனோதிடம்! எங்களுக்கு வழி காட்டுவதாய்ச் சொல்லி, ஒருமணி நேரமாய் எங்கள் பிராணனை வாங்கினான்" என்று சொன்னார்கள். இங்கிலீஷ்காரரே எங்கள் மனோதிடத்தைப் புகழ்ந்தால், நாங்கள் சாதாரண ஜனங்களை விட மேம்பட்டவர்க ளாய்த்தா னிருக்க வேண்டு மென்று நினைத்து மகிழ்ந்து கொண்டு, அவர்களுடன் சேர்ந்து புஸ்தகமும் கையுமாய் அங்கே உலாவினோம். விவரமாய் ஒன்றும் தெரிய வில்லை; எல்லாம் பாழாய்ப் புல் முளைத்துப் போயிற்று. அது தெரிவது தான் முக்கியம், இதற்கு மேல் இங்கிருக்கப் பொழு தில்லை என்று சொல்லிக் கொண்டு, புஸ்தகத்தின் அடுத்த பக்கத்தைத் திருப்பினோம். அதிற் சொல்லிய படி, ஸெண்ட் ஜான் கோவிலுக்குப் போக நினைத்து, ஒரு வண்டியில் ஏறிக் கொள்ளவே, வண்டிக்காரன், நாங்கள் சொன்னது புரியாமலோ, அல்லது வேண்டு மென்றோ, ஊரெங்கும் சுற்றிப் பொழுதை வீணாக்கினதும் தவிரக், கடைசியில் அநியாயக் கூலி கேட்டு வழக்கிட ஆரம்பித்தான். சாதாரணமாய், லண்டனில் இந்த பேரம் கிடையாது. இது நம்மூரைப் போ லிருக்கிறது என்று நினைத்து, சந்தோஷப் பட்டோம், நாங்கள் இறங்கினது கோயில் வாச லாதலால், ஐந்து நிமிஷத்துக்குள் எங்களைச் சுற்றி நூற்றுக் கணக்கான ஜனங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். கடைசியில் அவர்களி லொருவர், இங்கிலீஷ் தெரிந்தவர், வண்டிக்கார னுடன் மத்தியஸ்தம் செய்து, ஒரு வகையாக வழக்கைத் தீர்த்தார். மறு நாள் முதல், இங்கு திரும்பி வரும் வரையும், நாங்கள் வழி காட்டி களையே கதியாக நம்பி, அவர்கள் பின்னன்றித் தனியாக ஓரிடத்துக்கும் போக வில்லை.

இவ் வழிகாட்டிகளில் அநேகர், தாங்கள் சொல்ல வேண்டியதை மனப் பாடமாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றிற்று. அவர்கள், ஒரு சித்திரத்தி னெதிரே நின்று, அது இன்ன தென்று பாராமல், மற்றொரு படத்தை வர்ணித்துச் சொல்வதுமுண்டு. அவர்களிலொருவன், அடிக் கொருதரம், "சீமாட்டிகளே, கனவான்களே, சற்று கவனித்துக் கேளுங்கள்" என்று சொல்லக் கேட்டுச் சலித்துப் போய், எங்களுடன் வந்தவர் ஒருவர், தாம் விடாத கவனத் துடன் கேட்டுக் கொண் டிருப்பதாயும், அவ் வாக்கியத்தை விட்டு விடும் படியும் அவனிடம் சொன்னார்; ஆனால் அந்தப் பல்லவி பாடாமல் புதிதாய் ஒன்று சொல்ல அவனுக்கு நாவெழவில்லை. ரோம புரியில், எத்தனையோ கோவில்களையும் மண்டபங்களையும் சித்திர சாலைகளையும் கடந்து, வழிகாட்டிகள் பின் விரைந்து நடந்தோம். ஸெண்ட் பீடர் மண்டபமும், கிறிஸ்து பைலேட் அரமனையில் ஏறிச் சென்ற இருபத்து நான்கு படிகளையும் வைத்துக் கட்டின கோவிலிலே, பக்தர்கள் கோஷ்டி பரவசமாய் அப்படிகளின் மேல் முழந் தாளிட்டு ஜபம் செய்து கொண்டிருந்த காட்சியும், மியூஸியங்களில் பார்த்த சில அற்புதமான சித்திரங்களும், சிலைகளும், எனக்கு இப்பொழுது சட்டென்று நினைவுக்கு வருகின்றன.

ரோமிலிருந்து நேபில்ஸுக்குப் போய், ரயில் மார்க்கமாயும் தூக்கு வழியாகவும் மலையேறி, வெஸுவியஸ் எரிமலைத் துவாரத்தை எதிரே சென்று பார்த்தோம். நாற்புறமும் மலைத் தொடர் சூழ்ந் திருக்க, நடுவே "லாவா" வட்டமாய், சம தரையாய்க் கிடக்கிறது; அதன் மத்தியில் ஒரு பன்னலைக் (குவிகுழாயை) கவிழ்த்தினாற் போல, எரி மலைத் துவாரம் கிளம்புகிறது; அத னுள்ளிருந்து அடிக்கடி இடி முழக்கம் போன்ற சத்தம் கேட்கிறது; அதன் வாயிலிருந்து பிரமாண்டமான புகைத் திரள் கிளம்பி, ஆகாயத்தில் பரந்து சிதறிப் போகிறது; அப்புகை முழுவதும் கறுப்பாய் ரயில் புகை போல் இல்லை; உயர எழும் புகை, சாம்பல் நிறமும் பொன் னிறமும் கலந்து, பருந்தின் சிறிய இறகுகள் பல்லாயிரம் சேர்ந்து பறப்பது போன்ற மிருதுவும் பிரகாசமும் தோன்ற, மிகவும் அழகான காட்சியா யிருக்கிறது. எங்களுடன் வந்த சிலர், வெஸுவியஸ் பயங்கரமான தென்றும், எல்லோரும் அதைப் போய்ப் பார்க்கத் தகா தென்றும்



சொன்னார்கள்; அப்படியே, அங்கு வந்திருந்த ஒரு ஸ்திரீ, எரி மலையின் புகையைக் கண்டு அதன் முழக்கத்தைக் கேட்ட வுடன், தன்னை யறியாமல் உடல் பதறி மூர்ச்சையாகத் தெரிந்தாள். எரி மலையால் அழிந்து போன பாம்பே நகரின் பாழிடங்களைப் பார்த்து விட்டுப் பீஸாவுக்குப் போனோம். அங்குள்ள அதிசயமான சாய்ந்த கோபுரத்தைப் பார்த்தோம்: அது, அழகாய், வட்ட வடிவாய், எட்டுத் தட்டு வைத்துக் கட்டி யிருக்கிறது. வெளிப்புறத்தி லிருந்து பார்த்தால், அதன் சாய்வு அலக்ஷியமாய்த் தோன்றுகிறது; உள்ளே படி யேறிச் சென்றால், அது ஒரு புறமாகச் சாய்வது, நாம் நிற்கும் நிலையிலேயே உடம்புக்குத் தெரிகிறது. அந்தக் கோபுரம் எண்ணூறு வருஷங்களுக்கு முன் கட்டின தென்றும், நூற்றெண்பதடி உயரமும் பதினைந்தடிச் சாய்வும் உள்ள தென்றும், பூகம்பத்தில் அதன் அஸ்திபாரம் ஒரு புறம் தாழ்ந்து விட்டதாகச் சிலர் சொல்வ துண் டென்றும், அது நிஜமில்லை யென்றும், அந்தச் சாய்ந்த கோபுரத்தின் சரித்திரம் ஒருவருக்கும் தெரியா தென்றும், எங்கள் வழி காட்டி சொன்னான். இதற்கு வெகு நாள் முன்பட்ட கட்டடங்களையும் கோயில்களையும் பற்றி எத்தனையோ பொய்யும் மெய்யுமான கதைக ளிருக்க, இவ் வதிசயமான கோபுரத்துக்குச் சரித்திர மில்லையே யென்று நாங்கள் ஆச்சரியப் பட்டோம். வழிகாட்டி சொன்னபடி அதற்கு முன்னூறு படிகள் இல்லை; இருநூற்றுப் பதினெட்டுத் தான் இருக்கின்றன வென்று எண்ணிப் பார்த்தோம். இதற்குள் ரயிலுக்குப் பொழுதாகி விடவே, பீஸாவிலிருந்து ஜெனோவாவுக்குப் புறப் பட்டோம்; அங்கிருந்து நீஸ், மான்டிகார்லோ முதலிய ஊர்களுக்குப் போனோம். எங்கள் ரயில் குகைகளின் ஊடேயே சென்றதென்று சொல்லலாம்; ஒருதரம் என் சிநேகிதியும் நானும் இரண்டுமணி நேரத்துக்குள் எழுபத் தெட்டுக் குகைகள் எண்ணினோம்; அப்புறம் அலுத்துப் போய்த் தூங்கிப் போய் விட்டோம்.

நேபில்ஸி லிருந்து நீஸ் வரையும் நாங்கள் பார்த்த நாட்டின் வளத்தை எனக்கு வர்ணித்துச் சொல்லத் தெரியவில்லை. ரயில் பாதையின் இருபுறமும், எலுமிச்சம் பழங்கள் கொத்துக் கொத்தாய் பழுத்துத் தொங்கின; மலைச் சாரலில் தட்டுத் தட்டாய் திராக்ஷைக் கொடி மேடைகள் போட்டிருந்தன. மரங்கள் பூவால் இலை மறைந் திருந்தன; பயிர் செய்யாத வெற் றிடங்களில் புல்லும் பூண்டும்

செழித்து, பூக்களால் தரை மூடியிருந்தது. நள வெண்பாவில் சொல்லும் பாட்டுக்க ளநேகம் தன்னை யறியாமலே என் நினைவுக்கு வந்தன: "பூ மடந்தை தன்னுட்டம் போலும் தகைமைத்தே:" அவள் இரு கண்களில், ஒன்று இந்தியா, ஒன்று இதாலியா.

இதற்குள் எங்கள் விடு முறை நாள்கள் முற்றிலும் கழிந்த விட்டன வாதலால், நீஸி லிருந்து நேராக லண்டனுக்கு வந்தோம். இங்கே நாங்கள் வந்த நாள் மழை பெய்தது; மறுநாள், டிசெம்பர் மாசத்திலும் கேடாக மப்பு மூடிக்கொண்டது. நாங்கள் ஸூரிச்சில் கேட்ட நற்செய்தி பொய்யோ வென்று ஏங்கினோம்; ஆனால் அன்று முதல், தினம் பிரகாச மான வெயில் அடிக்கிறது; அந்த வெயில் அதிக உஷ்ண மில்லை; ஒருவரும் இன்னும் கணப்பைக் கை விட வில்லை. ஆயினும் வஸந்த காலத்துக்கு அடையாளமாக, சாயந்தரம் ஏழுமணி வரையும், பகல் வெளிச்ச மிருப்பதும், மரங்கள் துளிர்த் திருப்பதும், பாத்திகள் பூ நிரம்பி யிருப்பதும், மனத்துக்கு சந்தோஷமா யிருக்கிறது.


## உதயலன் நாடகம்

ஷேக்ஸ்பியர் கவீந்திரரது மிகச் சிறந்த ஒதோல்லோ நாடகத்தை மிகப் பொருத்தமாய் அழகாய்த் தமிழில் அமைத் தெழுதியது.

இது வரை படித்திரா விட்டால் இன்றே வாங்குங்கள்

இரண்டாம் பதிப்பு—விலை 0—12—0

## சித்தார்த்தன்

கௌதம புத்தரது திவ்ய சரித்திரத்தை நவீனக ரூபமாகத் தனித் தமிழ் நடையில் எழுதியது. இஃதுடன் புத்த சரிதை என்னும் அழகிய இனிமையான செய்யுட் பாகமும் சேர்ந்திருக்கிறது. விலை. 0—12—0.






வியன்னா நகரம்

காரிபால்டி

# இன் கவித் திரட்டு

ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C., வெள்ளக்கால்

(229-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## குகரை "யார்?" என்று கோசலை கேட்கப் பரதர் கூறுதல்.

*என்றலுமே, அடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை "இவன் யார்?" என்று*
*கன்று பிரி காராவின் துயருடைய கொடிவினவக், கழற் கால் மைந்தன்,*
*"இன் துணைவன் இராகவனுக் கிலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்,*
*குன்றனைய திரு நெடுந்தோட் குகனென்பான் இந்நின்ற குரிசில்" என்றான்.*

பொழிப்புரை—(பரதர் கோசலா தேவியை இன்னார்) என்றவுடனே, தம் அடியில் விழுந்து நெடும் பொழுது (தொழுது கிடந்து) அழுது கொண்டிருந்த குகரை "இவன் யார்?" என்று கோசலாதேவி கேட்கப், பரதர், "இவர், இராமருக்குத் தம்பியார், இலக்குமணனுக்கும் சத்துருக்கனுக்கும் எனக்கும் தமயனார், குகர் என்ற அரசர்" என்றார்.

விசேடவுரை—ஒரு பெரியோர் இன்னாரெனத் தெரிவிக்கப் பட்ட ஒருவர் அப் பெரியாரை வணங்குதல் முறையாமென்பதை "என்றலுமே அடியின்மிசை நெடிது வீழ்ந்து" என்றதனால் உணர்த்தினார்.

"கோசலா தேவியீரே! உமது கணவனார் காலஞ் சென்றாரே! மகனாரும் காட்டி லுறையும்படி விதி யிருந்ததே"! என்று ஒரு சக்கரவர்த்தினிபால் துக்கம் விசாரித்தல் அநாகரிக மென்பது கூறவேண்டுவ தில்லை. துன்புற்ற அன்பரைச் சந்தித்த அன்பர் இயல்பாக அழுதல் தம்மை யறியாமலே துக்கம் விசாரித்தலா மென்பது விளங்கக், குகர் துக்கங் கொண்டாடுதலை, 'அழுவானை' என்ற ஒரே சொல்லால் சுருக்கமாகவும் துலக்கமாகவும் சூசிப்பித்த சொற்சாதுரியம் துதித்துக் கொண்டாடத் தக்கது.

'இவன் யார்?' என்ற கேள்வியில், "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? ஆர்வலர்—புன்கணீர் பூசல் தரும்" என்றவாறு, 'இவன் இப்படி அழும் அன்புடைமைக்குக் காரணம் யாது?' என்ற குறிப்பு வினா அடங்கியுள்ளது. ஆகவே, பரதர் அக் காரணத்தை முதற்கண்ணே தெரிவித்து விடுவாராய் 'உம் புத்திரன்' என்று உணர்த்த 'இன் துணைவன் இராகவனுக்கு' என்றார்.

'மூத்தான்' என்பது பின் வரப் பெற்றதனால், 'துணைவன்' என்பது, தனக்குரிய 'சகோதரன்' என்ற பொருள் பயந்த மட்டில் நில்லாமல், 'இளைய சகோதரன்' என்ற பொருளைக் குறிப்பித்தது. இராமர் குகரைத் தோழராகவும் சகோதரராகவும் ஒருங்கே கொண்டாரென்பதைத் 'தோழன்' 'சகோதரன்' என்ற இரு பொருளுமுடைய 'துணைவன்' என்றதனாற் குறிப்பித்தார். பரதர், இலக்குமணர் சத்துருக்கர் இருவருக்கும் மூத்தவரா யிருந்தும், தம்மை யிறுதியில் வைத்துக் கூறிய விநயம் கொண்டாடத் தக்கது.

முற் பாட்டில், பரதர், கோசலா தேவியை இன்னாரெனக் கூறிய போது, 'கோசலை' யெனப் பெயர் கூறாது விடுத்ததும், இப் பாட்டில், அவர், குகரை இன்னாரென்று கூறுங்கால், 'குகன் என்பான்' எனப் பேர் கூறியதும், முறையே, தசரதர் குடும்பத்தா ரெல்லாருடைய பெயர்களையும் குகர் முன்னரே அறிந்திருந்ததனாலும், குகரைப் பற்றிக் கோசலாதேவி இது காறும் ஒன்றும் அறியாதிருந்ததனாலும் என்பது கவனிக்கத் தக்கது. சுமித்திரா தேவி கைகேயி தேவிகளை யின்னாரின்னா ரெனக் கூறும் பிந்திய பாட்டுக்களில், அத் தேவிமார் பேர்கள், மேற் காட்டிய காரணத்தாற், கூறப்படா திருப்பதை நோக்குக.

கோசலா தேவி மக்களுக்குத் துக்க மாற்றி வாழ்த்துக் கூறுதல்.

'நைவீ ரலீர் மைந்தீர்! இனித்துயரால் நாடிறந்து
காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற் றுமன்றே:
விலங்கற் றிண்தோட்
கைவீரக் களிறனைய காளையிவன். தன்னோடும்
கலந்து, நீங்கள்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம்
அளித்திர்" என்றாள்

பொழிப்புரை—(கோசலா தேவி, பரத சத்துருக்கரை நோக்கிப்) "பிள்ளைகளே! (இவனை உங்கள் சகோதரனாகப் பெற்றுள்ளீர்களாதலால், நீங்கள்) இனிமேல், துன்பத்தால் வருந்தற் பாலீரல்லீர். இராம லக்குமணர் நாடு நீங்கிக் காடு சேர்ந்தது (என் மக்கள் நால்வரில் இருவரை இழக்கும்படி செய்த கேடு என்றிருந்தேன்; அஃது, அவ்வாறின்றி, நால்வரை ஐவராக்கிய) நன்மையாயிற்று. இவனோடு சேர்ந்து நீங்கள் ஐந்து சகோதரரும் (மன ஒற்றுமையால்) ஒருவரே போன்று விசாலமான பூமியை நெடுங்காலம் அரசாள்வீராக" என்று ஆசீர்வதித்தார்.



விசேடவுரை—கோசலாதேவி, குகர் இராமருக்குத் துணைவர் என்று தெரிந்த வுடனே, அந்நியர் தம்மவரானது பற்றி இமைப் பொழுதும் ஒரு சிறிதும் திகைக்காமல், அவரைப் பெற்று நெடுங்காலம் வளர்த்த தாயின் தன்மையுடையராகித், 'தாம் சக்கரவர்த்தினி, அவர் கேவலம் வேடர் தலைவர்' என்ற உயர்வு தாழ்வு ஓர் அணுவளவுந் தோன்றா தொழியத், தாய்மை பாராட்டி, அவர் அழுததற்கு ஆற்றுதலும் தொழுததற்கு வாழ்த்துதலும் செய்த சாதுரிய நிருவாகம் "அரசர் இற் பிறந்துபின் அரசர் இல் வளர்ந்து—அரசர் இற் புகுந்து பேரரசியான" அத் தேவியாரது உயர்ந்த பிறப்பு வளர்ப்பு முதலிய மேம்பாடுகளை உணர்த்துதல் ஊன்றி நோக்கி உவக்கற் குரியது.

இப்பாட்டும் இதற்கு முந்திய இரண்டு பாட்டுக்களும், கம்பர், அரசர் பலரோடும் அவர்களுடைய குடும்பத்தார் சுற்றத்தாரோடும் நீண்ட காலம் நெருங்கிப் பழகி, அவர்களுடைய பழக்க வழக்க ஒழுக்கம் அனைத்தும் நன்கறிந்தவரென்பதைக் குறிப்பனவாக இருத்தல் கவனிக்கத் தக்கது.

(இன்னும் வரும்)

## நிலவரி

### ஒரு குட்டிக் கதை

(19-24-ம் பக்கங்களைப் பார்க்க)

ஸ்ரீ. S. N. ஐயர், பம்பாய்.

ன்னிலம் தாலூகாவிலுள்ள ஒரு கிராமத்தில், அக்கிராமும் குடிவிடைகளும் சேர்ந்து நூறு வீடுதானுண்டு. பெரும்பாலும் அவை மண் சுவரும் ஓலைக் கூரையு முள்ள வீடுகள்தான். அவ்வூர்

வாய்க்காலின் கரையி லுள்ள கல் மண்டபப் படித்துறையில், பிள்ளை மாரில் ஒருவர் குளித்து விட்டு, கதர் துண்டுடுத்தி, கதர் வேஷ்டியைத் தோய்த்து மண்டபத்தின் அருகில் தரையில் உலர்த்தி, விபூதியை நெற்றியில் அணிந்து, கையில் ருத்திராக்ஷ மாலை யேந்தி, 'நமசிவாய' என்று ஜபம் செய்கிறார். கண் மூடி நிஷ்டையா யிருந்தாலும், அடிக்கடி திடுக்கிட்டு விழித்து, மீண்டும் சிந்தையில் ஆழ்ந்து போகிறார். ஒடுங்கிய மேனியும் சோர்வடைந்த முகமும் அவருள்ளத்தில் விளங்கும் எண்ணங்கள் வெளிவரப் பெருததா லுள்ள மனக் கிலேசத்தை நன்கு விளக்குகின்றன.

நித்திய கடனை முடிப்பதற்கு முன் வேஷ்டி உலர்ந்துபோய் விடவே, அதை உடுத்திக்கொண்டு, கையில் கிண்ணம் எடுத்து, தெருவில் சென்றார். "யாராகிலும் அன்னம் கொடுப்பவர்கள் உண்டோ—என் அரும்பசி கண்டு——யாராகிலும்" என்று பாடிக் கொண்டு, ஒரு வீட்டிற்கு முன் ஒரு நிமிஷங் கூட நிற்காமல் பிக்ஷை எடுத்துச் சென்றார். கிடைத்த அன்னத்தை வாய்க்கால் கரையில் வைத்துச் சாப்பிட்டு விட்டு, கிராமத்தி லிருக்கும் கனவான்கள் ஒவ் வொருவரிடமும் ஏதோ கலந்து பேசுகிறார். ஒரு வீட்டு வாசல் திண்ணையில் நாமும் சற்று உட்கார்ந்து கவனிப்போம்.

**வீட்டுக் கனவான்** :—நீர் இத்துடன் இருபது தடவை இப்படி வற்புறுத்தி யாய்விட்டது. என் பதில், முன்போலவே தான்: என்றைக்கு ஸர்க்கார் தீர்வையை அதிகமாக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார்களோ, அன்றைக்கே அதை நம்மிடமிருந்து வசூல் செய்யும் உபாயத்தையும் கருதி யிருப்பார்கள். 57-ம் வருஷத்துக் கிளர்ச்சியை அடக்கின வல்லமை யுள்ள வெள்ளைக் காரரை நீரும் நானும் எப்படி எதிர்க்க முடியும்?

**பிள்ளை** :—ஐயா! நீங்கள் சொல்கிறபடியே இருபதாவது தடவை முறை யிடுகிறேன்: இப்பொழுது நாம் செய்ய எத்தனிக்கும் சண்டைக்கும் 57-ம் வருஷத்திய சண்டைக்கும் அஜகஜாந்திர வித்தியாச முண்டு. அப்பொழுதோ, பீரங்கிக்குப் பீரங்கியும் குண்டுக்குக் குண்டும் பலிக்குப் பலியுமாய் யுத்தம் செய்தார்கள். அம் மாதிரி யுத்தத்தில் நம் அரசாங்கத்தினர் கை தேர்ந்தவர். இப்பொழுதோ பீரங்கிக்கு எதிராக அகன்ற மார்பும், குண்டுக்கு முன் ஊக்க முள்ள நெஞ்சமும் பலி கொடுக்கச் சித்தமாகி, "கூட்டுழையாமை" என்னும் அன்புருவ மாகிய அஸ்திரத்தைக் கைக் கொண்டு, வெற்றி அடைய முயலுகிறோம். இவ்விதப் போரில் நம்மை வெல்லும் வல்லமை யுள்ள அஸ்திரம் அரசாங்கத்தினர் சாஸ்திரத்தில் இல்லை.

**கனவான்** :—பிள்ளை! சற்று மெதுவாய்ப் பேசும். எப்பொழுது பார்த்தாலும், எந்தப் பேச்சு எடுத்தாலும், இது தானா? காந்தியின் வழக்கு, காந்தியின் முறை! ஏழைகளாகிய என்னைப் போன்றவருக்கு உம்முடைய பேச்சு மிக அபாயகரமா யிருக்கிறது. உமக்கென்ன! நாளைக்குக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு மற்றோர் ஊருக்குப் போய் விடுவீர். பிறகு ஸர்க்கார் என் தலையில் அல்லவோ உட்காருவார்கள்.



**பிள்ளை** (தலை குனிந்த வண்ணம்):—நீர் சொல்வது ஒரு விதத்தில் உண்மை தான். ஆனால் சர்க்காருக்கு இப்படிப் பயப்படுகிறீரே; உம்முடைய சகோதரர்களுடனும், உம்முடன் பிறந்து வளர்ந்த இந்தக் கிராமத்தாருடனும் ஒத்துழையாமையால், நாள் தோறும் இவர்களைக் கண்டு தலை குனிந்து நேரே விழித்துப் பார்க்க முடியாமல் போகுமே என்று ஏன் பயப்படுவ தில்லை? மேலும், என்னைப் போலாய்விட்டால் தான் என்ன? கிண்ணத்தை எடுத்துக் கொண்டு நினைத்த போது போய்விடலாமே! வீடும் குடித்தனமும் என்று பயந்து, அடிமைக்கு அடிமையாக ஊழியம் செய்கிறீரே, இதென்ன கௌரவம்?

இப்படிப் பேசி முடித்து விடை பெற்றுக் கொண்டார்.

மாலைப் பொழுதில், மண்டபத்தின் அருகில், அந்தி வந்தனம் செய்ய வந்த அந்தணரும், நீர் சுமந்த குடங்களை இடுப்பில் ஏந்திய மங்கையரும், பகலில் செய்த வேலையின் களைப்பாறக் குளித்து மயிரை விரல்களால் வாரி நின்ற பிறரும், இதர குடிவிடை ஜனங்களும், ஓர் அரச மரத்தின் அடியில் நின்று "செவி யுள்நாவின் சுவை கொண்டு மகிழ்ந்து" நிற்கிறார். அணி அணியாய் விபூதி விளங் ம் நெற்றியும் மார்பும், உழைப்பு என்னும் அன்பின் காந்தி பா முகமும், அளவிலா ஆநந்தத்தில் மூழ்கிய கண்களுமாய், "ட ளை" பாடுகின்றார். பல மழலைகள் பேசும் பதினெட்டுக் குழந்தைகளையும் ஒன்று போல் பாவித்து, ஒருமையாய் வளர்க்கும் பாரதமாதாவின் பெருமையும், ஏழைக்கும் ஏழையாய் தேச சேவை என்ற உருவம் எடுத்த மகாத்மா காந்தியின் மகிமையும், வெளுத்தவர் கறுத்தவர் என்னும் வேற்றுமை யெல்லாம் நீங்கி எங்கும் பரவிய பரமாத்மாவின் தேஜோமயாநந்தம் பெருகி ஒற்றுமையாய் வாழும் உலகம் கைக் கொண்ட கொடியை நாட்டிய இந்திய நாட்டின் இனிமை வாழ்த்தும், கேட்கக் கேட்க வியப்புற்று, அகன்று போக மனம் வாராமல், கீதமாகிய பாசத்தில் கட்டுண்டு நிற்கிறார்கள், கிராம வாசிகள். இந்தப் பாட்டிற்குச் சுருதி, மண்டபத்தின் தூண்களின் இடைகளிலும் அருகிலுள்ள சோலைகளிலும் வீசும் வாயு பகவானுடைய கைங்கரியம்; ஆண்டியின் கிண்ணமே மிருதங்கம்; கையிலுள்ள ருத்திராக்ஷ மாலையின் மணிகளால் அதில் த்வனி வருத்துகிறார். எனினும், பிச்சையின் மகிமை "விரலிலுள்ள வைர மோதிர மல்ல, உள்ளத்திலிருந்து கனிந்துவரும் ஆதரவாம்" என்றபடி, கேட்பவருக்குப் பிள்ளையின் பாட்டு அளவிலா ஆநந்தம் அளித்தது.

பாட்டும் தாளமும் நின்று விட்டது. கை கூப்பி வணங்கி, 'பிள்ளை' பிரசங்கம் ஆரம்பித்தார். "தீர்வை செலுத்தாமை என்னும் கடமை"யைக் குறித்துப் பேசலுற்றார்:—"நண்பர்களே! ஐயம் பேட்டையில் இந்த வரி செலுத்தாமை என்னும் தீர்மானம் செய்த போது, பொது ஜனங்களுடன் சேர்ந்து, வேறு சகாய மில்லாத ஒரு விதந்து, 110 ரூ. வரிக்காக 2,000 ரூ. விலையுள்ள தன் வைர அட்டிகையை மனமுவந்து, வரிபிரிக்க வந்த உத்தியோகஸ்தனிடம் கொடுத்து, அதை ஏலம் போட்டுக் கிஸ்தை வசூல் செய்யும் திறமுண்டானால் செய்து கொள்ளச் சம்மதம் கொடுத்

தாள். அவளுடைய வலிமையும் மனோபாவமும் ஆணாகப் பிறந்து பயின்ற மகான்களாய் உமக்குள் விளங்கும் சிலவருக் கில்லையே! ஐயா! 200 கலம் நெல்லை இரண்டு ரூபாவுக்குக் கூட ஏலத்தில் வாங்க ஒருவருக்கும் தைரியம் வாராதபடி, பொது ஜனங்களின் மனம் திடமாகுமாறு; ஒரு கிராமத்தில் செய்ய முடியுமானால், வேறு ஊர்களில் ஏன் முடியாது?"

ஒருவரும் பதில் சொல்ல வில்லை. "பிள்ளை" யிடம் பகலில் பேசிக் கொண்டிருந்த 'கனவான்,' எல்லோர் கண்களும் தன்னை நோக்க, சற்று அகன்றார். இதற்குள், ஒருவர் முன் வந்து, "ஆம்! ஆனால் ஒரு கேள்வி. அந்த வைர அட்டிகையை யாரோ 120 ரூபாவுக்கு வாங்கினார்களாமே. ஒற்றுமை என்றீரே, அதெல்லாம் எங்கே போய் விட்டது?" என்றார்.

**பிள்ளை** :—நீர் சொல்வது உண்மையே. அன்று பஞ்சமகா பாதகத்திலும் கொடுமையாகிய பொது ஜனத்தின் மனோ பங்கம் என்னும் பாபத்தைச் செய்த புழு, உங்கள் முன்னே இப்பொழுது நிற்கிறது. அன்றிரவு என் தமக்கையிடம் நகையை நான் காட்ட, அவள், "கிஸ்துக்காக ஏலம் செய்ய வேண்டிக் கொடுத்த இந்த அட்டிகை உன்னிடம் எப்படி வந்தது?" என்று கேட்டாள். அன்று செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தமே இன்னும் செய்து வருகிறேன். இந்த யுத்தம் முடிவது வரை என்னால் இயன்ற மட்டும் அதன் முன்னேற்றத் திற்காக முயலுவேன். அன்று செய்த கொடும் பாபமாகிய அக்கினியில் என்னைச் சூழ்ந்திருந்த தீவினைகள் எல்லாம் த்வம்சமாகி, ஈசனது அருளால் உங்கள் முன் கூட நான் செய்த குற்றங்களை வெட்க மின்றித் தாழ்மையுடன் ஒப்புக்கொள்ளும் வலிமையைப் பெற்றேன். அமீனாபீ என்னும் தாசிக்கு தாசனா யிருக்கும் பொழுது பயின்ற பாட்டுத் திறமை, இன்று உங்கள் மனத்தைக் கவரவல்ல திறத்தை எனக்குக் கொடுத்தது. கிண்டிப் பந்தயத்தில் பந்தயம் தட்டுவதில் செலுத்தி வந்த புத்தியின் நுட்பத்தை உங்கள் சேவடியின் சேவையில் அர்ப்பணம் செய்தேன். எத்தகைய தீமையிலும நன்மையைத் துளிர்க்கச் செய்யும் வல்லமை எம்பெருமானது லீலைக்குண்டு. இழிவாக ஜன்மத்தைப் பாழாக்கி வந்த என்னையும் அவனது காரியங்களில் கூட்டி வைத்தது போல், நம் நாட்டில் நெல் பயிரின் கிஸ்துக் காகப் படும் துயரத்தி லிருந்து என்ன அருமையான பயிர் விளையப் போகின்றதோ, அது அவன் ஒருவனுக்கே தெரியும். அவன் நினைத்தால் முடியாதது ஒன்றுமில்லை. ஆகையால், அவன் மீது பூர்ண விசுவாசத்துடன், "அதிக வரி கொடுப்பதில்லை" என்ற சபதத்தை மற்றொரு முறை கூறுங்கள்," என்று 'பிள்ளை' பிரசங்கத்தை முடித்தார். அன்று சபதம் கூறினவரில் நமது நண்பரான "கனவான்" ஒருவர்.

"இது நம்ப முடியாது! தங்கவேற் பிள்ளை யாவது, இப்படி மாறுவதாவது! அசாத்தியம்! 'அப்படித்தான்' என்றால், 'ஆம்' என்று எப்படி மண்டை யாட்டுவது" என்று, இதை வாசிப்பவர் பலர் கேட்பார்கள் என்பது திண்ணம். ஆனால், உண்மையாகவே, இந்தக் கதையில் சொல்லி யிருக்கும் செய்திகள் நடந்தன. தவிர,



இதிலும் விந்தையான கதைகள் "சத்தியாக் கிரகச் சண்டை" என்ற சரித்திர நூலாசிரியரால் வெளியிடப்படும். ஸர்வ... ஸ்வரூபமாகிய சச்சிதானந்த மூர்த்தியின் விழியருள் ... மீதிருக்கும் வரை எதுவுமே அசாத்தியமன்று.

20764
சென்னை-600 005.

## இயற்கை ஆராய்ச்சி.

நான் படித்து வரும் "தேளின் ஜீவிய சரித்திரம்" என்னும் நூல் 180 பக்கங்கள் கொண்டது. ஹென்ரிவேபர் என்ற ஓர் ஏழைப் பிரஞ்சு உபாத்தியாயர், தன் எண்பதாவது வயதுக்கு மேல் எழுதியது. இஃதுடன், இன்னும் 170 பக்கங்கள் அடங்கிய "செடிகளின் பேன்கள்" என்னும் நூலும் சேர்க்கப்பட் டிருக்கிறது. இவர், வண்டு குழவி தத்துக்கிளி விட்டிற் பூச்சி வண்ணாத்திப் பூச்சி தேனீ ஈ சிலந்தி முதலிய சிறு பிராணிகளை ஆராய்ந்து பார்த்து, இது போன்ற வேறு புஸ்தகங்கள் பதினான்கு வரை எழுதி யிருக்கிறார். தேள்களைக் கூட்டம் கூட்டமாய்ப் பிடித்து வைத்துக் கொண்டு, ஒரு நாள் போல் பல மாதங்களாக, இரவு பகலென்ப தின்றி, அவற்றின் பழக்க வழக்கங்களையும் இயல்பையும், எண்பது வயதுக்கு மேல் இவர் ஆராய்ந்து வந்த வரலாற்றைப் படிக்கப் படிக்க, ஆச்சரியம் அளவு கடந்து பொங்குகின்றது. இவ்வண்ணம் இயற்கையைப் பொறுமையுடன் ஆராய்ந்து, இயற்கை யறிவை விருத்திசெய்யும் சுவபாவம், நம்மவரினும் மேலையர்க்குள் மிக அதிக பென்பது நிச்சயம். "என் அழகிய சிறு குழந்தைகளே!" என்று, தேள் குஞ்சுகளை இவர் அன்புடன் முன்னிலைப் படுத்தி எழுதி யிருப்பது, நம்மவர்க்கு நகைப்பையே விளைக்கும். இவ்வாறு கவனித்து, இவர் தேளின் வாழ்க்கையைப் பற்றிக் கண்டு பிடித்துள்ள சில விசேஷங்களைக் குறிப்பிடுவோம்:—

(1) தேள்கள் ஆகாரமின்றிப் பல மாதங்கள் சீவித்திருக்கும். (2) அவற்றின் உடல், பிற்கிளையாக்கக் கருவிகள் அடங்கியது; ஐந்து கணுக்களாலாகிய வால் தான், வயிறு. (3) அவை இணை சேர்வது விந்தையே: ஆண் தேள் பெண் தேளுக்குக் கைலாகு கொடுத்து, ஒரு தனியிடத்துக்கு அழைத்துச் செல்லும்; அங்கே அவை கைகோத்த வண்ணமே நெடு நேரம் நிஷ்டையிலிருப்பது போல் இருக்கும்; பிறகு தனிமையில் இணை சேரும்; இணை சேர்ந்து பெண் தேள் கருக்கொண்ட நிமிஷமே, ஆண் தேள் தன்னை விடுவித்துக் கொண்டு தப்பி யோடிப் போகாவிடின், பெண் தேள் ஆணைக் கொன்று தின்று விடும்! (4) தேள்கள் குஞ்சு பொரிப்பதில்லை; முட்டை யிடுகின்றன. முட்டை யிட்டபின், தாய்த்தேள், தன் கையிடுக்கியால் முட்டைகளைச் சூழ்ந்துள்ள மெல்லிய தோலைப் பீறிக்கிழித்துக் குஞ்சுகளை வெளிவரச் செய்யும். (5) சிறு சிசுக்கள் தாயின் முதுகின் மேல் சில காலம் வாழும்

M211,N24PM
N24·1·4



தேள் தம்பதிகளின் பாணிக்கிரகணம்

பெண் தேள் ஆணைக் கொன்று தின்னுதல்

சித்திகளையும் அபூர்வ சக்திகளையும் பெற வேண்டியும், ஆத்ம ஞானத்தை அடைய முயன்றும், நம்மவர் அரும்பெரும் நோன்புகள் நோற்று, கொடிய தவங்கள் இயற்றுவர்; அப்பொழுது பசி தாகம் முதலிய உபாதிகளையும் காயத்தையுமே திரணமாய் நினைத் தொழுகுவர். இயற்கை யறிவைப் பெருக்குவதிலும், இயற்கையிலுள்ள அற்புதங்களைக் கவனித்து மனமகிழ்ந்து பரவசமாவதிலும், நம்மவர்க்கு அக்கறை பொதுவாய் இல்லை யென்றே கூறலாம். இவ் வியற்கைப் பயிற்சி அத்தியாவசிய மென்று கூறவும் வேண்டுமோ? இவ்வாராய்ச்சிக் குறைவால் நம்மவர்க்குள் பல போலி நம்பிக்கைகள் வழங்குவதை யாவரும் அறிவர். ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, "யானை யுண்ட விளங்கனி" என்று பெரும் புலவருமே வழங்கிவரும் உவமானம், இதற்கோர் சாக்ஷியாகும்; அதை 'மரபு' என்று மழுப்புவது மரியாதை மொழியே யாம்.—ப-ம் ப-ர்.



தன் கணவர் பர பரப்பையும் மனக் கொதிப்பையும் கிலேசத்தையும் கண்டு சிறிது பயந்து, பத்மாவதி யம்மாள் ஒன்றும் பேசாமல் நின்றாள். அவரோ, தன் கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டு, சிந்தனையில் ஆழ்ந்தவரா யிருந்தார். சற்று நேரத்துக்குப் பின் தன்னை யறியாமல் மனத்திற் பொங்கும் ஸந்தோஷத்தினாலும் பெருமையினாலும், அவள், அவரை மெதுவாய்க் கையின் மேல் முத்த மிட்டாள். அவரும் கனவி லிருந்து விழித்தவர் போல் எழுந்து, மனக் கசப்புடன், "இதெல்லாம் சுயங்கிருதா அனர்த்தமே யொழிய வேறில்லை. முன்னவர் பேரில் குற்றமே யில்லை; தங்கள் காலத்துக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றபடி அவர்கள் ஏற்படுத்தினார்கள். நாமும் இப்பொழுது ஆரணியங்களிலும் ஆசிரமங்களிலும் வேதாத்தியயனம் செய்து கொண்டிருந்தால், அப்படியே நடக்கலாம். காலத்துக்குத் தக்கபடி மாறக் கூடாதென்று அவர்கள் விதிக்கவு மில்லை; நாம் மற்ற விஷயங்களில் மாறாம லிருக்கவு மில்லை, நடுவே வந்த சில துர் வழக்கங்களை மட்டும் சர்வ சாம்பிராச்சியமாக வைத்துக் கொண்டு, நாம் இப்படித் திண்டாடுகிறோம்; என்று விடியுமோ தெய்வத் துக்குத் தான் தெரியும்." என்று சொன்னார்.

அன்று 'மீட்டிங்கில்' பிரசங்கஞ் செய்தவர்களில் அவரொருவர்; விஷயம்: "ஏக குடும்பமாய் வாழுதல் இக் காலத்துக்கு ஏற்குமோ?" என்பதே. அன்றிரவு அவர் "ஹாம்லெட்" நாடகம் பார்க்கப் போக வில்லை,

## நான்காவது அதிகாரம்.

"நாளை நம்ம ராஜா பிறந்த நாள்; மாமா நக்ஷத்திர ஹோமம் செய்ய வேணும் என்கிறார்." என்றாள் பத்மாவதி யம்மாள்.

"நக்ஷத்திரமாவ தேது! ஹோமமாவ தேது இதெல்லாம் நான் சம்மதிக்க மாட்டேன். பணச் செலவுக் காக நான் சொல்ல வில்லை: எனக்கு நம்பிக்கை யில்லை, என் குழந்தைக்கு வேண்டாம். இராமு பிறந்த நாளன்று ஆயுஸ் ஹோமம் வேண்டுமானாலும் செய்யட்டும், நான் தடுக்க வில்லை," என்று நாராயணையர் பதிற் சொன்னார்.

பத்மா:—கூட இரண்டு பிராமணர்களைக் கூட்டிக் வரும்படி வாத்தியா ரிடத்தில் சொல்லியாய் விட்டது. சனிக்கிழமை வருகிறது: குழந்தைக்குப் பீடை யெல்லாம் தீரும், ஆயுஸ் விருத்தியாகும், செய்யத்தான் வேண்டும் என்கிறார். ஏதாவது சொன்னால் சண்டை தான் வரும்.

நாரா:—சரி, நடக்கட்டும்; என்னை மட்டும் தொந் திரவு பண்ண வேண்டாம்; நான் புகையில் கண்ணை அவித் துக் கொள்ள மாட்டேன்; சாப்பாட்டுக்கு முன் கீழே வரவே மாட்டேன்.

பத்மா:—போகட்டும், சாப்பிடவும் வரமாட்டேன் என்காமல் இவ்வளவாவது தயவு பண்ணினது பெரிய காரியம் தான்." என்று, சிரித்துக் கொண்டு போய்விட் டாள்.

மறுநாள் வீட்டில் விருந்துச் சமையற் புகையும் ஹோமப் புகையும் வைதீகர் கோஷமுமா யிருந்தது. நாராயணையர் தன் மனைவி கையில் செலவுக் கென்று ஐந்து ரூபாவைக் கொடுத்து விட்டு, ஸ்நாநத்துக்குப் பின்பு மாடி யிலேயே இருந்தார்; சனிக்கிழமை யானதால் அவர் பள்ளிக் கூடத்துக்கும் போக வில்லை. பத்து மணிக்கே ஆசுபத் திரியி லிருந்து திரும்பி விட்ட கோபாலையரும் அவருட னிருந்தார். சுமார் பன்னிரண்டு மணிக்கு, அலங்காரமான ஆடை குங்குமம் சந்தனம் புஷ்பம் எல்லாம் அணியப் பெற்றிருந்த அவர் மகன் சீதாபதி வந்து, அவரையும் கோபாலையரையும் நமஸ்காரஞ் செய்து, சாப்பிடக் கூப்





பிட்டான். அவர்கள் அவனை வாழ்த்தி முத்த மிட்டுப் பரிகாசஞ் செய்து தூக்கிக் கொண்டு, கீழே இறங்கினார்கள். இலைகள் போட்டுத் தயாராகப் பரிமாறி யிருந்தது. ஐயா வையரும் நான்கு வைதீகரும் இலைகள் முன் வீற்றிருந்தார் கள். இவர்களும் போய் உட்கார்ந்தார்கள்.

"யாராவது திடீரென்று உள்ளே வரப் போகிறார் கள், வாசற் கதவைத் தாழிட்டு விடு," என்றார் ஐயாவையர். பத்மாவதியம்மாள் அப்படியே சென்று தாழிட்டாள். பின்பு அவளும் அவள் தாயுமாகக் குறையும் பரிமாறினார் கள். சாஸ்திரோக்தமாக சுப்பம்மாள் தீர்த்தம் வார்த் தாள்; உபாத்தியாயர் கிருஷ்ண கனபாடிகள், "ஹரி:!" என்று தீர்த்தம் வாங்கிக் கொள்ள உத்திரவு கொடுத்தார். இரஸம் எடுக்கும் சமயத்தில் வாசற் கதவு பலமாய் அடுத் தடுத்துத் தட்டப் பட்டது. சுப்பம்மாள் போய்க் கதவைத் திறந்து பார்த்தாள். உடனே ஒருவர் நடைக்குள் நுழைந் தார். அவள் சாப்பாட்டு வேளை யென்று சொல்லியும் கேட்க வில்லை. அவள் திடுக்கிட்டு உள்ளே திரும்பி வந்து, "யாரோ ஒருத்தன், சட்டைக்காரன் மாதிரி யிருக்கு, நடைக்குள்ளே வந்து நிற்கிறானே!" என்றாள்.

அதற்குள், "உள்ளே வரலாமடா, பயலே! எனக் கும் நாய் போல் பசிக்கிறது; நல்ல சமயத்தில் வந்தேன்." என்று இங்கிலீஷில் சொல்லிக் கொண்டே, நடைக் கதவை யும் திறந்து, ஒருவர், இவர்கள் சாப்பிடும் இடத்துக்கே வந்து விட்டார். ஐரோப்பியர் உடை யுடுத்துக் கையில் ஒரு தொப்பியுடன் வந்தார்; தலை கத்தரித் திருந்தது. ஐயாவையரும் வைதீகர்களும் திடுக்கிட்டுத் திகைப்பதைக் கண்டு, அவர், "நானும் பிராமணன் தான்." என்றார்.

"ரெங்குவா!" என்று நாராயணையரும் கோபாலைய ரும் ஏக காலத்தில் ஆச்சரியத்தோடு கூவினார்கள்.

"பின்னை யார்? இங்கே ஒரு இலையைப் போடச் சொல்லு. மற்றவை அப்புறம் பேசிக் கொள்ளலாம். என்ன! வடை, அப்பளம், போளி, பழம்! நான் தந்தி கொடுக்கா விட்டாலும், நாணு, விருந்து தயாராய் வைத்திருக்கிறாயே! இதோ வண்டியை நிற்கச் சொல்லிக், கைப் பையை மாத்திரம் உள்ளே எடுத்துக் கொண்டு, வந்து விடுகிறேன். அதற்குள் ஒரு இலையில் பரிமாறச் சொல்லு."

நாரா :—வண்டி நிற்பானேன்? உடனே போகவேண்டுமா என்ன?

வந்தவர் :—"இன்று சாயங்காலம் வரவேண்டிய 'ஸ்டீமர்' பதினொரு மணிக்கே வந்து விட்டது. பக்கத்திலிருப்பதால், உங்களையும் பார்த்து விட்டுச் சாப்பிட்டு விட்டுப் போகலாமென்று நேராக இங்கே வந்தேன். எங் கண்ணு வந்திருப்பான்; அவன் எங்கே யாருடன் இறங்கியிருக்கிறானோ உடனே பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் 'ஸ்டீமரு'க்குப் போய்விடுவான்." என்று சொல்லிக் கொண்டே வெளியே போனார்.

ஐயாவையர் :—நாணு! இவர் யார்? பிராமணாள் தானா? ஸ்டீமரேது ஸ்டீமர்?

நாராயணையர் உடனே பதிற் சொல்ல வில்லை.

கோபாலையர் :—இவர் எங்களுடன் வாசித்தவர்; ரெங்கசாமியையர் என்று பேர்; எங்கள் ஜாதி; சீமைக்குக் கலெக்டர் பரீக்ஷை கொடுக்கப் போயிருந்தார். பரீக்ஷை தேறி விட்டது; இப்பொழுதே திரும்பி வந்திருக்கிறார் போலிருக்கிறது. சீக்கிரம் பெரிய ஜில்லா கலெக்டர் உத்தியோகம் கூட ஆய்விடும்.

கிருஷ்ண கன பாடிகள் :—அப்படியா! பெரிய கலெக்டர் உத்தியோக மாகுமா?

கோபா :—ஆமாம், அதிற் சந்தேக மில்லை; அதற்கு மேலான உத்தியோகம் கூட ஆகும்.





இதற்குள் தன் கணவர் சொல்லியபடி, பத்மாவதியம்மாள், அவர் பக்கத்தில் ஒரு பெரிய இலையைப் போட்டுப் பரிமாறினாள்.

ஐயா :—அதிருக்கட்டும், கோபு; இவருக்குச் சீமையிலே சமைய லெப்படி, சாப்பா டெப்படி, கூட யார் போயிருந்தார்கள்? அதைச் சொல்லும் கேட்போம்.

கோபா :—கூட வேது கூட? அவர்தான் போயிருந்தார்: அங்கே ஒரு வீட்டிலாவது களப்பிலாவது சாப்பிட்டுக் கொண்டிருந் திருப்பார்.

ஐயா :—வெள்ளைக்காரர் கூடவா?

கோபா :—பின்னை யென்ன செய்கிறது? ஆபத்துக்குப் பாபம் இல்லை யென்று சொல்வ தில்லையா? பட்டினியே கிடக்க முடியுமா?

கனபாடி :—அது முடியுமா? ஒரு நாளா இரண்டு நாளா? ஆபத்துக் காலத்தில்,———

ஐயா :—திவ்யம்! திவ்யம்! நல்ல ஆபத்திது, நன்றாய் வந்தது! அடியே! எங்களுக்கு மோரை விடு, நாங்கள் சீக்கிரம் எழுந்திருக்கட்டும்; இன்றைக்கு இவ்வளவு போதும்.

சுப்பம்மாள் பாயஸத்தை எடுத்துக் கொண்டுவந்ததைக் கண்டு, "மோரை எடு என்கிறேனே!" என்று அவள் கணவர் மறுபடியும் சினந்து சொல்ல, அவள் மோரை யெடுத்து வந்து அவருக்கும் வைதீகர்களுக்கும் பரிமாறினாள். அவர்கள் அவசரமாய்ச் சாப்பிட்டார்கள்.

நாரா :—அவரும் நம்மைப் போல பிராமணன் தானே, மாமா! இப்படிச் செய்வது அவருக்கு எவ்வளவு அவமானமா யிருக்கும்?

ஐயா :—எல்லாம் நீங்கள் கூட இருந்து சாப்பிட்டு வெகுமானப் படுத்தினால் போதும்; வெள்ளைக்காரர் மாதிரி, அவனையும் வேண்டுமானால் கூட உட்கார வைத்துக் கொள். கெட்ட கேட்டுக்குப் பிராமணன் வேறா!

இதற்குள் ரெங்கசாமியையர், 'பூட்ஸை' மட்டும் கழற்றி வைத்து விட்டுத் திரும்பி வந்து விடவே, ஐயாவையரும் வைதிகர்களும் தாமே உத்திரா போஜனம்



வார்த்துக் கொண்டு எழுந்திருந்து விட்டார்கள். ரெங்கசாமியையர் முகம் சுண்டிப்போய் விட்டது; முன் வைத்த காலைப் பின்னிழுத்துக் கொண்டு அவர் திகைத்து நின்றார்.

நாரா :—சும்மா, வா, ரெங்கு; இதோ, இந்த இலையில், என் பக்கத்தில் உட்காரு; அவர்கள் கிடக்கட்டும்; அவர்கள் சங்கதி நமக்குத் தெரியாதா ?

ரேங்கு :—இல்லை, நான் பின்னால் சாப்பிட்டுக் கொள்கிறேன்; நீங்கள் சாப்பிடுங்கள்.

உடனே நாராயணையர், தன் கலகத்தை விட்டு எழுந்து போய், இடது கையால் அவரைப் பிடித்திழுத்து வந்து, தன் பக்கத்தில் உட்காரவைத்தார். அவர்கள் மூவரும் பேசிக் கொண்டே சாப்பிடலானார்கள்.





அன்று மாலை நாலு மணிக்கு, அவர் மனைவி மரணதிசையி லிருப்பதாயும் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும் கோபாலையருக்குத் தந்தி வந்தது. ஆறு மணி ரயிலிலேயே அவர் திருநெல்வேலிக்குப் புறப்பட்டு விட்டார்; ஐயாவையரும் சுப்பம்மாளும் அவருடன் தங்களூருக்குப் போய் விட்டார்கள். சீதாபதியுடன் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்த அவர்கள் மகன் இராமபத்திரன் மட்டும் இருந்தான். நாராயணையர், அவர்களைத் தன்னுடனிருக்கச் சொல்லி நிர்ப்பந்தப் படுத்தவில்லை; மரியாதைக்கு மட்டும் சொன்னார்; பத்மாவதியம்மாளுக்கோ, அதிக மனவருத்தம் தான்.

## ஐந்தாவது அதிகாரம்.

மறுநாள் முதல் பத்மாவதி யம்மாள் காலையில் ஐந்து மணிக்கே எழுந்து வீட்டு வேலைகளை யெல்லாம் தானே செய்ய வேண்டியதாயிற்று; அவள் கணவர், கடைகளுக்குச் சென்று வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வருவதுடன், குழந்தைகளையும் அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டியதாயிற்று; இம் மட்டோ, தன் கணவர் கலாசாலைக்கோ வேறு வேலையாகவோ வெளியே போன பொழுதெல்லாம், பத்மாவதி யம்மாள், வீட்டில் தனியே இருக்க வேண்டியதாயிற்று. "அத்தை அருமை செத்தால் தெரியும்," என்னும் பழமொழியின் பொருள் அப்பொழுது தான் விளங்கிற்று. ஒரு நாள் மாலை பத்மாவதி யம்மாள் வீட்டு வாசல் திண்ணையில் நின்று தன் கணவர் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, ஒருவன் வந்து, "ஐயர் அதோ கடையில் ஆரஞ்சுப் பழம் வாங்குகிறார்; ஒரு ரூபா வாங்கிக்கொண்டு வரச்சொன்னார்" என்று கேட்டான்; நிஜமென்று நினைத்து அவளும்

கொடுத்தாள்; அவனை இதுவரையும் திரும்பிக் காணவில்லை!

இந்த அசௌகரியங்களை எல்லாம் உத்தேசித்து நாராயணையர் வேலையாள் விசாரிக்கத் தொடங்கினார். தன்னாலேன்ற மட்டும் பார்த்தும், சரியான பிராமண ஸ்திரீகள் ஒருவரும் அகப்படவில்லை. ஒரு விதந்து மட்டும் சாப்பாடு தவிர மாதம் ஆறு ரூபா என்று பேசி வந்து இரண்டு நாள் வேலை பார்த்தாள். "எச்சிலும் தீண்டலுமாக இந்த வீட்டில் யார் இருப்பார்கள்?" என்று ஏசிக் கொண்டு போய் விட்டாள். பின்பு பிராமணப் பையன்கள் பார்த்தார்: "பெண் பிள்ளைகள் இருக்கும் வீட்டில் மாசம் நூறு ரூபா கொடுத்தாலும் நம்மா லிருக்க முடியாது," என்றான் ஒருவன். "நான் சந்நியாசம் வாங்கிக் கொண்டால் எனக்கு வேலையாள் எதற்கு?" என்று அவனை அனுப்பிவிட்டு, வேறாள் விசாரித்தார். "ஸார்! நான் அடுப்பு அடுக்களை மெழுக மாட்டேன்; பெண்டுகள் எச்சிலெடுக்க மாட்டேன்; பழையது சாப்பிட மாட்டேன்; பற்றுப் பாத்திரங்கள் தேய்க்க மாட்டேன்; பத்து மணிக்குள் சாப்பாடு ஆகிறதா யிருந்தால் மூன்று மணிக்கு டீ வேணும்; இல்லாவிட்டால் உதயத்திலே காப்பி வேணும்; மாஸம் பன்னிரண்டு ரூபா கறார்; சம்மதமானால் நம்மிடத்தில் பேசலாம்," என்றான் ஒருவன். "காலமே எட்டு மணிக்கு வருவேன், பதினொரு மணிக்கு விட்டு விடவேணும்; ஸாயங்காலம் 4½-மணிக்கு வருவேன் ஒன்பது மணிக்குப் போய் விடுவேன். நமக்குச் சம்பளம் பன்னிரண்டு தான்" என்றான், மூலைத்தார் சந்தனப்பூச்சு தாம்பூலம் சாந்துப்பொட்டு தலைச்சொருக்குடன் இலங்கும் ஒருவன்; பொடி டப்பி இடுப்பு வேஷ்டியிற் சொருகியிருந்ததால், நாம் முதலிற் சொல்லவில்லை. "நான் சமையற் காரன் தான்; வஞ்சகமில்லாமல் வேலை பார்க்கிறேன்;



# மறச் சுவை

ஸ்ரீ. அ. மாதவையர் சென்னை.

இலக்கிய நூல்களிலும் உலக வாழ்க்கையிலும் நாம் அதிகம் பாராட்டி அநுபவிக்கும் ரஸங்களில், சிங்கார வீர பக்தி ரஸங்களே சிறந்தனவாம். இச் சுவைகளை நாம் நுகருவதில் உண்டாகும் மனமகிழ்ச்சியின் காரணம் மனிதரது இயற்கைக் குணத்தில் ஆழ்ந்து வேரூன்றியுள்ளது. நாச் சுவைகளில், சிலர் தித்திப்பையும், சிலர் புளிப்பையும், சிலர் கார்ப்பையும் மிக்கு விரும்புவது போல, இவ் வுள்ளச் சுவைகளிலும், இயற்கைப் பண்புக்கும் பயிற்சிக்கும் பருவத்துக்கும் ஏற்ற படி, மக்களுக்குள் விருப்பு வெறுப்பு வேற்றுமைகளைக் காணலாகும். பொதுப் படக் கூறின், இளமையில் காத லின்பச் சுவையும், நடுப் பிராயத்தில் மறச் சுவையும், மூப்பில் பக்தி ரஸமும், உள்ளத்தைக் கொள்ளை கொள்வது இயல்பாகும். இது பருவத்துக் கேற்ற பான்மை; பயிற்சியினாலும், பிறவிக் குணத்தாலும் மாறிக் காண்பது இயல்பே. மறச் சுவை என்னும் வீர ரஸம், உள்ள நிகழ்ச்சிகளை மட்டுமின்றி, உடல் வன்மையையும் திமிரையும் ஒரு வாறு பொறுத்த தாதலின், ஆண் மக்களுக்கே சிறந்து விளங்குகின்றது; எனினும், பல அமயங்களில், பெண்பாலார்க்குள்ளும் மிகைப்படத் தோன்றி மிளிர்வது முண்டு. நமது தமிழ் நாட்டுப் பண்டை நாளைய "வீரத் தாய்மார்" இதற்குச் சான்றாவர்.

இம் மறச்சுவையைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றுள்ளும் பார்க்கலாகுமெனினும், விரிவு அஞ்சிச், சில நூல்களில் காணும் சிற்சில செய்யுள்களையே ஈண்



207648

டெடுத்துக் காட்டுவாம். அதன்முன், இச்சுவையின் மெய்ப் பண்பைச் சிறிது ஆராய்தல் பொருந்தும்: பிறந்தவரெல்லாம் இறந்து படல் திண்ணம். சாவோ ஆறிலு முண்டு, நூறிலு முண்டு; நெல்லுக்கும் புல்லுக்கும் போலப், புல்லுயிர்களை நமனார் அறுத்திடும் காலம் நிலைத்த தொன்றில்லை. “நெருநல் உளன் ஒருவன் இன்றிலன் என்னும் பெருமை உடைத் திவ்வுலகு.” இதனால், கூர் அறிவில்லா மூடரை யன்றி, அறிவுடை மாந்தர் எவருமே, சாவை அஞ்சி உள்ளம் நோகார் என்பது பெறப்படும். “சாகத் துணிந்தவற்குச் சமுத்திரம் முழங்கால் ஆழம்” என்பர். ஆயின், வாணாள் முடிந்து, சாவாக நம்மை நாடி வரும் தறுவாயில், வீணாக மனம் நோகாது, முதிர் கனி போல் உதிர்வது ஒன்று; நாமாகவே சாவை எதிர் கொண்டு முன்னேற்று, தற்கொலை செய்து கொள்வது போல, நமக்கென விதித்ததாகத் தோன்றும் முழுநாளைச் சாணாகக் குறுக்கித் தறித்துக்கொண்டு மடிதல் மற்றொன்று. இங்ஙனம் செய்வது, எப்பொழுதும் எல்லார்க்கும் இயலாமைதான், மறச் சுவையின் மாண்புக்கும் இனிமைக்கும் காரணம். பரக்க உரைக்கின், ‘உயிரினும் இனிய தொன்றில்லை’ என்பது உண்மையே. அவ்வுயிரையுமே துரும்பா நினைத்து, காதல் மனைவியையும்; அருமருந்தன்ன மக்களையும்; அடைவான சுற்றத்தையும்; அன்புமிக்க நண்பரையும்; ஐம்புலன்களுக்கும் தெவிட்டாத நல் விருந்தை அளித்துக் கொண்டே யிருக்கும் இவ்வழகிய பிரபஞ்சத்தையும்; இவை யாவற்றினுமே, போக பூமியினுமே, மேலாகச் சிலர் மதிக்கும் மூளை விருந்துகளையும்; அனைத்தையும் அறவே துறந்து, செந்தாமரை மலர் மீது வீற்றிருப்பான் ஒருவன் தீக்குழிப் பாய்வதொக்க, இருண்டதாய்க் கொடியதாய் ஈவிரக்க மற்றதாய்க் காணும் கூற்றின் வாய்க்குள் திடீரெனக் குதித்தல், அம்மம்ம, எவ்வளவோர் வீரமாகும்! இது பொது நோக்கு; மேல் நோக்கு. ஊன்றி உற்று நோக்குழி, பலவகைப்பட்ட வாழ்க்கைத் துன்பங்களின் பெருமை புலப்பட்டு, இவ்வியப்பை மட்டுப்படுத்தா நிற்கும். ஆயினுமே, தபோநிதியான விசுவாமித்திரரும் நாயூனைப் புசித்தேனும் உயிரைக் காப்பாற்ற இசைந்ததையும்; நமது கண்காண, நாள்தோறும், ஊர்தோறும், சகிக்க முடியாத பல துயரங்களைச் சகித்துக் கொண்டு, எண்ணித் தொலையாத மனிசர் தம் மாருயிரைப் பேணி இருப்பதை



யும் கவனித்தால், ஒருவன் வேண்டுமென்று தன்னுயிரை விடுவது எளிதல்ல என்பது நன்கு துலங்கும்.

உயிரைத் துறக்கத் துணிவாருள், போர்த் தொழிலையே சீவனோபாயமாகக் கொண்டு ஊதியம் பெற்றும், முன் சென்றால் இராமனது பாணம் பின் வாங்கினால் இராவணனது கைவாள் என்னும் நிபந்தனைக் குட்பட்டும், பிறர் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பெரிது மதித்தும், வீர சொர்க்க இன்பங்களை விரும்பியும் நம்பியும், போர்க்குப் புறப்படுகையில் மதுவருந்தி வெறியுற்றும், போர் வாச்சியங்களின் முழக்கம் முதலியவற்றால் மயக்குண்டும், தாம் பொரும் கட்சியின் நியாய அநியாயங்களை நன்கு உணராதவராகி, ஏன் என்றுகேட்கும் உரிமையின்றி, மேலோர் ஏவிய வண்ணம் சாவதையே கடமையாகக் கொண்டொழுகும் படைச் சேவகரது ஆண்மையும் வீரமும், அத்துணை பாராட்டற் குரியன வல்ல. இங்ஙன மின்றி, யாதானும் ஓர் அதிசயமான நிகழ்ச்சித் தறுவாயில், உள்ளக்கிளர்ச்சியின் பெருமிதத்தில், முன்பின் எண்ணித் துணியாது, பொருக்கெனச் செய்யப்படும் மறச்செயலும் ஆன்ற சுவைத்தன்று. நீண்டதோர் நல் வாழ்க்கையை எதிர் நோக்கி இருப்பவன், சாவை விரும்பச் செய்யும் துன்புகள் யாதுமே இல்லாதவன், உலக சுகங்களைச் சுகித்து வாழ்பவன், வழக்கின் நன்மை தீமைகளை உய்த்தறிந்து தன் உள்ளத்தில் ஆர அமர ஆலோசித்துப் பார்த்தவன், யாதானும் ஒரு பெரும் பொருட்டுக்காகத் தன் இன்னுயிரை விட்டுவிடத் துணிந்து இயற்றும் வீரச் செயல்களே, விழுமிய மறச்சுவை பயப்பனவாம்.

எல்லா நாட்டிலும், எல்லாக் காலங்களிலும், தாம் காமுற்ற தலைவியின் காதலைக் கொள்ளை கொள்ளும் பொருட்டு, ஆண்மக்கள் மறச் செயல்கள் ஆற்றுவதுண்டு. சுயம்வர காலங்களில் நிகழும் போர்களும் வீர பராக்கிரமச் செயல்களும் இத்தகையனவே. மறச்சுவை ஆண்மக்கட்கே ஓரோ வழிச் சிறப்பாதலின், அதன் வழியாப் பெண்களின் உள்ளத்தைக் கவர்தல் வழக்காயிற்று. டெனிஸன் கவி இயற்றிய இராஜ குமாரி என்னும் காவியத்திலே, வீரத் தந்தை ஒருவன், தன் மகன் காமுற்ற ராஜ குமாரியின் காதலைப் பெறாது தவிப்பதைக் கண்டு, தன் மகனைப் பார்த்து:—

"இறுவ ! தாம் செயத் துணியாத் தீர
மறவெஞ் செயலைச் செய்பவன் தான், மட
வார்க் கெலாம் கண்மணி ; மற்று, அவன், இனிய
போர்க் கோலத்தொடு, பொருபறை முழக்கித்
தையலார் நடுவே சார்ந்திட, அவர்தாம்
மையலால் அனைவரும் மாழ்கி நைவரே"

என்று கூறுகிறான். இவ்வாறு, மறச் செயல்களை மாதரார் காதலின் பொருட்டுச் செய்தலை, எல்லா நாட்டு இலக்கியங்களிலும் காணலாம். கவி யரசாகிய கம்பர், முதனாட் போரில் தோற்று மீண்ட இராவணனை வருணிக்கையில்,

"வானகும் மண்ணுமெல்லா நகும் நெடு வயிரத் தோளான்
நானகு பகைஞரெல்லாம் நகுவரென் றதற்கு நாணான் ;
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியல், மிதிலைவந்த
சானகி நகுவ ளென்றே நாணத்தாற் சாம்புகின்றான்."

என்றும் ; சீதையே பரிசிலாக, மற்றெவராலும் வளைக்கவும் ஒண்ணாத பெருவில்லை இராமன் இறுத்ததை,

"நச்சுடை வடிக்கண் மலர் நங்கை இவளென்றால்
இச்சிலை கிடக்க மலை யேழையும் இறானோ?"

என்றும் கூறியிருக்கிறார். இதே கருத்தை, பைரன் என்னும் ஆங்கில கவி,

"எந்த நாளினும் எவரினும் ஏற்றமா இயம்பும்
முந்து நா உரை நசைந்துனை முயன்றிலேன், புகழே!
என் தன் ஆருயிர் நிலையவள் என் பெருங் காதற்
கந்த நாள் மலர் தர வெனக் கருதல் என் கருத்தே;

"புகழ்க்குழைத்ததும் புகழ் புரிந்ததும் அவள் பொருட்டே;
திகழுநுள் திரு நோக்கமே சீர்த்தியின் நிலவும் ;
மகிழ் வொடென் செயல் கேட்டவள் மான்விழி மதர்த்தின்,
நிகழ் மணக் குறி உணர்ந்ததே புகழெனை நினைந்தேன்"

என்று, வேறு வகையாகக் கூறி யிருக்கிறார். இவ்வண்ணம், காதலின் பொருட்டு, உயிருக்கு அபாயகரமான மறச் செயல்களை இயற்றுதலும், உலகு மெச்சும் புகழின் பொருட்டுச் செய்தலும், மாசிலாச் சிறப்பு வாய்ந்தன வாகா. பிறந்தவர் அனைவரும் இறந்திடல் உறுதியாக, எதன் பொருட்டு ஒருவன் உயிரைத் துறந்திடல் தக்கதெனும் வினவுக்குப், பின் வரும் விடை சிறந்ததாகும்:—



"உலகினில் வாழும் ஒவ்வொரு வற்குமே
இன்றோ பின்றோ எய்திடும் சாவு ;
இங்ஙனம் இருக்க எங்ஙனம் ஒருவன்,
தன்குல முன்னவர் மன் புகழ் காக்கவும்,
தான் பணி கடவுளர் தளிகளைக் காக்கவும்,
தன்னை ஈன்றளித்த அன்னையைக் காக்கவும்,
அன்புடன் அணைத்து மென்பால் ஊட்டித்
தன் மக வோம்பும் நன்மனை காக்கவும்,
கன்னியர் மானக் கற்பினைக் காக்கவும்,
தன்மனம் ஒப்பிய தருமம் காக்கவும்,
பெரும்படை யென்று பேதியா நெஞ்சொடு
விரும்பிப் பகைவரை வேல் கொடு தாக்கித்,
துரும்பென உயிரை இகழ்ந்து துறத்தலின்,
அரும்புகழ்ச் சாவினை அடைதலா கும்மே? "

அஃதாவது, தன் நாடு, மதம், குடும்பம், மனச் சாக்ஷி இவற்றின் பொருட்டுச் சாவதாகும். தனக்கினிய தன்னை யத்தினும், பிறர் நலமும் உயர் சீலமும் இவற்றில் மாணுதல் காண்க. ஜப்பானியர்க்குள் நிகழும் ஹரிக்-கரி என்னும் மறச்செயல், ஆச்சரியத்தோடு அச்சத்தையும் தரத் தக்கதாகும்.

இனித் தமிழ் நூல்களில் சிலவற்றில் காணும் மறச் சுவையை எடுத்துக் காட்டுவோம். தன் மானத்தைக் காத்தற் பொருட்டு மறச்செய லாற்றும் மாதர் இந் நாளிலும் பலருளர். தன் நாட்டிற்காக, ஆணுடை யணிந்து, அரிய பெரிய மறச்செயல்களைச் செய்து, தன் உயிரைப் போர்க்களத்தே விட்ட ஜான்ஸி ராணியைப் போன்ற மாதர், எந்நாட்டிலுமே அருமையாவர். தமிழ் நாட்டுப் பண்டைத் தாய்மாரிற் பலர், இத்தகைய நெஞ்சுத் துணிவு வாய்ந்திருந்தமை, புற நானூற்றுச் செய்யுள்களானும், புறப்பொருள் வெண்பாமாலையானும் புலனாகும். பின் வரும் சங்க நூல் கருத்துக்களை நோக்குக :—

(1) தன் மகன் படைக் களத்தைப் பயந் தோடினன் என்று கேட்ட கிழத்தாய், 'உண்மை அங்ஙனமாயின் அவனுக்குப் பாலூட்டிய முலைகளை அறுத் தெறிந்து விடுவேன்' என்று வஞ்சினம் கூறிப் படைக்களம் சென்று தேட, அவன் அங்கே வெட்டுண்டு மடிந்து கிடந்ததைக் கண்டவுடன், அவனைப் பெற்ற நாளினும் மிக்க மகிழ்ச்சி

யடைந்தாள். (2) முதல் நாள் தன் தந்தையையும், மறுநாள் தன் கணவனையும் போர்க்களத்திலே சாகக் கொடுத்த இவள், இன்றும், போர்ப் பறையொலி கேட்டவுடன், தன் ஒரே மகனை, சின்னஞ் சிறுவனை, சிங்காரஞ் செய்து போர்க்கு அனுப்புகின்றனளே! இவள் துணிவு தான் என்னே!

பிற்பட்ட இலக்கியங்கள், மகளிரது மறநெஞ்சை இவ்வண்ணம் எடுத்துக் காட்டுவ தில்லை. மேலே குறித்த சங்கச் செய்யுள்களிலும் கூட, மறக்குல மகளிரை மட்டும் இவ்வாறு புலவர் புகழ்ந்தனரே யன்றிப் பிறசாதிப் பெண்டிரையன்று.

புறப்பாட்டுக்களில், மறவரது வீரத்தை விளக்குவன மிகப் பலவுள—அவற்றுள், பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் கூற்றாக வருவது, அவனது போரின் மறத்தையும், அரசியலின் அறத்தன்மையையும், வாழ்க்கைக் குறிக்கோளையும் ஒருங்கே விளக்குகின்றது :—

“ சிறு சொல் சொல்லிய சினங் கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரச மொடு
ஒருங்கப் படே னாயின், பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது,
‘ கொடியன் எம் இறை ’ எனக் கண்ணீர் பரப்பி,
குடி பழி தூற்றுங் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக,
உலக மொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பில்,
புலவர் பாடாது வரைக என் நிலவரை!
புரப் போர் புன் கண் கூர,
இரப்போர்க் கீயா இன்மை யானுறவே! ”

(புறம் 72)

கம்ப ராமாயணத்திலே மறச் சுவையைப் பல விடங்களில் காணலாகும்; எனினும், கரன் வதைப் படலத்திலே, இராம பாணங்களுக்கு உடைந்தோடும் அரக்கரைத் தூடணன் நிறுத்தித் திருப்பும் பாக்கள், சிறந்தனவாம். இப் பாக்களுக்கு ஒரே செய்யுளுக்கு முன்பு தான், அமுதத்தை யுண்பானுக்கு முதலில் சிறிது புளித்துவையலை யளிப்பது போல, பயச்சுவையை நன்கு விளக்கும்,



“ மண்டி யோடினர் சிலர், நெடும் கடகரி வயிற்றில்
புண்டிறந்த மா முழையிடை வாளொடும் புகுவார்;
தொண்டை நீங்கிய கவந்தத்தை, ‘ துணைவ! நீ எம்மைக்
கண்டிலேன் எனப் புகல்!’ எனக் கைதலைக் கொள்வார் ”

என்னும் செய்யுளை வைத்திருப்பது, கம்பரது கவித் திறனை இனிது விளக்கும். பயந்து பின்னிடும் அரக்கரைப் பார்த்துத் தூடணன் சொல்லுகிறான் :—

வச்சை யாமெனும் பயமனத் துண்டென வாழும்
கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிரும் கூசார்;
நிச்சயம் எனும் கவசந்தான் நிலைநிற்ப தன்றி
அச்சம் என்னும் ஈ தாருயிர்க் கருந் துணை யாமோ?

பூவ ராவு வேற் புரந்தர னோடு தான், பொன்றா
மூவ ரோடு தான், முன் நின்று முட்டிய முனையில்
எவரோடினர்? இராக்கதர்! நுமக்கிடைந் தோடும்
தேவரோடு கற்றறிந் துளி ரூமெனத் திகைத்தீர்.

இங்கொர் மானுடற் கித்தனை வீரர்க ளிடைந்தீர்;
உங்கை வாளொடு போய் விழுந் தூர் புகலுற்றீர்; [கண்
கொங்கை மார்பிடைக் குளிப்புறக் களிப்புற்றுக் கொழுங்
நங்கை மார்களைப் புல்லுதிரோ நலம் நுகர்வீர்?

செம்பு காட்டிய கண்ணினை பாலெனத் தெளிந்தீர்;
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிநுறப் பாய்ந்த
கொம்பு காட்டு திரோ? தட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டு திரோ? குல மங்கையர்க் கம்மா!

எக்கம் இங்கிதன் மேலு முண்டே! இகல் மனிதன்
ஆக்கும் வெஞ்சமத் தாண்மை யவ் வமரர்க்கு மரிதாத்
தாக் கரும்புயத் துங்குலத் தலைமகன் தங்கை
மூக்கொ டன்றியும் முதுகொடும் போம்பழி முயன்றீர்!

ஆர வாழ்க்கையின் வணிகா யமைதிரோ? அயில்வேல்
வீர வாட் கொழு வென மடுத் துழுதிரோ? வெறிபோர்த்
தீர வாழ்க்கையில் தெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையிர், எங்ஙனம் வாழ்திரோ விளம்பீர்!

இப் பாக்களிலே, எதிரியின் சிறுமையையும், தம் முன்னோரது பெரும் புகழையும், வீரமே உயிர்த் துணை என்னும் உண்மையையும், போரில் பின்னிடுவதால் காதலின் பழும் சிதையு மென்பதையும், அரசற் குரிய கடமையை

யும், போரே தம் குல தருமம் என்பதையும், அழகாய்ச் சுட்டிக் காட்டி யிருந்ததை உற்று நோக்குக. இன்னும் உயுத்த காண்டத்தில் காணும் மறச்சுவைப் பாக்களை எடுத்துக் கூறிற் பெருகும்.

கம்ப ராமாயணத்தை, பலதரப்பட்ட ஒளியும் விலை மதிப்பு முள்ள பலவகைப்பட்ட மணிகள் குயிற்றிய, கலைமகளின் கவிக்கிரீடம் என்பது பொருந்து மாயின், ஒவ்வொன்றுமே ஒப்புயர்வற்ற நவரஸ மாணிக்கங்களா லான அவளது திருவிரல் மோதிர மெனத்தகும் கலிங்கத்துப் பரணியிலே காணும் மறச்சுவை, மிகச் சிறந்த தெனக் கூறவும் வேண்டுமோ? திருக்குறள் ஒன்று தவிர, இத்துணைச் சிற்றளவிலே இத்துணைப் பெரு நயம் நிறைந்த இலக்கியம், இப்பரணி யன்றி மற்றொன் றில்லை யென உறுதியாய்ச் சொல்லலாம். இத்தகைய பரணியி லிருந்து மறச்சுவைச் செய்யுள் ஒன்று எடுத்து வரைந்து இதை நிறுத்தி விட்டு, இம் மறச் சுவையாலும் இதை யொட்டிய மறப் பயிற்சியாலும் மனிதருக்கு விளையும் பெருங் கேடுகளை மற்றொரு பொழுது சுட்டிக் காட்டுவோம்:—

“ அலகில் வெற்றியும் உரிமையும் இவை யென
அவய வத்தினில் எழுதிய அறிகுறி
அவை யெனப் பல வடு நிரை யுடையவர் ;
அடி பிறக்கிடில் அமரர் தம் உல கொடிவ்
உலகு கைப்படு மெனினும் அதொழிபவர் ;
உடல் எமக் கொரு சுமை யென முனிபவர் ;
உயிரை விற்றுறு புகழ் கொள உழல் பவர் ;
ஒருவர் ஒப்பவர் படைஞர்கள் மிடையவே. ”


## இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்!

1. குசிகர் குட்டிக் கதைகள்—முதல் பாகம்—எட்டுக் கதை——விலை 0—10—0.

2. ஷை இரண்டாம் பாகம்—எட்டுக் கதை 0–10–0.

இரண்டு பாகங்களையும் சேர்ந்து வாங்கு வோருக்கு மொத்தம் 16 கதைகளுக்கும் விலை ஒரு ரூபா தான். ரூ. 1—4—0 இல்லை. இதைக் கவனிக்கவும்.

ஆச்சாரிய அக்கப் பிரகாசலயம், புஸ்தகசாலை,
மயிலாப்பூர், சென்னை.


# தென்னிந்திய விளையாட்டுக்கள்

(259-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## 2. குதித்துப் பாடுதல்

ஸ்ரீ. P. V. ஜகதீசையர், சென்னை

கலியாண காலங்களில் ஸ்திரீகள் சாதாரணமாய் இந்த ஆட்டம் ஆடுவது வழக்கம். முப்பது நாற்பது வயதுள்ள ஸ்திரீகள் கூடக் குதித்துப் பாடுவார்கள்.

நடுவில் ஒரு குழந்தையை உட்கார வைத்தாவது, அல்லது ஒரு குத்து விளக்கை ஏற்றி வைத்தாவது, ஸ்திரீகள் சுற்றிலும் வட்டமாக நின்று கொண்டு கை கொட்டிப் பாடிச் சுற்றிச் சுற்றி வருவார்கள். இவர்களுள் ஒருத்தி சொல்லும் பாட்டின் பாகத்தை மற்றவர்கள் சொல்லிக்கொண்டு, அவளால் நடத்தப்பட்டு, மெதுவாகவாவது வேகமாகவாவது களைத்துப் போகும் வரைக்கும் சுற்றிச் சுற்றி வருவார்கள்.

எதற்காக * குழந்தையையாவது விளக்கையாவது நடுவில் வைத்துக் கொண்டு அவ்வாறு சுற்றிவரும் பழக்கம் ஏற்பட்டதென்பது விளங்கவில்லை. தெய்வத்தையும் குழந்தையையும் ஒப்பிட்டுச் சொல்லுவார்கள். ஒரு விளக்கு லக்ஷ்மியைக் குறிக்கும். ஆதலின் கடவுளுக்கும் லக்ஷ்மிக்கும் மரியாதை செய்ய அவ்வாறு செய்து வருகின்றனர் போலும்!

* பலர்கூடி வளைய வந்து பாடும் பொழுது, தம்மை யறியாமலே அனைவரும் நடுவில் வந்து ஒருவரோ டொருவர் மோதும்படி நெருங்குவர். அவ்வாறு நிகழாமல் தடுக்கும் பொருட்டே நடுவில் ஒரு தீபத்தையோ குழந்தையையோ வைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்——ப-ம் ப-ர்.

# கல்வி

(வெருலாம் பிரபு பிரான்ஸிஸ் பேகன் என்பவர் இங்கிலீஷில் எழுதியது)

ஸ்ரீ. வே. நாராயணையர், M.A., M.L., மொழிபெயர்த்தது.

கல்வி இன்பம் பயக்கும், பூஷணமாகும், சாமர்த்தியத்தைக் கொடுக்கும். கல்வி விசேஷ இன்பம் பயப்பது, தனித்து ஒதுங்கியிருக்கும்போது; பூஷணமாவது, ஜனங்களுடன் பழகிப் பேசும்போது; சக்தி கொடுப்பது, காரியங்களில் முயன்று பிரவர்த்திக்கும் போதும் தீர்மானங்கள் செய்யும் போதும். பழகிக் கைதேர்ந்தவர் காரியங்களைச் செய்து முடிப்பாரேனும், சிறு பாகங்களில் தீர்மானங்கள் செய்வாரேனும், பொதுவான தீர்மானங்கள் செய்து முடிவுக்கு வருவதும் காரியங்களை ஒருமித்துப் பாகுபடுத்தி முடிப்பதும் கற்றவருக்கே நன்கு அமைவன. படிப்பில் அதிக காலம் போக்குவது சோம்பேறித்தனம்; கல்வியை அதிகம் அலங்காரார்த்தமாகப் பேணுவது வீண் டம்பத்தனம்; கல்வியின் வழியே மட்டும் தீர்மானிப்பது கற்றோரின் தவறிய போக்கு. கல்வி இயற்கை யறிவை நிறைவித்து, அநுபவத்தால் சம்பூரணமாகும். இயற்கைச் சக்திகள் செடி கொடிகள் போல்வன; கல்விப் பயிற்சியால் அவற்றைத் திருத்த வேண்டும். ஆயின், கல்வியும் வரம்பின்றிப் பலவழியில் படருமாதலால், அநுபவத்தைக் கொண்டு வளைத்து வேலியிட வேண்டும். தந்திரசாலிகள் படிப்பை அவமதிப்பர்; அறிவிலிகள் அதை மெச்சி யிருப்பர்; அறிவாளிகள் அதைப் பயன்படுத்துவர். ஏனெனில், கல்வியால் மட்டும் அதன் உபயோகம் விளங்காது; கல்வியின் புறம்பாக, அதற்கு மேம்பட்டதான, அறிவொன்று உண்டு; அஃது அநுபவத்தால் ஸித்திப்பது. பிறர் கூற்றை மறுத்து மருட்டுவதற்காக வாசிப்பது சரியன்று; வாசிப்பதையெல்லாம் வேத வாக்காக நம்புமாறு வாசிப்பதும் நன்றன்று; பிறருடன் பேசி வாதித்துப் பொழுது போக்க வாசிப்பதும் பயனன்று; வாசிப்பதைச் சீர் தூக்கிப் பரியாலோசனை செய்ய வேண்டும். சில புஸ்தகங்களை ருசி பார்க்க வேண்டும்; வேறு சிலவற்றை விழுங்கிவிட வேண்டும். ஒரு சில மட்டுமே கரைத்துக் குடிக்கத் தகுந்தவை. அதாவது, சில புஸ்தகங்களிற் சிற் சில பாகங்கள் மட்டுமே படிக்கத் தக்கவை; வேறு





சிலவற்றில் ஆழ்ந்து கவனம் செலுத்தாமல் நுனிப்புல் மேயலாம்; ஒரு சில மட்டுமே கவனத்துடனும் உற்சாகத்துடனும் முழுதும் கசடறக் கற்க வேண்டியன. இன்னும், சில புஸ்தகங்களைப் பிறரைக் கொண்டு படித்தறிந்தால் போதும்; பிறர் அவற்றைச் சுருங்கச் சொல்லக் கேட்டாற் போதும். ஆனால், முக்கியமில்லா விஷயங்களையும் மட்டமான புஸ்தகங்களையுமே இவ்வாறு கற்கலாகும். அன்றேல், சுருங்கச் சொல்லும் இப்புஸ்தகங்கள், காய்ச்சிய நீர்போல, ருசியற்றிருப்பன. கல்வி ஒருவனுக்கு முதிர்ச்சி கொடுக்கும்; ஸங்கம் ஞானம் தரும்; எழுத்துத் துல்லியம் அளிக்கும்; ஆதலால், பிறருக்கு உண்மை தெரியாமலிருக்க வேண்டுமாயின், சிறிதே எழுதுவோன் அதிக ஞாபக முடையோனாய் இருத்தல் வேண்டும்; சிறிதே பிறருடன் ஆலோசிப்பவன் சமயோசிதமான புத்தியுடன் கூடியவனா யிருத்தல் வேண்டும்; சிறிதே வாசிப்பவன் அதிகப் படிப்பாளிபோல் தோன்றும் தந்திரத்தைக் கையாள வேண்டும். சரித்திர ஞானம் மனிதரைப் புத்திசாலிகளாக்குகிறது; கவிதை மனிதரைச் சொல்லாளராக்குகிறது; கணிதம் மனிதரை நுட்ப தரிசிகளாக்குகிறது. இயற்கை யறிவு ஆழ்ந்த புத்தியைக் கொடுக்கிறது; நீதி சாஸ்திரம் கௌரவம் கொடுக்கிறது; தருக்கமும் வியாகரண அலங்கார ஞானமும் வாதத்தில் பயன் படுகின்றன. இவ்வாறு கல்வியின் பல துறைகள் பலவாறு பயன் தருவன. உண்மையில், அறிவுக்கு இடையூறான தடங்கலாயுள்ள எதையும், தேகத்து நோய்களை வெவ்வேறு தேகப் பயிற்சி மார்க்கங்களால் நீக்கிக் கொள்வதைப்போல், தகுந்த கல்வித் துறைகளில் பயின்று விலக்கக் கூடும். பந்தாடுதல் "கல் நோய்" க்கு நன்மருந்து; தனுர்வித்தை சுவாசப்பைக்கும் மார்பிற்கும் பலத்தைக் கொடுப்பது; மெல்ல நடப்பது வயிற்றுக்கு நல்லது; குதிரையேறுவது தலைக்கு நல்லது; இவ்வாறே மற்றும். ஒருவன் எண்ணங்கள் சிதறுண்டு கட்டுண்ணாமல் திரியுமாயின், அவன் கணிதம் கற்கட்டும்; ஏனெனில் கணக்குப் போட்டுத் தீர்மானங்களை விளக்கக் காட்டுங்கால் கவனம் சற்றேனும் விலகிச் செல்லுமாயின், மறுபடி அடி முதல் ஆரம்பிக்க வேண்டிவரும். வித்தியாசங்களைக் கண்டுணரும் சக்தி யில்லாதவன் பண்டிதர்களின் புஸ்தகங்களைப் படிக்கட்டும்: பண்டிதர்கள் மயிரையுமே கூறு செய்து வேறு காண்பவர்; விஷயங்களை ஒன்றிலொன்று புகுத்தி ஒன்றிற்கு ஒன்று உதாரணமாகவும் ருசுவாகவும் கொள்ளும் திறன் வேண்டுவோன் சட்ட வாதிகளின் தர்க்கங்களைக் கற்கட்டும். இம்முறையே அறிவின் ஒவ்வொரு குறைவிற்கும் ஏற்ற ஒரு மருந்து சொல்லல் கூடும்.

—தமிழர் நேசன்.

## புதிய கடவுள்

வானவில் வரவினை அறியா வாய்மையால்,
தான் ஒரு கடவுளைத் தாழ்ந்தனன் தொல்கவி.
வானவில் மட்டுமோ, மற்றுள அதிசய
மானவை மிகப்பல அறிகுவம் இன்றுயாம்;
அன்றவன் அறிவையும் இன்றுநம் அறிவையும்
குன்று நீர்க் குட்டை குளிர்கடல் என்னலாம்;
என்னினும் யாமும் ஓர் கடவுளை ஏத்துதும்:
பின்னை என் பேதம் எனில், அவன் பேசிய
கடவுள்தான் கால் நிலம் கதுவாத் தேவு; யாம்
இடமுற ஏத்திடு கடவுளோ, திருவடி,
முடி, உடல் என, உரு மூண்டதொன் றன்று;
படியினைப் பழித்துவிண் பதிவதொன் றன்று;
மடியும் மிடியும் மடமும் மயலும்
அடமும் படிறும் அறமில் பிறவும்
குடிகொள் கொடிய மாக்களின் நடுவனும்,
தூயர் மனத்தே துலங்குறு முறைமையில்,
ஓயா துவதுன்றைத் துழைத்திடும் ஒன்றது;
அன்பே அதன் உரு; உழைப்பே ஆருயிர்;
இன்பே இயற்கை; அறிவே இயக்கம்;
மன்பேர் உலகெலாம் மற்றதன் களனே;
வானிடு வில்லின் வரவும் மற்றவும்
தானறி தற்கா லத்தவர் தகவுடன்
கண்டு வழிபடு கடவுள்
தொண்டுகள் புரியுமோர் இன்னருட் சோதியே—

அமுதகவி.



## மேலையர் நாகரிகம்

ஸ்ரீ. தி.ச. ராமசந்திரன், B.A. Hons.,
லண்டன்

மேல் நாட்டு நாகரிகத்தில் எவை உனக்கு முக்கியமாகத் தோன்றின என்னும் வினவுக்கு, இப்பதிலை எழுதத் துணிந்தேன். முதல் முதல் நான் இங்கே கண்டதென்னவென்றால், இந் நாட்டார், இவ்வுலக வாழ்க்கையில், இன்பம், அதாவது உண்மையான சுகம், அடையலாமென்று கருதுகிறார்கள் என்பதே. ஆங்கில தோரணையில் இவர்கள் ஜீவாநந்தம் நிறைந்தவர்களா யிருக்கிறார்கள். இவர்களின் பூர்ண வளர்ச்சியையும், வேகமான நடையையும், அளவற்ற ஊக்கத்தையும் கண்டாலே, இது நன்கு விளங்கும். இவர்களுடைய பிரார்த்தனையில், "ஈசனே! இவ்வுலகம் உன் உலகமாகுக! உன் ஆக்ஞை இங்கு நடக்கட்டும்!" என்னும் வார்த்தைகள் இருக்கின்றன. அதாவது, ஸ்வர்க்கம், மோக்ஷ லோகம் முதலியவை, இந்த ஸ்தூல உலகிலே, நம் முயற்சியால் நாம் உண்டாக்கலா மென்பது இதன் கருத்து. இதை வேறு விதமாகச் சொல்லின்: "இந்தக் கஷ்டமான சம்சாரத்தில் கிடந்துழலும் ஜீவாத்மா, எவ்வாறு இதைத் தாண்டி மேல் உலகம் போவது?" என்று கவலைப் பட்டு, "இவ்வுலகம் கஷ்டம்; இவ்வுலகம் மாயை என்று சொல்வது பொய்" என்பதே. இதுவே இவர் கருத்து. இம்மாதிரி எண்ணம் நம் ஹிந்து மதத்தில் கிடையாதென்று நான் சொல்ல வில்லை. நம் ஹிந்து மதத்திலும் இருக்கிறது: எவ்வாறெனில், முதன் முதல், ஈசாவஸ்யோபநிஷத்தில், "ஈசனமா யிருக்கும் இவ்வுலகில், மற்றவனிட மிருந்து அபகரிக்காமல், லோபமற்று, உழைத்துக் கொண்டும், அநுப

வித்துக் கொண்டும், நூறு வருஷம் ஜீவிக்க விரும்பு" என்னும் கட்டளை யிருக்கிறது. அவ்வாறே, ஒவ்வொரு பிராமணனுடைய (பிறவிப் பிராமணனுடைய மட்டு மல்ல, ஞான விருத்தியை விரும்பும் ஒவ்வொரு மனுஷனுடையவும்) மத்யானஸந்த்ய ஸ்தோத்திரத்தில், பின் வரும் வார்த்தைகள் இருக்கின்றன: "நன்றாய் நூறு வருஷ காலம் கண்களால் பார்ப்போமாக; நன்றாய் நூறு வருஷ காலம் சுகமாய் ஜீவித் திருப்போமாக; சந்தோஷித் திருப்போமாக; சுகங்களை அனுபவிப்போமாக; காதுகளால் கேட்போமாக; அனைவருடனும் ஆலாபிப்போமாக; இருப்போமாக; நன்றாய் நூறு வருஷ காலம் அப்ஜய மற்று, மேன் மேலும் விருத்தி யடைவோமாக." இவ்வாறே கீதையிலும், "ஈசன், ஜனங்களை ச்ருஷ்டித்து, இவ்வுலகை தானியம் முதலியவைகளால் விளையச் செய்து, யக்ஞம் செய்து (அதாவது ஜீவகாருண்யம், தைவ பக்தி, ஸகோதர பாவம், முதலியவைகளை முன்னிட்டு) அனுபவியுங்கள், என்றார்" என்று சொல்லி யிருக்கிறது.

ஒரு சிறு உதாரணத்தால் இது தெளிவாகும்: நம்முள் எவ்வளவு பேர், சாப்பாட்டை ஏதோ ஜடராக்னிக்கு அர்ப்பிக்க வேண்டிய ஒரு கடனாக எண்ணி, உண்கிறார்கள்! நம் உபநிஷத்திலோ, "அன்னத்தை ப்ரஹ்மம் என்றறிய வேண்டும். அன்னத்தினாலன்றோ, இப்பிராணிகள் உண்டாகின்றன; உண்டாய், ஜீவிக்கின்றன" என்றிருக்கிறது. இவ்வூரிலே, "அன்னமே தேக சௌக்கியத்தையும், தேக சௌக்யாதீனமான மனத் தெளிவு, கார்யோத்ஸாகம் முதலியவைகளையும் உண்டு பண்ணுகிறது; ஆகையால் ஊண் விஷயத்தில் கொஞ்சம் கவலை யெடுத்து, கொஞ்ச காலம் செல வழிக்க வேண்டும்" என்ற கொள்கை இருக்கிறது. இந்த விஷயத்தில், இந் நாட்டில் மஹாகவியான வில்லியம் ஷேக்ஸ்பியர், "நமக்கு இவ்விதமான பல இந்திரியங்களையும், இப்பேற்பட்ட விசாலமான மனஸையும் கொடுத்த ஈசன், அவைகளை நாம் உபயோகித்து விருத்தி செய்யாமல் வீண் போக்கக் கருதி யிருக்க முடியாது!' என்று சொல்லி யிருக்கிறார். கடைசியாக, கீதா வாக்யத்தில், "கர்மேந்திரியங்களை மனசால் கட்டி, பொது நன்மைக்கும் ஸ்வய விருத்திக்கும் வேண்டிய கர்மங்களைச் செய்ய வேண்டியது; அதிகப் பற்றுதலையும், வெறுப்பையும் (இதை அநேக தத்வ ஞானிகள் மறந்து விடுகிறார்கள்) விட்ட ஆத்ம வச்யமான இந்திரியங்களால் விஷயங்களை



அனுபவிப்பதே, ப்ரசாதத்தின் (ஈச்வர பக்தியின், மெய்யறிவின்) வழியாகும்." என்றிருக்கிறது.

இவ்வாறு, இந்நாட்டில், மனிதனின் நல் வாழ்வே எல்லா கார்யங்களுடைய கருத்தாகப் பாவித்தோமே, இந் நல்வாழ்வு எவ்வாறு விளைகிறது என்பதைக் கவனிப்போம். இவ்விஷயம், சுருக்கமாய் மூன்று வசனங்களில் அடங்கும்: (1) ஒவ்வொரு மனுஷனுக்கும் (சமனாய் ஆணுக்கும் பெண்ணுக்கும்) தன்னை விருத்தி செய்து கொள்ளும் சுதந்தரம் உண்டு. (2) ஆளுக்கு ஆள் உள்ள இந்தத் தனி உரிமை, மற்றொவ்வொருவருடைய அதே சுதந்தரத்தைக் குறைக்காம லிருக்கும் மட்டுமே உண்டு. (3) நூறு பேர் தனித் தனியே உழைப்பதை விட ஐம்பது பேர் ஒன்று கூடி ஒத்துழைப்பதனால் பெரும் பயன் விளைவதாலும், மனிதர்களின் பொதுவான அவசியங்கள் பொது வாழ்வினாலேயே திருப்தி செய்ய முடிவதாலும், மனிதர்களின் அவசியங்களும் சக்திகளும் பலதரப் பட்டனவாய் இருப்பதாலும், பரஸ்பர உதவியும் ஊழியமும் மிகுந்துள்ள ஐக்கியப் பொதுவாழ்வு ஏற்படுகிறது.

இவ்வூரில் பணத்தினால் ஏற்படும் சௌகரியத்தை எவ்வாறு அனைவரும் அனுபவிக்கலாமோ, அவ்வாறே, எழுதப்படிக்க தெரியும் சௌகரியத்தையும் அனைவரும் அனுபவிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சற்று யோசித்தால், இதன் அழகு வெளிப்படும். எவ்வாறு, எப்பொழுதும், அசாதாரணமான வஸ்துக்களை அடைய, அவைகளை உடைத்தா யிருப்பவனிடம் சென்று அவன் கேட்பதைக் கொடுத்துப் பெற வேண்டுமோ, அவ்வாறே, எப்பொழுதும் தைவ ஞானம் வேண்டுமானால், குருவின் முகமாய்க் காதால் கேட்டு அறிய வேண்டும். எவ்வாறு சாதாரண வஸ்துக்களைக் கடையில் வாங்கலாமோ அவ்வாறே பொதுவாகத் தெரிய வேண்டிய விஷயங்களையும், மிகவும் உயர்ந்த நூல்களையும் கூட, நமக்கு சௌகர்யமான காலத்திலும், இடத்திலும், வேண்டிய அளவு, புஸ்தக மூலமாக வாசிக்கலாம். எவ்வாறு பணத்தை அனுப்பும் மூலமாக மற்ற இடத்தில் எந்த வஸ்துவையும் அடையும் சக்தி கொடுக்க முடியுமோ, அவ்வாறு மனுஷ்ய குரல் எட்ட முடியாத இடங்களுக்கெல்லாம், எழுத்தாலும் (அதிலிருந்து கிளம்பிய தந்தி முதலியவற்றாலும்) ஏவுதலை, அனுப்பலாம். எவ்வாறு

பணம் ஏற்பட்டதால், உபயோக மில்லாத வஸ்துக்கள், கெடுதி செய்யும் கள், லாகிரி, முதலிய வஸ்துக்கள், இவைகளை வாங்க அவகாசம் ஏற்படுகிறதோ, அவ்வாறே, எழுதப் படிக்கத் தெரிவதால், உபயோக மற்றவும் கேடு பண்ணத் தக்கவுமான கார்யங்கள் மனஸில் ப்ரவேசிக்க அவகாசம் ஏற்படுகிறது. ஆனால், இவ்வபாயத்தை அஞ்சி, நன்மைகளை வேண்டா மென்பது புத்தியீனமாகும். எவ்வாறு பொது ஜனங்கள் ஒன்றைச் சின்னமாக எண்ண ஒத்துக் கொள்வதால் பணம் என்பது ஏற்படுகிறதோ, அவ்வாறு, இவ்வூரில், எழுதப் படிக்கத் தெரியும் சக்தி, அல்லது சிறு படிப்பு (Elementary Education) அனைவருக்கும் கொடுக்கப் படுகிறது. இதற்காக அனைவரும் வரி கட்டி, ஒரு குழந்தையும் இதையறியாது பத்து வயது அடையலாகாது என்று நிச்சயித்து, நிறைவேற்றுகிறார்கள். நம்மூரிலும் இவ்வாறு செய்ய நம் கையில் சக்தியுண்டு. சிறு படிப்புச் சட்டத்தின்படி (Elementary Education Act) ஒவ்வொரு முனிசிபாலிடியும், கட்டாயப் படிப்புக்கு வேண்டிய பணத்தை வரியிட்டு வாங்கி, நம் நாட்டை முன்னுக்குக் கொண்டு வரும் சக்தியுடையதா யிருக்கிறது. ஆனால், நம் சென்னை ராஜதானியில் 4 முனிசிபாலிடிகளே அவ்வாறு செய்திருக்கின்றன. முனிசிபாலிடிகளை நாமே வோட் (Vote) கொடுத்து ஸ்தாபிக்கிறோம். ஏன் நாம், நம் முனிசிபாலிடிகளிடம், "நாங்கள் பணம் கொடுக்கத் தயாரா யிருக்கிறோம். எங்களூரில் படியாதவ னில்லாதபடி செய்யுங்கள்" என்று சொல்லக் கூடாது? படிப்புக் கொடுக்க வேண்டுமானால், உபாத்தியாயர்கள், பள்ளிக்கூட கட்டடம் கட்டுபவர்கள் முதலியவர்களுக்கு, அவர்கள் செய்யும் வேலைக்குக் கூலி கொடுத்தே தீர வேண்டும். வரி கொடாமல், ஆகாசத்திலிருந்து ஒன்றும் வாராது. இவ்வூரிலிருக்கும் (சீதோஷ்ண ஸ்திதியைத் தவிர வேறு காரணங்களால் ஏற்படும்) தேக சௌக்யம், தெருவு முதலியவைகளின் சுத்தம், படிப்பு, யாவும் வரிப் பணத்தினால் ஏற்படுகின்றன. இங்குள்ள ராஜாங்கத்தார், வருஷம் ரூ. 2400 சம்பாதிப்பவனிடமிருந்து, கிட்டத் தட்ட ஒரு கால்பாகம் (பவுனில் 4 ஷி. 6 பென்ஸ்), அல்லது ரூ. 500 சம்பாத்ய வரியாக (Income-tax) வாங்கி விடுகின்றனர். நம்மூரில், அதே ரூ. 2400 சம்பாதிப்பவனிடமிருந்து, ராஜாங்கத்தார் கிட்டத் தட்ட அரை வீசம் (1/32 ரூபாயில் 6 பை) அல்லது ரூ. 75-தான் சம்பாத்ய வரியாக வாங்குகின்றனர். எவ்வாறு ரூ. 57 கொண்டு ரூ. 500ல் செய்யப்படும் கார்யங்களைச் செய்ய முடியும்? இது போலவே இங்குள்ள முனிசிபாலிடிகள், வீட்டுக் காரர்களிடமிருந்து, குறைந்த பக்ஷம் வருஷக் குடிக் கூலியின் மேல் (Annual Rental) ரூபாயில் 8 அணா (சில விடங்களில் 12 அணா,14 அணா) வரி வாங்கி, பொதுச் சுத்தம் (Public Sanitation) முதலியவைகளை அளிக்கின்றன. நம்மூரில் அதே வருஷக் குடிக் கூலியின் மேல் ரூபாயில் 3 அணா வீதம் வரியிட்டு, எவ்வாறு இந்த நன்மைகளை அடைய முடியும்?



ஆகையால், நான் முடிவில் சொல்வதாவது: இவ்வுலகத்திலே, நமது தர்மத்தை ஓயாத நல்லுழைப்பாயெண்ணி, நம்மை நாம் வரியிட்டு, படிப்பு, சுத்தி முதலியவைகளை விருத்தி பண்ணி, நம் நாட்டைச் செழுப்பிக்கச் செய்து, இவ்வண்ணம் ஈசன் நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளையை நடத்துவோமாக!

## ஒரு முறையீடு.

இராகம்—சங்காபரணம் தாளம்—ஆதி

("எப்போ தான் இரங்குமோ" என்னும் வர்ணமெட்டு)

பல்லவி

என்றே தான் எய்துவதே, ஈசனே! சுதந்தரம்—என்றே

அநு பல்லவி

இன்று நாளை என்றேங்கி, கன்றி மனம் புழுங்கி,
சென்றன, செல்வன, தினங்கள் பலப் பலவே—என்றே

சரணங்கள்

கண்ணில் குருடர் போலே, கையா லாகாதார் போலே,
மண்ணில் மனிசர் பிறக் கடிமையா மடிவதோ!
அண்ணலே! எண்ணியே, எண்ணியே எங்கும் நெஞ்சம்—என்றே

(2)

ஊரில் அந்நியர் ஏவ ஊழியம் செய்பவராய்,
பாரில் வெளியே சென்றால், தீண்டாப் பறையர்களாய்,
யாருமே, காருண்ய மூர்த்தி! எமைப் போலுண்டோ—என்றே

(3)

முன்னை விதி வசமோ? பின்னை மதி மோசமோ?
பன்னு 'கீழ் சாதி' உள்ளம் நொந்து சொன்ன வசையோ?
என்னவும், ஈசனே! உன்னருள் முன்னிற்குமோ?—என்றே.

## பல துறைப் பொறுக்கு மணிகள்

### பத்திரிகை ஆராய்ச்சி

(226-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**பிச்சைக்காரர் தினசரிப் பத்திரிகை.**—பிரான்ஸ் தேசத்தின் ராஜதானியாகும் பாரிஸ் நகரத்திலே இது பிரசுரமாகி, அவ்வூர் இரவலர்களுக்குள் மட்டும் வழங்குகிறது. பலதரப் பட்ட பிச்சைக்காரர்களுக்கும் உபயோகமாகும் சமாசாரங்கள் இதில் வெளி வருகின்றன. ஆண்டு நிறைவுகள், ஞான ஸ்நாந விழாக்கள், கலியாணங்கள், இழவுகள், மற்றும் பிச்சைக்காரர் சென்று பிரயோசனத்தை அடையக் கூடிய விசேஷங்கள், அயல் நாடுகளிலிருந்து பாரிஸுக்கு வந்து போகும் தர்மிஷ்டர்களான பிரபுக்களின் போக்கு வரவுகள், இவைகள் எல்லாம் இந்தப் பத்திரிகையில் விவரமாய்க் குறிக்கப்படும். இப்படி யொரு தினசரிப் பத்திரிகையை நடத்துவதற்கு இன்றியமையாத முயற்சியும் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இரவலருக்கும் இருப்பது மட்டுமன்றி, அந்நாட்டுப் பிச்சைக்காரருமே படிக்கத் தெரிந்தவராயிருத்தல் நாம் கவனிக்கத் தக்கது.

**ரிக்வேத காலம்.**—இந்திய ஆரியரும் ஐரோப்பிய ஆரியரும் ஆதியில் ஒரே இடத்தில் கூடி வாழ்ந்தவர்; பிறகு பிரிந்து வெவ்வேறு திசை நோக்கிச் சென்றவர் என்பது, ஆராய்ச்சிக்காரர் கொள்கை. இவ்வாறு அவர்கள் கூடி வாழ்ந்த பிரதேசம், அதாவது, இருவருக்கும் பொதுவான ஆதித் தாய்நாடு, (1) ஆசியாவின் மத்திய பாகம் என்றும் (2) ருஷியாவின் தென் பாகம் என்றும் (3) ஐரோப்பாவில் ஆஸ்திரியா ஹங்கரி நாடுகளிருக்கும் மத்தியப் பிரதேசம் என்றும் (4) லிதுவேனியா என்றும், பலவித அபிப்பிராய பேதங்கள் உண்டு. Dr. க்ரிஸ்வோல்டு என்பவர் சமீபத்தில் வெளியிட்ட ரிக்வேத மதத்தைப்பற்றிய நூலில், பின்வரும் கால வரம்புகள் குறிக்கப்பட்டிருக்கின்றன :—





| | கி. மு. |
|---|---|
| (1) ஆதி இந்திய-ஐரோப்பிய ஆரியர் பிரிந்து புறப்பட்டது. | 2500 |
| (2) ஆரியர் இந்தியாவிற் குடியேறியது | 1500 |
| (3) ரிக்வேத ஆரம்பம் | 1200-1000 |
| (4) ரிக்வேதப் பின்பாகம், ஸாம, யஜுர் வேதங்கள் | 1000-800 |
| (5) பிராமணங்கள் | 800-600 |
| (6) ரிக்வேத ஸம்ஹிதைகள் | 600 |

இவ்வரம்புகள் மிகக்குறுகியன, நமது பழமையை விளக்குவன வல்ல என்று, நம்மவர் இவற்றை ஒப்பாரென்பது திண்ணம்.

### இந்திய மாதர்களின் நிலைமை.

"ஹிந்து மதம் வைதீக மதங்களின் இருண்ட பக்கம்" என்ற பெயருடன், இங்கிலீஷில் ஒரு துண்டுப் பத்திரிகை பிரசுரமாயிருக்கிறது. நமது ஸ்திரீகளின் நிலைமையையும் உரிமைகளையும் பற்றி நமது தர்ம சாஸ்திரங்கள் கூறுவதைக் கண்டித்தெழுதப்பட்டது அது. அவ்வாக்கியங்களில் சில வருமாறு :—

**விவாக விஷயம்.**—ஒரு புருஷன் எத்தனை மனைவிகளை வேண்டினும் மணஞ் செய்து கொள்ளலாம்; ஒரு ஸ்திரீயோ, ஒருவனைத் தான் மணக்கலாம். புருஷன் மனைவியை விலக்கி விடலாம்; மனைவிக்குக் கணவனை விலக்கும் உரிமையில்லை. விவாகமாகிப் பத்து வருஷங்களாகப் பிள்ளைப் பெறாதவளையும், பன்னிரண்டு வருஷங்களாகப் பெண்களையே பெறுமவளையும், பதினைந்து வருஷங்களாகப் பிறந்த குழந்தைகளெல்லாம் சாகுமவளையும், குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின் புருஷன் விலக்கி விடலாமென்றும், வாயாடி வம்பியானால் உடனே விலக்கி விடலாமென்றும் போதாயனர் சொல்லியிருக்கிறார்.

**பெண்களின் அந்தஸ்து.**—வாங்கின கடனைத் திரும்பிக் கொடாதவன், கடன் கொடுத்தவன் வீட்டில் அடிமையாகவோ, வேலைக்காரனாகவோ, ஆடு மாடுகளாகவோ, அல்லது ஒரு ஸ்திரீயாகவோ அடுத்த ஜன்மத்தில் பிறப்பானென்று நாரத ஸ்மிருதி கூறுகிறது—"மனைவி, மகன், அடிமை, இவர்களுக்குச் சொந்த ஆஸ்தி கிடையாது; இவர்கள் சம்பாதித்த பொருள் இவர்களை உடையவனையே சேரும்" என்றும், "ஸ்திரீகளுக்கு எப்பொழுதும் ஸ்வாதீனம் இல்லை"யென்றும் மனுஸ்மிருதி கூறுகிறது.

**பெண்களின் ஜீவனாம்சம்.**—ஒரு விதவை தன் புருஷனது சொத்தின் வருமானத்துக்குமட்டும் உரியவளே ஒழிய, சொத்துக் குரியவ ளில்லை; அவளுக்குப்பின், அந்தச் சொத்து, அவள் வாரீஸுதளைச் சேராது; அவனுடைய ஞாதிகளையே சேரும். ஒரு ஹிந்து, தன்னுடைய வைப்பாட்டியின் பிள்ளைகளைக் காப்பாற்றக் கடமைப் பட்டவன்; ஆனால், அவளுக்குப் பிறந்த பெண்களைக் காப்பாற்றுவது ஹிந்து நியாயப்படி அவன் கடனில்லை.

**ஸ்வீகார சுதந்தரம்.**—புருஷர் அனுமதி பெற்றாலொழியப் பெண்களுக்கில்லை; தாய் தடுத்தாலும், தந்தை, தன் மகனை ஸ்வீகாரம் கொடுக்கலாம்.

**சந்திரனுக்கு ஆகாயவாணம்.**—அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலுள்ள கிளார்க் யூனிவர் ஸிட்டியில் சாஸ்திர போதகராயிருக்கும் கோடார்டு (Prof. R H. Goddard) என்பவர், சந்திர மண்டலத்தை எட்டி, அங்கேபோய் விழும்படி ஓர் ஆகாயவாணம் தயார் செய்து கொண்டிருக்கிறார். சந்திரனுக்கும் நமக்குமுள்ள இரண்டு லக்ஷத்து நாற்பதினாயிரம் மைல் தூரத்தையும் இவ்வாணம் கடந்து செல்லும். பூமியை விட்டுக் கிளம்பும் பொழுதே, இவ்வாணம் மணிக்குச் சுமார் 24 ஆயிரம் மைல் செல்லும் வேகத்துடன் புறப்படும்; இவ்வளவு கடிய கதியிற் கிளம்புவதால் பூமண்டலத்தின் கிராகிய சக்தியைத் தாண்டிவிடும். பிறகு, அடுத்து அடுத்துப் பல முறை வெடித்து மேற் செல்லும். ஒவ்வொரு தரம் வெடிக்கும் பொழுதும், பின்னும் மேற் போகும் சக்தி அதற் கேற்படும். இவ்வாறு மேற் சென்று, அவ்வாணத்தின் வேகம் தணிந்து போகுமுன், அது, சந்திர மண்டலத்தின் கிராகிய சக்தி எல்லைக்குள் சேர்ந்து விடுமாதலால், சந்திரனால் இழுக்கப்பட்டு, அம்மண்டலத்தில் தலைகுப்புறச் சென்று விழும். வாணத்தின் முகப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஒளி மருந்துப்பொடி பற்றிக் கொள்வதனால், அவ்வாணம் சந்திரனைச் சேர்ந்த செய்தியைப் பூமியிலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியால் அறிந்து கொள்ளலாம்.

**பூமியின் உபக்ரகம்.**—சந்திரன் ஒன்று தான் பூமியைச் சுற்றும் உபக்ரகம் என்று இது வரை எண்ணியிருந்தனர். இப்பொழுது, மிகச் சிறிய உபக்ரகம் மற்றொன்று இருக்கிறதென்று சொல்கின்றனர். இந்தக் குட்டிச் சந்திரன், 400 அல்லது 500 அடியே குறுக்களவுள்ள ஒரு கட்டி யுருண்டை; பூமியிலிருந்து 2500 மைல் தூரத்திலேயே உள்ளது. விநாடிக்கு 8½ மைல் வேகத்தோடு, இது, மூன்று மணி நேரத்துக் கொருமுறை, பூமியைப் பிரதக்ஷணம் செய்து வருகின்றதாம்.



## சென்னைச் சர்வகலாசாலைப் பட்டதாரிகள்.

நமது சர்வகலாசாலை 1857-ம் வருஷத்தில் ஏற்பட்டு, 1861-62-ம் வருஷத்தில் வித்தியார்த்திகளுக்குப் பட்டமளிக்கத் தொடங்கிற்று. அது முதல் இது வரை, சென்ற 62 ஆண்டுகளில், கலாசாலைப் பட்டம் பெற்றவரின் தொகையும் விவரமும் கீழே காணலாகும்—

| பட்டங்களின் விவரம் | மொத்தம் பட்டதாரிகள் | பட்டம் பெற்றவர்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிராமணர் | பிராமணர் அல்லாத ஹிந்துக்கள் | ஐரோப்பியர் | இந்திய கிறிஸ்தவர் | மகமதியர் | மற்றவர் |
| இலக்கியப்படிப்பு-பொது-பி. எ; எம். எ., முதலியன | 22,613 | 14996 | 4807 | 296 | 2207 | 290 | 17 |
| ஆசிரியத் தொழில் எல். டி. | 2546 | 1856 | 263 | 51 | 360 | 15 | 1 |
| சட்டப் படிப்பு பி. எல்., எம். எல்; எல் எல். டி., | 5196 | 3824 | 1067 | 25 | 245 | 34 | 1 |
| வைத்தியப் படிப்பு எல்.எம். எஸ்; எம். பி. ஸி.எம்.,எம்.டி., | 932 | 382 | 282 | 85 | 161 | 13 | 9 |
| எஞ்ஜினியர்கள் பி. ஸி. இ; எம். ஸி. இ. | 268 | 200 | 30 | 8 | 28 | 1 | 1 |
| சுகாதாரப் படிப்பு | 15 | 11 | 4 | — | — | — | — |
| சாஸ்திரஞ் ஞானிகள்-பி. எஸ்ஸி; டி. எஸ்ஸி | 4 | 4 | — | — | — | — | — |
| பயிர்த் தொழில் பி. அக்ரி. | 5 | 4 | 1 | — | — | — | — |
| 1861-1923-62 வருஷத்து மொத்தம் | 31,579 | 21,277 | 6,454 | 465 | 3001 | 353 | 29 |

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா! பெரிதென் றகமகிழ்க-தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெலாம்
எற்றே இவர்க்கு நாம் என்று."

**முகம் மூடும் புருஷர்.**—கோஷா ஸ்திரீகள் முகத்தைத் திரையிட்டு மறைப்பதைக் கண்டுள்ளோம்; புருஷர் தம் முகங்களைத் திரையால் மூடிக்கொள்வது புதுமையே. ஆபிரிக்காவிலே ஸஹாரா என்னும் பெரிய வனாந்தரத்தில் வாழும் துவாரெக் என்னும் ஒரு சாதியார்க்குள், பெண்கள் சாதாரணமாய் முகந் திறந்து திரிய, புருஷர், கண்களுக்கு மட்டும் சிறு துவாரங்களுள்ள கனத்த திரைகளால் முகங்களை மறைத்து வாழுகின்றனராம். இவர்கள் யுத்தப் பிரியர்களாம். முப்பது வருஷங்களாக இவர்களுடன் பிரான்ஸ் தேசத்தார் வீணிற் போராடி, முடிவில் சமாதானஞ் செய்து கொண்டனராம். காட்டின் நடுவே முகமூடித் திரியும் காட்டாளிகளையுமே வெள்ளையர் சும்மா விடுவதில்லை; மண்ணாசை பொன்னாசைகளின் கூத்தே இது!

**மது விலக்கு.**—பம்பாய் மாகாண கவர்ன்மெண்டார் நியமித்த கமிட்டியார், மது பானத்தை முற்றிலும் ஒழித்து விடுவதையே குறியாகக் கொண்டு செய்த ரிப்போர்ட்டின் விளைவாக, பம்பாய் மாகாணத்திலே சில ஏற்பாடுகள் கவனிக்கப்படுகின்றன. இவை யாவன--(1) **ஊரார் இஷ்டம்.** (Local option) ஒரு பிரதேசத்தில் வாழ்பவர், தம் எல்லைக்குள் மதுக்கடைகள் எதுவும் வேண்டாம் என்றால், கடைகளை நாளாவட்டத்தில் எடுத்து விடுவது. (2) **மது விற்பனை வரையறை**--(Rationing) ஒரு மதுக்கடையில் இவ்வளவு காலன்களுக்கு மேல் விற்கக் கூடாதென்று நியமித்து, அவ்வளவு சரக்கையே கடைக்குக் கொடுப்பதுமன்றி, அந்த அளவையும் ஆண்டு தோறும் பத்திலொரு பங்கு குறைத்துக் கொண்டே வந்து, பத்து வருஷத்தில் கடைகளையே எடுத்து விடுவது. (3) **மது ஏலம்**:—விற்பனைக்கு வரம்பின்றிக் கடைகளை ஏலம் போடுவதால், அதிகத் தொகைக்கு ஏலம் எடுத்தவர்கள், தம்மாலியன்றவரை மது பானத்தை அதிகரிக்க முயலுகிறார்கள். அப்படிக்கின்றி, கடைக்கு இவ்வளவு சரக்குத் தான் விற்கலாமென்று வரையறுத்து, பிறகு ஏலத்தைக் காலனுக்கு இவ்வளவு ரூபா யென்று போட்டால், வரும்படியும் வரும், குடியும் அதிகரிக்காது. (4) கைத்தொழிலாளிகளும் அற்றைக் கூலி வேலைக்காரர்களும் குடித்துக் கெட்டுப் போவதால், மில்கள், தொழிற்சாலைகள் வேலைக் கூடங்கள், மற்றும் பெரிய கட்டடம் பாலம் முதலிய வேலை நடக்கும் இடங்கள், இவற்றின் பக்கத்தில் மதுக் கடைகளே இல்லாமல் செய்து விட்டால், ஏழைக் கூலிகள்



க்ஷேமமடைவார்கள். அன்றியும், திருவிழா, சந்தை, முதலியன கூடும் காலங்களிலும் மதுக் கடைகளை மூடிவிட வேண்டும். இப்பொழுதுபோல, அக்காலங்களில் மது விற்பனையை அதிகரிக்கக் கூடாது. இவ்வழிகளை ஒழுங்காய் அநுசரித்து வந்தால் பத்தாண்டுகளில் மது பானம் முற்றிலும் நின்று போவது உறுதி. ஆயின், இந்நாட்டு மதுக்களான சாராயம் கள் முதலியன விற்கும் கடைகளை மட்டும் அடக்கி யாண்டு, வெளி நாட்டுப் பீர், உஸ்கி, பிராந்தி, ரம், ஜின் முதலியவற்றை வரையறுக்கா விட்டால் அம்மதுக்களின் பானம் அதிகரித்து, நாடு கெட்டு விடும்; எவ்வித லாபமும் ஏற்படாது. அதனால், அந்த மதுக்களையும் வில்லங்கப்படுத்தி, நாட்டு மதுக்களைப் போலவே நடத்த வேண்டும். இதற்கு இந்தியா கவர்ன்மெண்டாரும் வெள்ளைக்காரரும் உதவி செய்ய வேண்டும். கடைகளையும் மது விற்பனையையும் குறைத்துக் கொண்டே வந்தால், திருட்டுச் சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் அதிகமாகி விடுமென்பது ஒருதலை உண்மையே; ஆயின், குடியும் காமமும் சூதும் பெருத்துள்ள அமெரிக்காபோன்ற நாடுகளிலேயே இதை யடக்கி, மது விலக்கை நிறைவேற்றி விட்டனரெனின், சாதி மத ஆசார அநுஷ்டானங்கள் எல்லாம் மது பானத்தைக் கண்டிக்கும் இந்தியாவிலே, சில சாதியரே குடிக்கும் நம் நாட்டிலே, மது விலக்கு முடியாத காரியம் என்று கூற வொண்ணாது. சர்க்கார் மட்டும் மனம் வைத்தால்—அதாவது, வெளிப் பேச்சுக்கு மட்டுமின்றி, உண்மையில் மது பானத்தை அறவே தொலைத்து விடத் தீர்மானித்து விட்டால்—எளிதில் சாத்தியமாகும். இதனால் வரும் நஷ்டத்தை, வேறு வரிகளை யுயர்த்திச் சரிப்படுத்திக் கொள்ளலாம். இதைப் பற்றியும் பம்பாய்க் கமிட்டியார் சில சிபார்சுகள் செய்திருக்கின்றனர். மேலே மது பானத்தைப் பற்றிக் கூறியது, கஞ்சா, அபின் முதலிய மற்ற லாகிரி வஸ்துக்களுக்கும் முற்றிலும் பொருந்தும்.

**சுதேச ராஜ்யங்கள்.**—இந்தியாவிலுள்ள சுமார் 32 கோடி ஜனங்களில் 7 கோடி ஜனங்கள், ஹைதராபாத், பரோடா, திருவாங்கூர் முதலிய சுதேச ராஜ்யங்களில் வாழ்கின்றனர். இவ்விராஜ்யங்களுக்கும் பிரிட்டிஷ் ராஜ்யத்தாருக்கும் பல உடன்படிக்கைகள் ஏற்பட்டு, அவற்றின்படி இவை கப்பம் கட்டுகின்றன. இவ்விராஜ்யங்களில், ஆடம்பரத்துக் கன்றி, தேசக் காப்புக்கு வேண்டிய படைகள் கிடையா; பிரிட்டிஷாரின் காவலிலும் பராமரிப்பிலுமே இவ்விராஜ்யங்கள் பயமின்றி வாழ்கின்றன. பிரிட்டிஷார் தேசக் காப்புக்காக பிரிட்டிஷ் இந்தியக் குடிகளின் செலவில் நியமித்திருக்கும் பெரும் படைகளே இவர்களுக்கும் காவலாகின்றன, எனவே, ஒருவர் செலவில் மற்றொருவர் இலா

பம் அடைவ தாகின்றது. இந்த சுதேச ராஜ்யங்கள் கொடுக்கும் கப்பத் தொகையோ, வருஷத்துக்கு மொத்தம் ரூ. 87 லக்ஷம் சில்லறை தான்; இவ்விராஜ்யங்களைக் கவனித்து மேற்பார்வை யிடும் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் உத்தியோகச் சிப்பந்திச் செலவோ, வருஷத்துக்கு ரூ. 102 லக்ஷத்துக்கு மேலாகின்றது. இதனால், இவ்விராஜ்யங்களால் பிரிட்டிஷ் இந்தியக் குடிகளாகிய நமக்கு இரு விதத்திலும் பெரு நஷ்டம் ஏற்படுவது வெளியாகும். இவ்விராஜ்யங்களை ஆண்டு வரும் சுதேச மன்னர்களோ, சகல சௌபாக்கிய சம்பன்னராய், ஆடம்பர சிகாமணிகளாய், நவரத்ந அலங்கிருத பூஷிதராய், நடமாடுகின்றனர். மேற் பார்வைச் செலவுக்கும் தேசக் காப்புச் செலவுக்கும் ஏற்ற வண்ணம் இச்சிற்றரசர் கொடுத்து வரும் கப்பங்களை உயர்த்தி, இவர் பாரத்தைப் பிரிட்டிஷ் இந்திய ஏழைக் குடிகள் தாங்கித் தவிக்காமல் செய்வதே தருமமாகும், நியாயமு மாகும்.

**மனிதரின் ஆரம்ப நாகரிகம்.**—பநாமாக் கரையை யடுத்த உட்பிரதேசத்திலே, சுக்குநாக்கர் என்னும் ஒருவகை வனவாசிகள், இதுவரை வெள்ளையர்க்குத் தட்டுப்படாதவர், இப்பொழுது புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றனர். இவர்களின் மொத்தத் தொகை ஐயாயிரத்துக்கு மேலில்லை. இவர்கள் இரும்பு செம்பு முதலிய உலோகங்களின் உபயோகத்தை அறியார்; கல்லுகளை ஆயுதங்களாக்கி உபயோகப்படுத்தும் முறையையே இன்னும் அறியார். இவர்கள் வேட்டையாடும் ஈட்டி, வாள், கதை, வில், அம்பு, முதலிய ஆயுதங்களும், கையாளும் கருவிகளும், எல்லாம் மரத்தினால் செய்யப்பட்டனவே. இவர்களின் சாதாரண உயரம் 4½ அடிக்கு மேலில்லை. இவர்களில் பெரியவர், பக்ஷிகளின் எலும்புகளையும் மிருகங்களின் பற்களையும் கோத்து, ஆபரணங்களாக அணிகின்றனர். இவர்களிடம் அகப்பட்ட உலோகப் பொருள் ஊசி ஒன்று தான்; இதுவும், கரைப் பக்க வாசிகளிட மிருந்து இவர்கள் கொண்டதே யன்றி, இவர்களாகச் செய்து கொண்டதில்லை. ஒரு மந்திர வாதி வைத்தியர் தான் இவர்களுக்குத் தலைவராகக் காண்கின்றனராம். ஆதி மனிதர்களுக்குள் இப்படித் தான் நாகரிகம் ஆரம்பத்தி லிருந்திருக்கு மென்று கருதப்படுகிறது. இவர்களை முதல் முதல் சென்று பார்த்த ஐரோப்பியர்களை, இவர்கள் தேவதைகளாக நினைத்து மரியாதை செய்தது வியப்பன்றே!

—மா.

## மதிப்புரை.

(1) பாரத தேசிய கீர்த்தனைகள்—விலை 0—6—0.

(2) காந்தி சரித்திரக் கும்மி—விலை 0—4—0.

இவை யிரண்டும் எஸ். ரெங்கம்மாள் இயற்றின. பாட்டுக்கள்—மயிலாப்பூர் ஆசிரியர் அச்சுப் பிரசுராலயம்—புஸ்தக சாலையில் கிடைக்கும். இச் சிறு நூல்களை விற்று வந்த லாபத்தில் ஒரு பாகம் திலகர் சுயராஜ்ய நிதிக்குக் கொடுக்கப்படு மென்று அறிகிறோம்.

(3) நாலடியார் மூலம்—மேற்கொள் விளக்கம், அரும்பத அகராதி முதலியவற்றுடன், மயிலாப்பூர் A. K. ஸ்வாமி அண்டு கம்பெனியார் பிரசுரித்தது—விலை 0-8-0. இப் பதிப்பில் 200 வெண்பாக்களே அடங்கியுள. இதற்கு ஸ்ரீ. வே. நாராயணையர் (M. A., M. L.,) தாம் ஆராய்ந் தறிந்தவற்றைத் திரட்டி ஒரு முகவுரை எழுதி யிருக்கிறார். பதவுரை, பொழிப்புரை, கருத்துரை எதுவுமே இல்லாத இப் பதிப்பு, கற்றுத் தேர்ந்த தமிழ்ப் பண்டிதற் கன்றி, மாணவர் மாணவிகளுக்கு அதிகம் பயன்படாது. இது நிற்க: இது போன்ற பண்டைக் காலத்து அறநெறி நூல்கள், செல்வம் இளமை யாக்கை முதலியவற்றின் நிலையாமையையும், துறவின் பெருமையையும், தற்காலத்தவர் வாழ்க்கைக் குறிக்கோள்களோடும் நாகரிக நோக்கங்களோடும் நன்கு பொருந்தாதவாறு வற்புறுத்திக் கூறுவதாலும்; பெரும்பாலும் துறவின் வழிப்படுத்துமாறு துறவிகளால் இயற்றப்பட்டனவா யிருத்தலாலும், அறிவும் அநுபவமும் முதிராத இளைஞர்களால் முழுதும் படிக்கற்பாலனவல்ல. 'சிறுவர்க்கு நல்லறி வூட்டும் வழி இத் தன்மையவான நூல்களைக் கற்பிப்பதன்று' என்பது, அறிஞரில் ஒரு சாரார் துணிவாவதும் மறக்கற்பாலதன்று. இக் காலத்திலே பண்டிதர்களும், பிறரும், கல்வி யிலாகா அதிகாரிகளுமே, சிறுவர்க் கெனப் பிரசுரிக்கும் நூல்கள் பலவற்றுள்ளும், இவ் விஷயத்தை ஊன்றி யெண்ணிக் கவனியாது, பண்டை நீதி நூல்கள் எனின் சிறுவர் கற்றற் குரியன வென்று நினைத்து, வரையறை யின்றிச் சிறுவரைக் கற்கச் செய்கின்றனர். இது தவறாகும். இத் தகைய நூல்களில் சில பகுதிகளே சிறுவர்க்கு ஏற்றன வாதலான், அவற்றை மட்டும் உரைகளுடன் விளக்கமாகப் பதிப்பித்துச் சிறுவர்க் குதவுவதே நன்று. இப்பதிப்புப் பண்டிதர்க்குப் பெரிதும் பயன்படு மென்பது உறுதி.

(4) பென்மென்ஸ் இங்க்—மயிலாப்பூர் டெக்நோ கெமிக்கல் மைனரீஸ் கம்பெனியார் (The Techno - Chemical Minories, Mylapore—"Pen-men's Ink") உண்டுபண்ணி விற்கும் சிவப்பு மையும் கறுப்பு மையும் வரப் பெற்று உபயோகித்துப் பார்த்ததில், நன்றா யிருக்கின்றன. ஊற்றுப் பேனுக்களுக்குமே உதவுகின்றன.

பண்டைத் தமிழர் பெயரிட்ட

# வெள்ளிகளிற் சில

Rev. F. கிங்ஸ்பேரி, B.A., சென்னை

வான சாஸ்திரம் பிறந்த நாடு பாபிலனம் என்பார் பலர்; சீனம் என்பார் சிலர்; எகிப்து என்பார் இன்னும் சிலர்; வேறு பல சொல்வார் வேறு பலர். இவர்களுள் யார் சொல்வது சரி என்று தீர்ப்பது நிபுணர் கடமை. ஆயினும், தமிழ் நாட்டிலே, வருஷத்திலே ஒன்பது பத்து மாதம் வானம் மப்பு மந்தாரம் இல்லாமல் தெளிவுற்றிருக்கும் என்பதும், இம்மாதங்களில் இரவில் நிலாக் காலம் போக மற்ற வேளைகளிலெல்லாம் வானம் வெள்ளி பூத்திருக்கும் என்பதும் யாரும் அறிந்த விஷயம். இப்பொழுது எப்படியோ அப்படியே இன்றைக்கு ஈராயிரத்தைஞ்னூறு வருஷங்களுக்கு முன்னும் இருந்தது என்பது நிச்சயம். இன்று இராத்திரி நாம் நம் கண்ணாற் காணும் வெள்ளிகளையே அக்காலத்திலிருந்த நம் முன்னோரும் தங்கள் கண்ணாற் கண்டிருப்பார்கள் என்று சொல்ல வேண்டுமா?

நாம் இப்போது காணும் வெள்ளிகள் எல்லாம் அக்காலத்திலும் காணப்பட்டன வாகையால், அவைகளுக்கு நம் முன்னோராகிய தமிழர் என்ன பெயரிட்டார்கள் என நாம் அறிய விரும்புவது இயற்கையே. ஆயினும், இவ் விஷயத்தில் நமக்கு உதவி எங்கிருந்து வரும்? வடக்கேயிருந்த ஆரியர் தமிழகத்துக்கு வந்த பொழுது, தாங்கள் ஆரியாவர்த்தத்தில் இவ்வெள்ளிகளுக்கு வழங்கின சம்ஸ்கிருதப் பெயர்களையே இங்கும் வழங்கினார்கள். அன்று முதல் நாமும் அவர்களிடத்தில் அப்பெயர்களைக் கற்று அவர்கள் சொல்கிறபடியே, அசுவினி பரணி கிருத்திகை ......என்று சொல்லி வருகிறோம். ஆரியர் தெற்கே வருமுன் இவைகளுக்குப் பண்டைத் தமிழர் இட்ட பெயர்





கள் என்ன? கவனியுங்கள். அசுவினிக்குப்பரி, மிருக சீரிடத்துக்கு மான் தலை, ஹஸ்தத்துக்குக் கைம்மீன் என்றால், இவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், 'அசுவினி' என்றதின் மொழி பெயர்ப்பல்லவோ 'பரி' என்பது? 'மிருக சீரிடம்' என்ற சம்ஸ்கிருதப் பெயருக்குத் தமிழ் அல்லவோ 'மான் தலை'? அது போலவே 'ஹஸ்தம்' என்றால் 'கை'. இவை சம்ஸ்கிருதப் பெயர்களின் மொழிபெயர்ப்பே. ஆரியர் தெற்கே வருமுன் நம் முன்னோரான தமிழர், இந்த வெள்ளிகளுக்கு இட்ட பெயர்கள் என்ன?

அந்தப் பெயர்களில் அனேகம் நான் அறியேன். ஒருவேளை அவைகள் பழைய தமிழ் நூல்களில் அகப்படலாம். பழைய தமிழ் நூற் பயிற்சியுடையோர் இவ்விஷயத்தை ஆராய்ந்து சொல்வார்களானால் பேருபகாரமாயிருக்கும். நூல்களிற் காணப்படா விடினும், உலக வழக்கிலே இவைகளுக்குப் பெயர்கள் இருக்கலாம். சம்ஸ்கிருதம் சிறிதுந் தெரியாத கிராம வாசிகள் இந்த வெள்ளிகளுக்கு என்ன பெயர்கள் வழங்குகிறார்கள்? கிராம வாசிகளான தமிழரோடு மிகப் பழக்கமுள்ளவர்களே இதைச் சொல்ல வேண்டும். நான் அறிந்த பெயர்களை இங்கே சொல்கிறேன்.

அசுவினி—இரலை [= ஊது கொம்பு அல்லது மான்].
பரணி—அடுப்பு [ஃ]
கிருத்திகை—அளகு (=பெண் பறவை)
உரோகிணி—ஊற்றால் [=மீன்பறி]
மிருக சீரிடம்—நரிப்புறம்
திருவாதிரை—செங்கை
புனர்பூசம்—கழை [=கரும்பு]
பூசம்—வண்டு
ஆயிலியம்—எள்ளிளங்காய்
மகம்—வேட்டுவன்
பூரம்—எலி
உத்தரம்—?
அத்தம்—காமரம்
சித்திரை—பயறு
சுவாதி—மரக்கால்
விசாகம்—சுளகு [=முறம்]
அனுடம்— முடப்பனை
கேட்டை—வல்லாரை
மூலம்—கொக்கு
{ பூராடம்
உத்தராடம்
இரண்டுஞ் சேர்ந்து } குளம்
திருவோணம்—உலக்கை
அவிட்டம்—காகம்
சதயம்—செக்கு
{ பூரட்டாதி
உத்தரட்டாதி } —கொளுங்கால்
இரேவதி—தொழு.
அருந்ததி—வடமீன்
சூரியன்—ஞாயிறு
சந்திரன்—திங்கள்
அருக்கன்—செவ்வாய்
புதன்— பச்சை.
பிருகஸ்பதி—பொன்
சுக்கிரன்—வெள்ளி.
சனி—காரி.

இன்னும் அனேக வெள்ளிகள் பார்க்கிறோமே. இவைகளுக்குப் பண்டைத் தமிழர் இட்ட பெயர்கள் என்ன? தெரிந்தவர்கள் சொல்லும்படி வேண்டுகிறேன்.

## விகட விநோத விதூஷக

# வினா விடை

(173-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**வீட்டுக்கனவான்**—நாய் குலைக்கிறதென்று பயப்படவேண்டாம், சும்மா வாருங்கள். 'குலை நாய் கடியாது' என்று பழமொழி கேட்டதில்லையா?

**விருந்தாடி**—நான் கேட்டிருக்கிறேன், நாய் கேட்டிருக்குமோ என்னவோ என்று தான் பயம்.

**உபாத்தியாயர்**—குழாய்த் தண்ணீருக்கும் ஐஸ் (பனி) கட்டிக்கும் வித்தியாசம் என்ன?

**மாணவன்**—அது சும்மா; இது பவுண்டு இரண்டணா.

**தாய்**—குழந்தாய்! நீ துஷ்டத்தனம் பண்ணும் போதெல்லாம், என் மனம் நொந்து, என் தலை மயிரில் ஒவ்வொன்று நரைத்துப் போகும்.

**குழந்தை**—அம்மா! அப்படியானால், நீ எவ்வளவு பெரிய துஷ்டையாய் இருந்தாயோ: பாட்டி தலை மயிரைப்பார், ஒரே வெள்ளை!

**உபாத்தியாயர்**—பிள்ளையாருக்கு என் விக்கினேசுரர் என்று பெயர் வந்தது?

**மாணவன்**—மோதகங்களை விழுங்கிவிட்டு விக்கு விக்கென விக்கினார்; அதனால் தான்.

**கிழவன்**—'தோஷம்' என்பதற்கும் 'ஸந்தோஷம்' என்பதற்கும் வித்தியாசம் என்ன?

**வாலிபமனைவி**—நான் உங்களை விஷமிட்டுக் கொன்றால், 'தோஷம்'; நீங்களாகக் காலறு வந்து செத்தால், 'ஸந்தோஷம்'.

**உபாத்தியாயர்**—படர்க்கைப் பெயர்களில் இரண்டு சொல்.

**மாணவன்**—'அவன்', 'அவள்.'

**உபாத்தியாயர்**—அவற்றின் உபயோகம் எப்படி?

**மாணவன்**—புருஷன் பெண்டாட்டிகளாக உபயோகம்.

உத்தர துருவத்திலிருந்த

# பூர்வீக ஆரியர்கள்

(ஸ்ரீ. காவியகண்ட கணபதி சாஸ்திரிகளின் பிரசங்கச் சுருக்கம்)

பண்டிதர் வி. சுப்பிரமணிய ஐயர்,
திருவண்ணாமலை.

இந்தியாவில் வந்து ஆதியில் குடியேறின ஆரியர்களின் பூர்வீக வாஸஸ்தலம் உத்தர துருவ மண்டலம் என்பது ருக்வேத மந்திரங்களின் ஆராய்ச்சியினால் அறியக்கிடக்கின்றது. மந்திர ஞானிகளாய் அக்காலத்தில் துருவமண்டலத்திலிருந்த மகரிஷிகள் வேத ஆராய்ச்சி செய்ததிலிருந்து அவர்கள் நல்ல வஸதியான பூமிகளை நோக்கிக் கொண்டு தென் திக்குகளிலுள்ள நாடுகளுக்குப் பிரயாணப் பட்டுக், கடைசியில் இந்தியாவில் வந்து குடி. யேறினார்களென்று தெரிகிறது. ருக் வேத காலத்து ஆர்யர்களைப் பற்றி லோக மான்ய பால கங்காதர திலகர் செவ்வனே ஆராய்ச்சி செய்த விஷயங்களைப் புஸ்தக ரூபமாய் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டிருக்கிறாராயினும், இப்பொழுது புஸ்தகமே அகப்படுவது அரிதா யிருக்கிறது. ஆரியர்கள் உத்தர துருவ மண்டலத்தில் சுமார் ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்னால் வஸித்திருந்தார்களென்று ஆதாரங் காட்டி அவர் எழுதி யிருக்கிறதாகத் தெரிகிறது. ருக்வேத மந்திரங்களில், மகரிஷிகள் செய்த ஸ்தோத்திரங்களிலிருந்து, பூர்வீக ஆரியர்கள் எந்த ஸ்தலத்தில் முன்னம் வஸித்திருந்தார் என்பதை ஆராய்ச்சி செய்வோம். உத்தர துருவ மண்டலம் என்னும் பிரதேசம், பனிக்கண்டமாய் வருஷ வாரியில் சுமார் நான்கு மாஸங்கள் சூரிய கிரணமே தெரியாதிருக்கும் ஸ்தலமாகும். இந்த ஸ்தல நிர்ணயஞ் செய்வதற்காக, மஹரிஷிகளின் வேத வாக்கியங்களை ஆராய்ந்த மட்டில், இந்த மஹரிஷிகளை உத்தர துருவத்

தில் வஸித்தவர்களென்றும், அந்த ஸ்தலம் விட்டு ஸஞ்சாரம் செய்து வந்தவர்களென்றும், அதன்பின் இந்தியா வந்து குடியேறினவர்களென்றும், மூன்று விதமாக மஹரிஷிகளைப் பாகுபாடு செய்து கொண்டால், நாமெடுத்துக் கொண்ட ஆராய்ச்சிக்கு அநுகூலமாக விருக்கும். உத்தர துருவத்தில், சூர்ய ரச்மியே யில்லாமல், ஒருமாத காலப் பொழுதிலே எப்போதும் உஷத் காலம் போன்ற ஒளிகளை திருப்பித் திருப்பி வந்துகொண்டிருக்கும். இப்படி இடைவிடாது அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கும் உஷஸ்களை மகரிஷிகள் வேதங்களினால் வர்ணித்து ஸ்தோத்திரம் பண்ணுவதிலிருந்து, அந்தத் துருவ மண்டலத்தில் இந்த ஒருமாத காலத்தின் தன்மை இப்படிப் பட்டதென விளங்குகிறது. இந்த உஷஸ்களைப் பற்றிய வர்ணனை, யஜுர் வேதத்தில் எங்கும் காணப்படவில்லை யாகையால், யஜுர் வேத மந்திரங்கள் பிற்பட்டனவென்றும், ருக்வேதம் சுமார் ஆறுயிரம் வருஷங்களுக்கு முந்தி உத்தரத் துருவ மண்டலத்தில் மந்திரத் த்ரஷ்டாக்களான மகரிஷிகளால் கண்டு பிடிக்கப்பட்டதென்றும், அறியலாகின்றது. உத்தர துருவ மண்டலத்தி லிருக்கும் போது நான்கு மாஸ காலம் இராக் காலமாகவே இருக்குமாதலால், அப்போது அவர்கள் யாதொரு தேவ காரியமும் செய்வதற்குச் சாதகமா யிருந்ததில்லை. அங்கே யிருந்த மந்த்ர த்ரஷ்டாவான மஹரிஷி, இவ்விரு இராத்திரி பகல் காலங்களை, கிருஷ்ணம் சுக்லம் என முறையே பெயர்கள் கொடுத் தழைக்கும்போது, ஒரு காலம் இருட்டுக் காலம் மற்றொன்று பகற் காலம் என்பது தெளிவா யிருக்கின்றது. துருவ மண்டலத்தில் பூர்வகாலத்தி லிருந்த மகரிஷிகளின் ருக்வேத மந்திர மொன்றில், எங்களுடைய பிரயாணம் நல்லதாக விருக்கட்டும், எங்கே சூரியன் உதித்து நல்ல ஸஸ்யங்களையும் ஆகாரப் பொருள்களையும் உண்டு பண்ணுகிறதோ அந்தப் பிரதேசத்திற்கு எங்களை அழைத்துப் போகட்டும் என்று கேட்பதிலிருந்து, உத்தர துருவ மண்டலத்தினை விட்டு, மகரிஷிகள், சிறந்த இடங்களை நாடிப் பிரயாணமானார் என்பதும், பிரயாண நிலைமையிலிருந்த மகரிஷியின் வாக்கு ஈதாகும் என்பதும் அறியலாம். இப்படிப் பட்ட துருவ மண்டத்திலிருந்து புறப்பட்ட மஹரிஷிகள், ஹிரண்யஸ்தூபன் என்ற ஸௌபதியின் ஆதிக்கத்தில் இடம்விட்டு இடம் பெயர்ந்து போயினர் என்று, மற்றொரு ருக்வேத மந்திரம் சொல்லுகிறது. இவர்கள் இப்படிப்



போகும்போது உள்ள தேசங்களில் எதிர்ப்பட்ட எதிரிகளுடன் சண்டை செய்ய நேர்ந்ததென்றும், மற்றொரு ருக்வேத மந்திரம் கூறுகிறது. இவர்கள் பாரஸீக தேசம் செல்லுகையில் இவர்களுக்கும் பாரஸீகருக்கும் யுத்தம் நடந்த செய்தியும், மந்திரங்களில் காணப் படுகின்றன. பின்னர் இவர்கள் இந்தியா தேசத்தில் வந்து சேர்ந்தார்களாயினும், வேத மந்திரங்களில் ஹிமாலய பர்வதத்தைப் பற்றிய வர்ணனையையாகிலும், கைலாஸ சிகரத்தைப் பற்றிய வர்ணனையையாகிலும் காணவில்லை. ஆனால் மகம்மேரு கிரியின் முடியினைப் பற்றியும், அதன் மேலுள்ள நீண்ட சக்கரத்தில் வட்டவடிவமாக ஓடிக்கொண்டிருக்கும் சூரிய சந்திர நக்ஷத்திரங்களின் கதிகளைப் பற்றியும் விஷயங்கள் காணப்படுவதினின்றும், இன்னும் ஆரியர்கள் செய்யும் அநேக மஹா சங்கல்பங்களிலெல்லாம் மேருவின் தக்ஷிண பார்சுவத்தில் என்று சொல்லிக் கொள்ளுவதினின்றும், முன்னம் பரம்பரையாய்த் தாங்கள் வாழ்ந்து வந்த அந்தப் பூர்வீக ஸ்தலத்தின்மேல் நன்றியறிதல் பாராட்டும் குணமுடையவராயும், தாங்கள் பூர்வமிருந்த புண்ணிய ஸ்தல ஞாபகமுடையவராயும் இருந்து, அவ்வாறு கூறுகிறார்கள் அவர்கள் என்று, கொள்ளவேண்டி யிருக்கிறது. இன்னும் இந்தக் காலத்தில் சூரியன் வடக்கே போகும் காலமாகிய உத்தராயனத்திற்குத் தேவகாலமென்றும், தெற்கே செல்லும் தக்ஷிணாயனத்திற்கு அசுரகால மென்றும் சொல்லி, முன்னயனத்தில் தேவகாரியம் செய்யத்தக்க காலமென்று சொல்லிச் சுப காரியங்களை இந்தியா வந்த பின்னிட்டும் பரம்பரை பாத்தியமான சம்பிரதாய வழக்கமாய்க் கொள்வதிலிருந்தும், முன்னே உத்தர துருவ மண்டலத்தில் வழக்கமாயிருந்த உஷஸ்களை வியாபித்திருக்கும் மாகாணத்தில் யாதொரு ஸத்கருமத்தையும் செய்யாமல் விடுத்திருந்ததையே மறவாமல் இங்கும் அதே வழக்கத்தை மேற் கொண்டதாய் அறிவதிலிருந்தும், ஆரியர்கள் உத்தரத் துருவ வாஸிகளாய் ஆறுயிரம் வருஷங்களுக்கு முன்ன ரிருந்தன ரென்பது தெளிவாய்த் தெரிய வருகின்றது. ஆரியர்கள் தங்களுடைய புண்ணிய க்ஷேத்திரங்களைப் பற்றிப் பேசும்போதும், மகாப் பிரஸ்தானமாக ஸ்ரீ ராமாதிகள் இராமாயண காலத்திலும், பாண்டவாதிகள் ஸ்ரீ பாரத காலத்திலும் போகும் திசையை வடக்காக வைத்துக்கொண்டு போனதிலிருந்தும், ஆரியர்கள் தாம் வஸித்திருந்து விட்டுவிட்டு வந்த புண்ணிய க்ஷேத்திரத்

தில் இப்போதும் வைத்திருக்கும் அபிமானமும் பூஜ்யதா பக்தியும் இப்படிப் பட்டதெனத் தெரிகிறது. அந்தக் காலத்திலிருந்து பரம்பரையாய் வந்த ஜோதீஸ் தந்திர நிபுணர்கள் மகம்மேருகிரியை மத்திய ஸ்தானமாக வைத்துக்கொண்டு கணனம் செய்ததிலிருந்தும், இந்த ஸ்தானத்திற்கு வட துருவ மண்டலமும் ஏறக்குறைய ஒன்றுக்கொன்று ஸமீபமான ஸ்தலங்களே யெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப் பட்ட துருவ மண்டலத்திற்கே மஹா பாரத காலத்தில் அர்ஜுனன் போய் வந்து, அங்கு நல்ல மஹா தீர்த்த மொன்றினைத் தரிசித்து வந்தான் என்றும் சொல்லப் பட்டதிலிருந்தும், ஆரியர்களுக்குப் பூர்வீக ஸ்தலமாய் உத்தர துருவ மண்டல மிருந்ததென்று சொல்லுவது மிகப் பொருத்த முடைத்தாகும்.

---


## கதாரத்னாகரம்.

ஓர் இனிமையான மாதாந்தரப் பத்திரிகை.

1920ஸு ஜூன்மீ முதற்கொண்டு நடைபெற்று வருகின்றது. இப்பொழுது 6-வது வால்யம் நடந்து கொண்டு வருகின்றது. யாவரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் நவ நவமான நாவல்களும், ரசிகமான கதைகளும், விநோத விசித்ரங்களும், யுக்தி தரும் துக்கடாக் கதைகளும், எழுதப்பட்டு வருகின்றது.

உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

சந்தா விகிதம்.

வருட சந்தா ரூ. 2. வெளி நாடுகளுக்கு ரூ. 3-8

மாதிரி காப்பி வேண்டுவோர்

அரையணா ஸ்டாம்பு அனுப்பவும்.

மானேஜர்,

**“சுதேசமித்திரன்” லிமிடெட்,**

**சென்னை.**


## சர்வ சமய சமரச தர்சநி

(234-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

19. “உண்மை யுரை; உண்மையி னின்றும் விலகா திருத்தல் வேண்டும்”—உபநிஷத்து.

20. “உண்மை மொழிதலும், அன்பொடு மொழிதலும், உண்மையாயினும் அன்பொடின்றி மொழியா தொழிதலும், கடன்”—மனுஸ்மிருதி.

21. “உண்மையாயினும் படாடோபமாக மொழியாதே; நீ அறிந்த உண்மையை வெளியிடாதும் இராதே”—குரான்.

22. “தான் கெடினும் தக்கார்கே டெண்ணற்க; தன் [னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க—வான் [கவிந்த
வையகம் எல்லாம் பெறினும் உரையற்கப்
பொய்யோ டிடைமிடைந்த சொல்”—நாலடியார்.

23. “நம்மில் ஒவ்வொருவனும் பிறருடன் பொய்பேசுவதை விடுத்து மெய்யே பேசுதல் கடமை”—பைபிள்.

24. “உண்மையின் மற்றதோர் தருமமொன் றில்லை;
உண்மையின் மற்றதோர் தவமொன் றில்லை;
உண்மையின் மற்றதோர் தானமொன் றில்லை;
உண்மையின் மற்றதோர் சுகமும் ஒன்றில்லை.”
—மகாபாரதம்.

25. “யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத் [தொன்றும்
வாய்மையின் நல்ல பிற”—திருக்குறள்.

26. “உண்மை கேடுவிளைப்பதாகத் தோன்றினும், பெரியார் எவ்விடத்தும் உண்மையையே உரைப்பர்; பொய்ம்மொழி அதிகம் நன்மை பயப்பதாகத் தோன்றினும் அம்மொழி தவிர்த்து நிற்பர்”—பாரசீகமதம்.

# இந்திய சர்வகலாசாலைகளின் கூட்டம்

ஸ்ரீ. பி. எ. சுப்பிரமணிய ஐயர், B.A., L.T., சென்னை.

மே மாதம் 19-ம் தேதி யன்று ஸிம்லாவில் இக் கான்பரன்ஸ் கூடிற்று. தற்காலம் நம் தேசத்தில் அமைந்துள்ள 15 ஸர்வகலாசாலைகளினின்றும் பிரதிநிதிகளாய் அனுப்பப்பட்ட 52 பேர்கள் அங்கு வந்திருந்தனர். வைஸிராய் அவர்கள் இக் கான்பரன்ஸைத் திறந்து வைத்து நீண்டதோர் உபந்நியாஸமும் செய்தனர். யூனிவர்ஸிடி பிரதிநிதிகளைத் தாம் வரவழைத்த காரணத்தையும், உயர்தரக் கல்வி விஷயத்தில் தமக்கும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் உள்ள சிரத்தையையும் குறிப்பிட்டு, ஸர்வகலா சாலைகளின் கடமையைப் பற்றியும் இனிச் செய்ய வேண்டி யிருக்கும் மேம்பாடுகளை உணர்த்தியும் விரிவாய்ப் பேசினார். உயர்தரக் கலாசாலைகளிற் பயின்று பட்டப் பரீட்சைகளில் தேறுபவர்கள் மூலமாய் ஜன சமூகத்தில் அறிவும் ஞானமும் நல்லுணர்ச்சியும் பரவச் செய்து, ஜனங்களது மனதை விசாலப் படுத்தி, ஊன்றிப் பார்த்து ஒவ்வொரு விஷயத்திலும் பூர்வபட்ச சமாதானங்களை செவ்வனே சீர் தூக்கிப்பார்த்துச், சரியான ஸித்தாந்தம் செய்யும் சக்தியை அவர்கள் பெறச் செய்வதே ஸர்வகலா சாலைகளது கடமை யெனக் கூறினார். நம் தேசச் சிறுவர்கள் உயர்தரக் கல்விக் கென்று பிற தேசங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லா வண்ணம், நம் ஸர்வகலா சாலைகளில் எல்லாவித கல்வித் துறைகளிலும் பயிலுவதற்குரிய ஸாதனங்களையும் அமைக்க வேண்டு மென்றும், உயர்தர வித்தியார்த்திகள் தாமே பூதத்துவம் முதலிய சாஸ்திரங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு அநுகூலங்களை ஏற்படுத்தல் வேண்டு மெனவும், சுரங்கங்களைப் பரிசீலனம் செய்து, அவைகளிலிருந்து உலோகங்களைத் தனிப்படுத்தி எடுப்பது சம்பந்தமான சாஸ்திரத்தைப் பயிலுவதற்காகப் புதிய கலாசாலைகளை ஸ்தாபிக்க வேண்டு மென்றும், வைத்திய சாஸ்திரம் கற்பிக்கப்படும் கல்லூரிகளின் நிலைமையை இன்னும் ஓங்கச் செய்யவேண்டு மெனவும், பெண் கல்வி விஷயமாய் பலவிதமான சீர்திருத்தங்களை அமைக்க வேண்டு மெனவும் பேசி முடித்தார். பிறகு முக்கிய விஷயங்களைத் தனித் தனியே ஆலோசிப்பதற்கெனச் சில கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. அவைகள் தத்தம் அபிப்பிராயங்களைப் பிரேரபணைகள் ரூபமாய் எழுதிக் கொண்ட பின்னர், கான்பரன்ஸ் மறுபடியும் கூடிற்று. அச் சமயம் கனம். பி. நரஸிம்மேசுவர சர்மா அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். பின்வரும் முக்கிய தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பெற்றன :

I. தற்காலம் சர்வகலாசாலைகள் தமக்குள் நெருங்கிய ஸம்மந்தம் யாது மின்றியும் இந்தியா கவரன்மெண்டாரது மேம்பார்வை விசேஷமா யின்றியும் தனித்தனி மாகாண கவரன்மெண்டாரது அமுலுக்குட்பட்டே நடைபெறு மாதலின், ஒரு சர்வகலா சாலையில் நடப்பது பிற சர்வகலாசாலைகளுக்கு நன்றாய்த் தெரியாமலும், அச் சர்வகலாசாலைகள் யாவைக்கும் பொதுவா யுள்ள விஷயங்கள் நன்கு கவனிக்கப்படாமலும் இருப்பது பற்றி, இக் குறையை நீக்கும் பொருட்டு, ஓர் மத்திய ஸபை அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு சர்வகலாசாலையி னின்றும் ஒவ்வோர் பிரதிநிதி அச் சபையின் அங்கத்தினராதல் வேண்டும். வருஷத்துக் கொரு முறையேனும் கூடி, சர்வகலா சாலைகட்குப் பொதுவான விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்தல் வேண்டும். அவ் விஷயங்களாவன ; (1) அவ் வப்பொழுது ஒவ்வோர் சர்வகலா சாலையார் இயற்றும் மேம்பாடுகளை மற்றக் கலாசாலையர்கட்குத் தெரிவித்தல், (2) பல கலாசாலைகளால் ஏற்படுத்தப்பட்ட பரிட்சைகளுக்குள் அதிக ஏற்றத் தாழ்வு இல்லாது பார்த்துக் கொள்ளல், (3) பிற நாடுகளிலுள்ள சர்வகலாசாலைகளது அதிகாரிகளுக்குத் தகுந்த வண்ணம் தெரிவித்து, நம் தேசத்துப் பட்டதாரிகள் பிற நாடுகளுக்குச் சென்றால் அவர்களது பட்டத்துக் குரிய செலுகைகள் அவர்கட்குக் கிடைக்கு மாறு செய்தல், (4) தற்சமயம் கனடா நாட்டில் நடைபெற்று வரும் அகிலராஷ்ட்ர யூனிவர்ஸிடி கான்பரன்ஸ் போன்ற கான்பரன்ஸுக்குத் தகுந்த பிரதிநிதிகளை நம் தேசத்தினின்று தேர்ந்தெடுத்து அனுப்புதல், (5) நம் தேசத்துச் சர்வகலாசாலைகட்குப் போதகர்கள் வேண்டுவதா யிருந்தால் அப்பொழுது தக்க போதகர்கள் கிடைக்கும் வண்ணம் வேண்டிய முயற்சிகள் செய்தல், முதலியனவாம்.

II. பூதத்துவம், ரசாயனம் முதலிய சாஸ்திர ஸம்மந்தமான ஆராய்ச்சிகள் அங்கங்கே சில சர்வகலாசாலைகளில் நடைபெற்று வருகின்றன. இவ் வாராய்ச்சிகள் யாவற்றையும் ஒழுங்கு படுத்தி மேன்மேலும் விருத்தி செய்விப்பதற்கென ஓர் ஸபை அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டது. அச் சபையில் இந்தியா கவர்ன்மெண்டின் கீழுள்ள பல சாஸ்திர டிபார்ட்மெண்டுகளுக்குத்

(Scientific Departments) தலைவர்களா யிருப்பவர்களும், பிரதி சர்வகலாசாலை சங்கத்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், பெங்களூரிலுள்ள சாஸ்திர பரிசீலன காலேஜ் போதகர்களுள் ஒருவரும் அங்கத்தினராய் இருத்தல் வேண்டும். இச் சபை ஏற்படின், ஆராய்ச்சி செய்யும் நிபுணர்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் நெருங்கிய ஸம்மந்தம் ஏற்பட்டு, ஆராய்ச்சிகள் செவ்வனே நடை பெறுவதற்கு வேண்டிய ஸாதனங்கள் விருத்தி பெறும் என்பது திண்ணம்.

III. நம் தேசத்திருந்து இங்கிலாந்து தேசத்துக்கு உயர்தரப் படிப்புக்காகச் செல்லும் சிறுவர்களுக்கு அத் தேசத்துள்ள சர்வகலாசாலைகளில் நடைபெற்று வரும் போதனை விஷயங்கள், அங்குள்ள போஜன வஸதிகள், மற்றும் கல்வி ஸம்பந்தமான வேறு விஷயங்கள், இவைகளைக் குறித்துத் தக்க ஆலோசனை அளிப்பதற்கென்றே, ஒவ்வொரு மாகாண கவர்ன்மெண்டாரும் தத்தம் பிரதான நகரத்தில் ஓர் ஸபை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவ்வித ஸபை யொன்று நம் மதராஸ் நகரில் உளது. இச் சபையார் மூலமாகவே நம் மாகாணச் சிறுவர்கள் இங்கிலாந்து தேசத்துள்ள சர்வகலாசாலைகளில் [illegible] படித்து வருகின்றனர். உதாரணமாக, ஓர் சிறுவன் நம் மாகாண கமிட்டியாருக்கு [illegible] செய்து கொண்டால், அவர்கள் அவனது மனுவை லண்டன் நகரிலுள்ள இந்தியன் ஹை கமிஷனர் என்ற அதிகாரிக்கு அனுப்புவர். அவ்வதிகாரி பல சர்வகலாசாலைகளிலும் விசாரணை செய்து நம் சிறுவனுக்குத் தேவையான வித்யா ஸௌகரியங்களைத் தேடித் தருவர். ஆயினும் மாகாண ஸபைகளாலும், லண்டனிலுள்ள ஹை கமிஷனராலும், அதிக ஸௌகரியங்கள் கிடைப்பதில்லை யென்றும், இச் சபைகளும் லண்டன் அதிகாரியும் இந்திய கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டவ ராதலின், அவர்கள் இங்கிருந்து செல்லும் சிறுவர்களை அனாவசியமான நிபந்தனைகளுக்கு உட்படும்படி செய்கிறார்களென்றும் நம்மவர்கள் முறையிடுவதுண்டு. இம்முறை யீடு ஒருவாறு பொருந்து மென்று காண்பரன்ஸார் அபிப்பிராயப் பட்டு, மாகாணங்களிலுள்ள ஸபைகள் மாகாண கவர்ன்மெண்டாரா லல்லது, பிரதி சர்வகலாசாலை யவர்களாலேயே நியமிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தனர், லண்டன் அதிகாரி யல்லாது வேறு அதிகாரியை ஏற்படுத்தும் விஷயத்தைப் பிறகு ஆலோசிக்கலா மெனவும் முடிவு செய்தனர்.

IV. இந்தியர்கள் ராணுவ வித்தையைப் பயிலுவதற்கென டேராடூன் என்னு மிடத்தில் ப்ரின்ஸ் அப் வேல்ஸ் காலேஜ் என்றோர் கலாசாலையை இந்திய கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியுள்ளார். அதில் பிள்ளைகளுக்கு கவாத்துப் பழகுதல் முதலிய ராணுவப் பயிற்சி மாத்திரமின்றி, ஸாதாரண ஹைஸ்கூல்களிலும், காலேஜுகளிலும் போல ஆங்கில பாஷை, கணக்கு, சரித்திரம் முதலிய பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன. ஆதலின் அக்காலேஜில் பயின்று கடைசி வருஷத்தில் அங்கே நடக்கும் பரீக்ஷையில் தேறுபவரை, இந்திய சர்வகலாசாலை யவர்களால் நடத்தப்படும் இண்டர் மீடியேட் பரீக்ஷையில் தேறுபவர்களுக்குச் சமத்துவமாய் இந்தியாவில் யாவரும் அங்கீகரிக்க வேண்டு மெனத் தீர்மானமானது.



இந்திய சர்வகலா சாலைக்குத் தேவையான போதகர்களை நம் தேசத்திருந்தோ, பிற தேசத்திருந்தோ எவ்வாறு தேர்ந்தெடுப்பது, அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கட்குச் சம்பளம் உபகாரச் சம்பளம் முதலிய ஸௌகரியங்களை எவ்வாறு அமைத்துத் தருவது, ஒரு ஸர்வகலாசாலையி லுள்ள போதகர் மற்றொரு கலாசாலைக்குச் செல்வதா யிருந்தால் எந்தெந்த நிபந்தனைகள் அனுஷ்டிக்கப் பட வேண்டும், சர்வகலாசாலைகளில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கு ராணுவப் பயிற்சி விஷயமாய் இன்னும் என்ன ஸௌகரியங்களை நம் இந்திய கவர்ன்மெண்டார்கள் அமைக்க வேண்டும், உயர்ந்த சாஸ்திர நிபுணர்களைப் பிற தேசத்திருந்து அவ் வப்போது நம் தேசத்துக்கு வரச் செய்து, சுமார் 4,5 மாதங்களுக்குள் நம் இந்திய சர்வகலா சாலைகள் ஒவ் வொன்றிலும் சில உபந்நியாஸங்களைச் செய்யுமாறு தகுந்த ஏற்பாடுகளை எவ்விதம் இயற்றல் வேண்டும் என்ற விஷயங்களும், இது போன்ற வேறு விஷயங்களும், விவாதிக்கப் பட்டு யுக்தமான தீர்மானங்களும் செய்யப்பட்டன.

## பத்திராசிரியர் குறிப்புக்கள்

(266-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காங்கிரஸ் பிரசாரம்—கட்சி பேத மின்றி, ஸர்க்கார் உத்தியோகஸ்தர் ஒத்துழையாதார் என்னும் பேதமுமே யின்றி, நாட்டின் முன்னேற்றத்தை நாடும் எல்லோருமே சேர்ந்து ஒத்துழைக்கக் கூடிய மூன்று துறைகளை, மகாத்மா காந்தி குறிப்பிட்டிருக்கிறார். அவையாவன (1) கதர் பிரசாரம், (2) ஹிந்துக்களுக்கும் மகமதியருக்கு முள்ள மனஸ்தாபங்களை நீக்கி, இருதிறத்தாரையும் ஒன்று படுத்துதல் (3) தீண்டாமை யென்னும் தீங்கை ஒழித்து, ஹிந்துக்களுக்குள் ஒற்றுமையை உண்டு பண்ணு

தல். இவற்றில் கதர் பிரசாரத்தை நீக்கி, மற்றிரண்டையும் துரைத்தனத்தாருமே நன்றென ஒப்புக் கொள்கின்றனர்; கதர் பிரசாரத்தையும் அவர்கள் முற்றிலும் பழிப்பதில்லை; எனவே, கதர் பிரசாரத்தைச் சமரசப் படுத்தி, அதன் நன்மையை ஸர்க்காரும் ஒத்துக் கொண்டு தடை செய்யாம லிருக்கும்படிச் செய்தல் அசாத்திய மன்று. அது நாட்டின் வறுமையைப் பெரும்பாலும் நீக்கிவிடு மென்பது தெளிவு: மற்ற இரண்டும் பலிதமாயின், இந்திய சனசமூகம் என்னும் ஐக்கியமுண்டாகி, இப்பொழுதுள்ள சண்டை சச்சரவுக ளெல்லாம் ஒழிந்து, ஜனநாயகத்துக்கு இன்றியமையாத ஒற்றுமையும் ஒத்துழைப்பும் நாடெங்கும் ஏற்பட்டுவிடும். அப்பொழுது சுயராஜ்யம் எளிதாகிவிடும். இம்மூன்று துறைகளிலும் எல்லாக் கட்சியினரும் ஏகோபித்து உழைப்பதாயின், ஒத்துழையாமை இயக்கத்தை ஓராண்டுக்கு நிறுத்தி வைப்பதாகவும் மகாத்மா சொல்லுகிறார். இத்துறைகளில், சட்ட சபைகளுக் குள்ளிருந்தும் வெளியே இருந்தும் உழைக்கலாகும். எனவே, மிதவாதிகள், சுய ராஜ்யக் கட்சியினர், காந்தி வகுப்பார் முதலிய அனைவருமே ஓராண் டளவேனும் ஒருமித்துக் கூடி, ஏன் இவ்வண்ணம் உழைத்துப் பார்க்கலாகாது? உறுதியான பயன்களையும் ஒற்றுமையையும் விளைக்கவல்ல துறைகளைவிட்டு, கட்சி பேத மனஸ்தாபங்களையும் சந்தேக ஆஸ்பதமான நன்மைகளையுமே தரக்கூடிய துறைகளில் ஓயாது சண்டையிட்டுழல்வது மதியீனமன்றோ? சுயராஜ்ய கட்சியினரில் சிலர் மனப் போக்கைப் பார்த்தால், மீண்டும் சட்ட சபைகளிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் அதிகமான ஸ்தானங்களைத் தாம் பெறுவதிலேயே மும்முரமா யிருக்கின்றனரே யன்றி, நாட்டுக்கு நிலைத்த நன்மையை அளித்து, உண்மையான சுயராஜ்யத்தை விரைவில் தரவல்ல சமரசமான இம் மூன்று பொதுத் துறைகளிலும் உழைப்பதில் விருப்பமும் ஊக்கமும் உள்ளவர்களாகக் காணவில்லையே! மிதவாதிகளோ, சித்தன் போக்குச் சிவன் போக்கென்று, பிறருடன் சேர்ந்துழைக்க முயலாது நடக்கின்றனர். என்று தான் இந்நாட்டுக்கு விடிவுகாலம் ஏற்படுமோ!

தமாஷா வரி (Entertainments Tax Bill)—இந்த மசோதா நிறைவேறினால் தக்[illegible]ம் பல்வித நன்மைகளும் விளையலாகு[illegible] தமாஷாக்களில் பல, நன்மை[illegible] இன்மையே இ[illegible]அது

M24, N24PM
N24.1.4